SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:3, Issue:7, Pages:56
FEBRUARY-2024, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

பிப்ரவரி 2024,

விலை ரூ.20/-



ஸ்ரீநிவாசமங்காபுரம்
ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
29-02-2024 முதல் 08-03-2024 வரை

23–12–2023 அன்று திருமலையில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு நடைபெற்ற வைகுண்ட வாயில் வழியாக ஸ்வாமியைத் தரிசித்த திரளான பக்தர்கள் கூட்டம். அதுபோது உபயதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெற்ற தங்கத்திருத்தேர் நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்களுடன் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள் மற்றும் தி.தி.தே. இணைச்செயலாட்சித் தலைவர் (எச்.&இ.) திருமதி எஸ். பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள்











*ஏவமுக்த்வா ஹ்ருஷீகேசம்*
*கு$_3$டா$_3$கேச: பரந்தப|*
*ந யோத்ஸ்ய இதி கோ$_3$விந்த$_3$*
*முக்த்வா தூஷ்ணீம் ப$_3$பூ$_4$வ ஹ||*

**சஞ்சயன் கூறுகிறார், அரசே! உறக்கத்தை வென்ற அர்ஜுனன் அந்தர்யாமியான ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிடம் இவ்வாறு கூறிவிட்டுப் பின் ஸ்ரீகோவிந்தனிடம் 'போர் புரிய மாட்டேன்' என்று தெளிவாகக் கூறி மௌனமாகிவிட்டார்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2-9*

*சுற்றமெல்லாம்பின்தொடரத் தொல்கானமடைந்தவனே!*
*அற்றவர்கட்கு அருமருந்தே! அயோத்திநகர்க்குஅதிபதியே!*
*கற்றவர்கள் தாம்வாழும் கணபுரத்து என்கருமணியே!*
*சிற்றவைதன்சொற்கொண்ட சீராமா! தாலேலோ.*

**சுற்றத்தினர் யாவரும் தன் பின்னே வர தண்டகாரணியத்திற்கு எழுந்தருளிய எம்பெருமானே! இவ்வுலகப் பற்றினை அற்றுவிட்டு நின்னையே சரணடைந்தஅடியவர்கட்கு, அவர்கள் செய்த பிழைகள் அனைத்தும் நீங்கும் படியாக அமைந்துள்ள அருமருந்து போன்றவனே! அயோத்தி நகருக்கு அரசனே! கற்றவர்கள் வாழும் இடமான திருகண்ணபுரம் திருத்தலத்தில் எழுந்தருளிய நீலமணி போன்ற அழகிய எம்பெருமானே! சிறிய தாயாகிய கைகேயியின் சொல்லுக்குக் கீழ்ப்பட்டுச் செயல்புரிந்த ஸ்ரீராமபிரானே! உன்னை தாலாட்டுகிறேன்.**

*-குலசேகர ஆழ்வார்*







திருமலை திருப்பதி
தேவஸ்தானம்

# "ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை"

*திருமலையிலும், திருச்சானூரிலும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கப்படுவது அறிந்ததே. தற்பொழுது தி.தி.தே. அன்னப்பிரசாத அறக்கட்டளை பக்தர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் இதற்கு நன்கொடை அளிக்க நல்வாய்ப்பினை நல்குகின்றது. அதுவே,*

## ஒரு நாள் நன்கொடை திட்டம்

| | | |
|---|---|---|
| 1) | காலை சிற்றுண்டி | - 08 இலட்சம் |
| 2) | மதிய உணவு | - 15 இலட்சம் |
| 3) | இரவு உணவு | - 15 இலட்சம் |
| | மொத்தம் | - 38 இலட்சம் |

0877-2263001
0877-2263472

திருமலை திருப்பதி தேவஸ்தான அன்னப்பிரசாத அறக்கட்டளை இத்தொகையை நன்கொடையாளர்களிடமிருந்து பெற விழைகிறது. நன்கொடையாளர் / தனிப்பட்ட நபர் / நிறுவனங்கள் / நிறுமங்கள் / அறக்கட்டளைகள் இணைந்தும் இருக்கலாம்.

இவர்கள் ஒரு நாளைக்கு மொத்தம் ரூ.38 இலட்சமோ/காலை சிற்றுண்டிக்கு ரூ.8 இலட்சமோ/மதிய உணவிற்கு ரூ.15 இலட்சமோ/இரவு உணவிற்கு ரூ.15 இலட்சமோ அளிக்கலாம்.

தி.தி.தேவஸ்தானம் நன்கொடையாளர்களுக்கு அளிக்கும் வசதிகள் ஒரே விதமாகவே இருக்கும்.

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்:**

**துணைச்செயலாட்சித் தலைவர் (நன்கொடையாளர் பிரிவு) எப்.ஏ.சி., தி.தி.தேவஸ்தானம், திருமலை, ஆந்திர மாநிலம்**

மின்னஞ்சல் : cdmc.ttd@tirumala.org
www.tirumala.org என்ற இணையதளத்திலும் விவரங்களைக் காணலாம்.




வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

பிப்ரவரி 2024

மலர் 03 இதழ் 07


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| இரத சப்தமி -திரு. பூமண கருணாகர ரெட்டி, திருப்பதி. | 07 |
| நீதிக்கதை : அகங்காரம் -திரு.அசோக்ராஜா, அரவகுறிச்சிப்பட்டி. | 10 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம்: பொன்மலையில் ஏதேனும் ஆவேனே -பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 11 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: கவலையைப் போக்கிய கடோத்கஜன் - திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 14 |
| மாசி மாத மகிமைகள் -முனைவர் பா.காயத்ரி, அம்பத்தூர். | 16 |
| வேதங்கள் காட்டும் கணிதம் -டாக்டர் எம்.எல்.ராஜா, ஈரோடு. | 18 |
| ஸ்ரீகிருஷ்ணரை துதித்த பீஷ்மர் - ஸ்ரீ உ.வே.அனந்தபத்மநாபாச்சாரியார் ஸ்வாமி, சென்னை. | 20 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: மணி(சிகை) முடி - படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 23 |
| பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் -திரு.எம்.எஸ். சுகுமார், சென்னை. | 25 |
| ஆயிர்வேதம் : ரோஜா மலர் -திருமதி எஸ்.உஷா, திருப்பதி. | 26 |
| சக்கரவர்த்திகள் கண்ட சக்கரவர்த்தி திருமகன் - ஸ்ரீ உ.வே.எஸ்.ரகுவீரபட்டாசாரியர் ஸ்வாமி, மதுராந்தகம். | 31 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 34 |
| 108 திவ்யதேச வைபவம் : திருஊரகம் (பெரிய காஞ்சிபுரம்) - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 37 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : திருக்கச்சி நம்பிகள் - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 40 |
| திவ்ய ப்ரபந்தத்தின் ரஹஸ்ய வ்யாக்யானங்கள் - திரு. உ.வே. அரையர் ஸ்ரீராமசர்மா ஸ்வாமி, மேலுக்கோட்டை. | 42 |
| ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன்... - திரு. துளசி கிருஷ்ண, சென்னை. | 45 |
| ராசிபலன்கள் : பிப்ரவரி 2024 -டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 48 |
| சித்திரக்கதை : நமதென்பது ஒன்றுமில்லை | 52 |



சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360



நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org



| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபய தேவியருடன் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீநிவாசமங்காபுரம்.

பின்னட்டை : தேவுனி கடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி திருத்தேர்.

உங்களுடன்



# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

அர்தாகமோ நித்ய மரோகிதா ச ப்ரியா ச பார்யா ப்ரிய வாதிநீ ச
வ ஸ்யஸ்ச புத்ரோஅர்தகரீச வித்யா ஷட் ஜீவ லோகஸ்ய ஸூகானி ராஜஸ

– மகாபாரதம் – உத்யோக பர்வம்

செல்வ செழிப்பு, நோயின்றி இருத்தல், விரும்பிய துணைவி, அன்பான மனைவி, பெற்றோர் சொற்பேச்சுக் கேட்கும் பிள்ளைகள், சிறந்த கல்வி அமைதல் என மேற்கூறிய ஆறும் மனிதனுக்கு நன்மையை அளிக்க வல்லன என மகாபாரதம் கூறுகின்றது. இந்த ஆறில் இரண்டாவதான நோயற்ற வாழ்வே மனிதனுக்கு இன்றியமையாததாகும். ஆரோக்கியம் இருந்து மற்றவை இல்லையெனினும் வாழ்ந்து விடலாம். ஆனால், ஆரோக்கியம் இல்லையெனில் மற்ற ஐந்தும் இருந்தும் இல்லாதது போன்றே ஆகும்.

பண்டைய கால மக்கள் உயர்ந்த மனிதர்களாகவும், வலிமைமிக்கவர்களாகவும், ஆரோக்கியம் மிக்கவர்களாகவும், நீண்ட ஆயுளை உடையவர்களாகவும் வாழ்ந்து வந்தனர் எனக் கூறும்போது நமக்குப் பெரும் வியப்பாக இருக்கின்றது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டு மனித இனத்தின் வாழ்வினையே புரட்டி போட்டு வருகின்றது. இம்மாற்றங்களில் அறியப்படாத நோய்கள், ஒரே நேரத்தில் நம்முள் உட்புகுந்து படிப்படியாகப் பெருகி அது மனித இனத்தையே குழப்பத்தில் ஆழ்த்தி வருகின்றன. ஆயிரக்கணக்கான தொற்றுகள் உற்பத்தியாகி நம்மைச் சுற்றி வருகின்றன. இவற்றினைப் போன்றதே கடந்த 2019ஆம் ஆண்டு உலகினையே உலுக்கிய கொரோனா நுண்கிருமிப் பெருந்தொற்றாகும். சிறு கிராமம் முதற்கொண்டு பெரு நகரங்களையும் நான்கு சுவற்றிற்குள் முடங்க வைத்தது இத்தொற்று.

நம் பாரத தேசம் கடந்த மூன்று ஆண்டுகளில் நுண்கிருமி பரவலின் மூன்று அலைகளில் இருந்தும் வெற்றிகரமாக மீண்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. குடிமக்கள் அனைவருக்கும் இலவசத் தடுப்பூசி, மேம்பட்ட மருத்துவ கட்டமைப்புகள் மூலமாக முதல் அலையின் போது ஏற்பட்ட பெருமளவிலான உயிரிழப்புகளை அடுத்த இரு அலைகளில் நேராமல் தடுக்கப்பட்டது.

இந்நிலையில் ஜே.என்.1 என்ற புதிய வகை கொரோனா நுண்கிருமித் தொற்று உலகெங்கிலும் பரவி வருவதை நாம் அலட்சியப்படுத்த முடியாது. இப்புதிய வகை நுண்கிருமித் தொற்று பரவல் குறித்து பெரிதாகக் கவலைப்படத் தேவையில்லை என்று மருத்துவத் துறையினர் கூறி வருவது சற்று ஆறுதலளிக்கின்றது.

நமது பாரத தேசத்தைப் பொறுத்த வரையில் கொரோனா முதல் அலைப் பரவலை எதிர் கொண்ட அனுபவத்துடன், நம் முன்னோர்கள் படைத்த இலக்கியங்களில் கூறியுள்ளபடி நோய் தடுப்பிற்கான நெறிமுறைகளையும் பின்பற்றுவோமானால் இப்புதியவகை நுண்கிருமித் தொற்றுப் பரவலை எளிதில் தடுக்க முடியும்.

*“நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்”* என்று திருக்குறளில் திருவள்ளுவர் கூறியபடி “ஒரு நோயின் மூலகாரணத்தை அறிந்து சிகிச்சை அளித்தல்” என்ற அற்புதமான மருத்துவக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். மேலும், வைணவ சிகாமணி ஸ்ரீவேதாந்த தேசிகர் “ஆகார நியமம்” எனும் நூலில் விவரித்துள்ளபடி விலக்க வேண்டிய உணவுகளை விலக்கி, ஏற்கக் கூடிய உணவுகளை ஏற்று உண்பதன் மூலம் ஆரோக்கியமான வாழ்வை நாம் உறுதி செய்து கொள்ளலாம்.

மேலும், நம்மையெல்லாம் காத்து ரட்சிக்கும் கலியுக கண்கண்ட தெய்வமாகிய திருவேங்கடவனின் திருவருளை துணை கொண்டு நம்முடைய முன்னோர்களின் வாழ்வியல் நெறிகளைக் கடைபிடித்து வாழ்வதன் மூலம் எவ்விதமான கிருமித் தொற்றையும் தடுத்து மிக எளிதாக வெற்றி கொள்ளலாம் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

ஆரோக்கியமாக இருப்போம்! நீண்டாயுளோடு வாழ்வோம்!!



# இரத சப்தமி (ஒருநாள் பிரம்மோத்ஸவம்)

**தெலுங்கு மூலம் :**
**திரு. பூமண கருணாகர ரெட்டி,**
தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர், திருப்பதி.

சனாதன கலாச்சாரத்தில் சூரிய பகவானின் மகிமை தனித்துவமானதாகும். வேதங்கள், புராணங்கள், இதிகாசம், காவியங்கள் சூரியனின் மகிமையைக் கூறுகின்றன. சூரியனே நம் கண்கண்ட தெய்வமாவார். சூரியனை மூன்று வேளைகளிலும் காயத்ரி மந்திரத்தால் உபாசனை செய்து வந்தால் அனைத்து இன்னல்களும் நீங்கும்.

சூரிய ஆற்றலுக்குட்பட்ட அறிவியலானது வேதத்தில் உள்ள சூரிய மந்திரத்தில் ஒன்றி உள்ளதை மேற்கத்தியர்களும் குறிப்பிட்டு ஆராய்ச்சி செய்து வருகின்றனர். சூரியன் ஒவ்வொரு நாளும் நம் கண்களுக்கு நேராக வெளிப்படும் பரபிரம்மமாவார். பிரபஞ்சத்திற்கே ஆன்மாவாக விளங்குகிறார். சூர்யோபநிஷத்(1–4) "சூரியன் அனைத்து உயிர்களையும் படைக்கின்றார். சூரிய சக்தியைக் கூறும் "அருண" மந்திரத்தால் வெற்றி, ஆரோக்கியம், நோய் எதிர்ப்பாற்றல் மனிதர்களுக்கு கிடைக்கின்றன" எனக் கூறுகின்றது. வால்மீகி இராமாயணத்தில் யுத்த காண்டத்தில் ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரத்தை அகத்தியர் ஸ்ரீராமருக்கு சூரிய பகவானின் வடிவினை விவரிக்கும்போது, "பிரம்மா, விஷ்ணு, சிவன், சுப்ரமண்யன், இந்திரன், வருணன், யமன் மற்றும் குபேரன் அனைவரும் சூரியனின் வடிவமே ஆவர்" என்றார்.

சூரியன் தன் உதயத்தினால் உலகம் அனைத்தையும் நித்ய கர்மாக்களை செய்ய வைக்கின்றார். சூரியனே நாம் செய்யும் அனைத்து கர்மாக்களுக்கும் சாட்சியாவார். எனவேதான் நாம் செய்யும் அனைத்தும் புண்ணியச் செயல்களாகவே இருத்தல் வேண்டுமெனப் புராணங்கள் கூறுகின்றன.



**சூரிய காயத்ரி மந்திரம்**

**ஓம் ஆதித்யாய வித்மஹே ஸஹஸ்ர கிரணாய தீமஹி, தன்னோ: சூர்ய: ப்ரசோதயாத்**

சூரியனே காலச்சக்கரத்திற்கு ஆதாரமாகிறார். சூரியனாலேயே ஆறு ருதுக்களும் ஏற்படுகின்றன. இவ்வுலகத்திற்கே ஆதாரமாக விளங்குபவரும் சூரியனே ஆவார். ஆதலால்தான் சூரிய காயத்ரி மந்திரத்தால் தினமும் சூரியனை வணங்கி வருகின்றோம்.

"ஓம் நமோ நாராயணாய" என எட்டெழுத்து மந்திரத்தை உச்சரித்து அர்க்யம் செய்து, மனதினை புனிதமாகவும், ஒருநிலைப்பட்டும் பக்தியோடு தினமும் காலையில் 108 முறை துதித்தால் சூரியனின் அருள் நமக்குக் கிட்டும். சூரியனை பன்னிரு பெயர்களால் துதிப்பர். அப்பெயர்களுக்கான காரணங்களையும் மகரிஷிகள் கூறியுள்ளனர்.

**1) மித்திரன்**

சூரியனே உலகமனைத்திற்கும் மித்திரன். அனைத்து உயிர்களும் சூரிய சக்தியாலேயே இயங்குகின்றன. சில நெருப்பு பறவைகள் வெறுத்தாலும் சூரிய ஒளியின்றி அவற்றால் வாழ முடியாது. எனவே சூரியனை தரிசித்து மானிடர்கள் நற்செயல்களை செய்தால் சூரிய மைத்ரியால் ஆரோக்கியம், புத்தி பலம், உடல் ஒளி, நீண்ட ஆயுள், புகழ், செல்வம் கிடைக்கும் என மயூரகவி போற்றுகின்றார்.

**2) ரவி**

அனைவராலும் துதிக்கப்படுவதால் ரவி எனப் படுகிறார். நாராயணனின் தொப்புள் கொடியில் தோன்றிய நான்முக பிரம்மாவிற்கு வேதங்களை சூரியனே உபதேசித்தார்.

**3) சூரியன்**

அனைத்து உயிர்களையும் அவரவர் கர்மாக் களுக்கு ஏற்றபடி இயக்குபவர் சூரியனே ஆவார். உத்வேகம் மற்றும் தெளிவு ஆகியவை சூரியனின் உள்ளார்ந்த குணங்கள் ஆகும்.

**4) பானு**

எங்கும் ஒளியைப் பரப்புபவன் சூரியனாவார். உயிர்கள் வழிபட்டால் ஒளியை அருளுகிறான்.

**5) ககன்**

சூரியனே ஆகாயம் முழுவதும் பரந்து இருந்து இப்பிரபஞ்சத்தை ஆள்பவன் வைகுந்தத்தில் சிறப்பு உற்று விளங்குபவன் சூரிய நாராயணனே ஆவான்.

**6) பூஷன்**

இப்பிரபஞ்சம் முழுவதையும் தன் ஒளிக்கதிர் களால் வளர்க்கின்றார். அதாவது இப்பிரபஞ்சத்தை யும், இயற்கைச் செல்வங்களையும் படைத்து, அதன் மூலம் நம்மை வளர்க்கின்றார். மனிதர்கள் வாழ்வ தற்கு உணவு மிக அவசியமானதாகும். அவ்வுணவின் மூலமாக உயிர்களை உற்பத்தி செய்து, உணவின் மூலமே அவர்களை அழிக்கின்றார். அதேபோன்று அவர்களில் உள்ள தேஜஸ்ஸினால் அவர்களின் வம்சத்தை ஏற்படுத்தி வளர்க்கின்றார்.

**7) இரண்யகர்பன்**


பிரளயகாலத்தில் உயிர்களைப் பொன்னிறத்தில் கொண்டு வந்து, பிரளயத்திற்குப் பின்னர் மீண்டும் அவற்றினை உலகிற்குக் கொண்டு வருகின்றார்.

**8) மரீசி**

மரீசி என்றால் ஒளிக்கதிர் கூட்டத்தினை உடையவன் எனப் பொருள். இருள், நோய் எனும் எதிரிகளை அழிக்கும் ஆற்றலோடு சங்கு, சக்கரம், தாமரை, கதை ஏந்தியவன் பரமாத்மாவே ஆவார்.

## இரத சப்தமி வழிபாடு

**சூரியனின் ஒளிக்கதிர்கள் பூமியில் அதிகரிக்கும் நாளே இரதசப்தமியாகும். இந்நாள் முதற்கொண்டே சூரிய ஒளியில் மாற்றம் ஏற்படத் துவங்கும். சூரியனின் அவதார உத்ஸவமாகவும் கொண்டாடுவர். இரத சப்தமி அன்று பாயசான்னம் வெற்றிலையில் நிவேதனம் செய்வர். வெற்றிலை, எருக்கம் இலை சூரிய சக்தியை அதிகளவில் கிரகிக்கும் தாவரங்களாகும். அன்றைய தினம், சூரிய உதயத்திற்கு முன் நீராடுவதற்கு சில விதிமுறைகளை மகரிஷிகள் உபதேசித்துள்ளனர். சூரிய உதயத்திற்கு முன் நீராடுவதற்கு முன்னதாக தலைமீது ஏழு எருக்கம் இலைகள், சிறிது பச்சை அரிசி வைத்துக் கொண்டு சூரியனை துதித்தபடி நீராடுதல் வேண்டும். இந்நாள் முதல் சூரிய ஒளிக்கதிர் வடதிசையில் அதிகளவில் இருக்கும். நட்சத்திரங்கள் ஆகாயத்தில் இரதத்தின் வடிவில் காட்சியளிக்கும். எனவே இச்சமயத்தில் சூரியனைத் துதிப்பதால் மனிதர்களுக்கும் நன்மைகள் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.**



## திருமலையில் இரத சப்தமி



**கலியுக வைகுந்தமான திருமலை புண்ணிய திருத்தலத்தில் இரத சப்தமி தினத்தினை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அன்றைய தினம் திருமலையப்ப ஸ்வாமி ஏழு வாகனங்களில் எழுந்தருளி சக்கர ஸ்நானமும் கண்டருள்வார். 1564 ஆம் ஆண்டு முதல் திருமலையப்ப ஸ்வாமிக்கு ஒரு நாள் பிரம்மோத்ஸவமாக இந்த இரத சப்தமி விழா நடத்தியதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.**

### 9) ஆதித்தியன்

இவ்வுலகம் அனைத்துப் பலன்களையும் சூரியனாலேயே பெறுகின்றன. அதாவது இவ்வுலகில் உள்ள அனைத்தும் சூரியனுக்கு கட்டுப்பட்டவையே ஆகும். மேலும், எல்லாவற்றி லும் ஒளி வீசுகின்ற புண்ணிய மூர்த்தியும் அவரே ஆவார். உலகில் உள்ள அனைத்து பொருட்களுக்கும் முதன்மையானவர் சூரியனே ஆவார்.

### 10) சவித்திரன்

அனைத்து உலகங்களையும் உருவாக்கி, அனைத்து உயிர்களுக்கும் வாழ்வாதாரத்தை அளித்து மகிழ்விக்கின்றார்.

### 11) அர்க்கன்

உலகில் முதலில் போற்றப்பட வேண்டியவர் சூரியனே ஆவார். ஆதலால்தான் சூரிய வணக்கம் செல்வம், ஆரோக்யம் மற்றும் மகிழ்ச்சியை அளிக்கின்றது.

### 12) பாஸ்கரன்

சூரியனின் அருளால்தான் உலகில் உள்ள அனைத்தையும் நாம் காண்கிறோம். சூரிய வழிபாட்டி னால்தான் மர்மங்களையும் அறிய முடிகிறது. இவ்வாறாக ஆழமான அர்த்தங்களையும், அனர்த் தங்களையும் கொண்ட சூரியனின் இந்த 12 திருநாமங் களும் மகிமை வாய்ந்தவை.

### திருமலையில் இரத சப்தமி

இரத சப்தமி அன்று வாகன சேவைகளை தரிசிப்பதால் பல நற்பலன்கள் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. சூரியப்பிரபை வாகனம் நீண்ட ஆயுளை அளிக்க வல்லது. சிறிய சேஷ வாகனம் கொடிய பாவங்களைப் போக்கும். கருட வாகனம் தாசபக்தியை அருளும். அனுமன் வாகனம் கார்ய சித்தியை அளிக்கும். கல்ப விருக்ஷ வாகனம் கோரிக்கைகளை நிறைவேற்றும். செல்வங்களை அளிக்க வல்லது சர்வ பூபால வாகனம். ஆத்யாத்மிகம், ஆதிதைவீகம், ஆதிபௌதீகதாபங்களை அளிப்பது சந்திரப்பிரபை வாகனமாகும்.

இவ்வாகனங்களுக்கு வல்லமை அளிப்பவன் திருமலைவாசன். ஸ்ரீமந்நாராயணனான திருவேங்கடமுடையானிடம் அதீத நம்பிக்கை கொண்ட மகான்கள் சூரிய நாராயணனாக பரமாத்மாவைப் போற்றுகின்றனர். நாமும் இரத சப்தமி பருவ தினத்தைக் கொண்டாடி அப்பரந்தாமனின் இன்னருளைப் பெற்றிடுவோம்.

**தமிழாக்கம் : திரு. வ. ஓ. சுரேஷ், சத்திரவாடா.**



## நீதிக்கதை

# அகங்காரம்


- திரு. அசோக் ராஜா,
அரவகுறிச்சிப்பட்டி,
9750333265




ஒரு ஆசிரமத்தில் ஞானி ஒருவர் வசித்து வந்தார். அவரிடத்தில் பல சீடர்கள் படித்து வந்தனர். அவர்களில் ஒரு சீடன் எல்லோரையும் விட ஞானிக்கு பணிவிடை செய்து அவருக்கு மிக நெருக்கமாக இருந்தான்.

ஞானியிடம் நல்லவனைப் போன்று நடந்து கொண்டு மிகுந்த ஆர்வத்தோடு ஒவ்வொரு நாளும் புதிய புதிய உத்திகளை அவரிடம் இருந்து கற்றுக் கொண்டான். இதனால் அங்கிருந்த அனைத்து சீடர்களைக் காட்டிலும் அந்த ஆசிரமத்தில் அவனே முக்கியமானவனாக இருந்தான். ஞானியும் அவனிடம் தனிப்பட்ட அன்பும் கவனமும் செலுத்தினார்.

சிறிது காலம் சென்றது. அந்தச் சீடனிடம் பல மாறுதல்கள் தெரிய ஆரம்பித்தன. அவன் எல்லோரையும் ஏளனமாகப் பார்க்க ஆரம்பித்துவிட்டான். சக சீடர்களைப் பற்றி ஞானியிடம் ஒன்றுக்கு இரண்டாகச் சொல்லிச் சிண்டு முடிந்து கொண்டிருந்தான்.

இந்த விஷயம் ஞானியின் காதுகளுக்குச் சென்றது. இந்த அகம்பாவம் அவனை அழித்து விடும் என்பதை உணர்ந்தார் ஞானி. அவனது பிழையை அவனுக்கு உணர்த்த விரும்பினார். மறுநாள் அவனை அழைத்து "இன்று அதிகாலையில் பக்கத்து கிராமத்தில் உள்ள என் நண்பர் ஒருவர் இறந்து விட்டார். பக்கத்துத் தெருவில் உள்ள ஆசாரியிடம் போய் விவரத்தைச் சொல்லி ஒரு தரமான சவப்பெட்டியைச் செய்து வைக்கச் சொல். அவர் சாஸ்திரத்தை கரைத்துக் குடித்தவர். சிறந்த அறிஞருக்கான விருதினைப் பெற்றவர். இன்று மதியம் அவரது அடக்கத்திற்கு சவப்பெட்டி தேவைப்படுகிறது. இதை உன்னால் மட்டுமே சிறப்பாகச் செய்ய முடியும்" என்று கூறினார். கடைசியாக அவர் அவனை உயர்த்திச் சொன்ன வார்த்தைகள் அவனை மிகவும் உற்சாகப்படுத்தி விட்டன.

சீடன் ஆசாரி வீட்டிற்கு விரைந்து சென்று விஷயத்தை சொன்னான். ஆசாரி இறந்து போனவரைக் குறித்த விபரங்களைக் கேட்டார். அவனும் ஆசிரியர் சொன்னபடியே அவர் சாஸ்திரத்தை கரைத்துக் குடித்தவர். சிறந்த அறிஞருக்கான விருதினைப் பெற்றவர் எனச் சொல்லி முடிப்பதற்குள் ஆசாரிக்கு கோபம் வந்து விட்டது.

"ஏண்டா முட்டாள்! செத்த பிணத்தோட விவரம் சொல்லாம வேறென்னமோ உளறுகிறாயே! நீ படிச்சவன்தானே?" என்றார் ஆசாரி. "அவரைப் பற்றி இவ்வளவு சொல்லியும் உங்களுக்குப் புரியவில்லை என்று சொன்னால் நீங்கள்தான் ஒரு அடி முட்டாள்" என்றான் சீடன்.

அதற்கு ஆசாரி, "எனக்கு அது பிணம்தான். எனக்கு வேண்டியது அதோட உயரமும் அகலமும் தான். நீங்க படிக்கிற படிப்பெல்லாம் உடம்பில் உயிர் இருக்கிற வரைதான்" என்றார்.

இதைக் கேட்டதும் மனித ஞானம் இவ்வளவு தானா? இதற்காகவா இத்தனை பேரை அவமானப் படுத்தினேன் என எண்ணிக்கொண்டு ஞானி முன்னர் கூனிக் குறுகியபடியே நின்றான் சீடன். அழியப் போகிற சரீரம் வைத்துக்கொண்டு மனத்தாழ்மையாய் நடப்பதே உண்மையான ஞானம். வீண்பெருமை, அகந்தை, ஆணவம் உடையவர்கள் ஒரு நாள் முக்கியமற்றுப் போவார்கள்.

அடக்கமாக இருப்பவர்கள் ஞானம் பெறுகிறார்கள். உயர்வடைகிறார்கள். நல்ல குரு கிடைத்ததால் இந்தச் சீடன் திருந்தும் வாய்ப்பு கிட்டியது. ஆனால் அகங்காரம் தன்னை ஒருநாள் சுட்டெரித்து விடும் என்பது அறியாமல் நிறைய சீடர்கள் ஆணவ அதிகாரத்தில் ஆடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆதலால், தானே அனைத்தும் அறிந்தவன் என்ற அகங்கார தலைக்கணத்தை விடுத்து இறைவன் அருளால் நற்குணங்கள் பெற்றுச் சிறந்து விளங்குவோம்

மாசி மாதம் புனர் பூசம் குலசேகரரின் அவ தார திருநட்சத்திரம் ஆகும். புனர் பூசம் என்ற நட்சத்திரம் முப்புரியூட்டிய நட்சத்திரம். புனர்பூசத்தில் தான் ஸ்ரீராமச் சந்திர மூர்த்தி அவதரித்தார். புனர்பூசத்தில் தான் குல சேகர ஆழ்வார் அவதரித் தார். முதலியாண்டான், எம்பார், கந்தாடையாண் டான் மற்றும் பல ஆசாரிய சிரேஷ்டர்கள் அவதரித்த நட்சத்திரம் புனர்பூசம் ஆகும்.



குலசேகரரின் அவதாரச் சிறப்பை மணவாள மாமுனிகள் தமது உபதேச ரத்தினமாலையில் பின்வருமாறு பாசுரமிடுகின்றார்.

*மாசிப் புனர்பூசம் காண்மின் இன்று மண்ணுலகீர்*
*தேசு இத்திவசத்துக்கு ஏதென்னில் - பேசுகின்றேன்*
*கொல்லி நகர்க் கோன் குலசேகரன் பிறப்பால்*
*நல்லவர்கள் கொண்டாடும் நாள்*

உலகத்தவர்களே! மாசி மாதம் புனர்பூச நக்ஷத்திரத்திற்கு இருக்கும் பெருமை எதுவென்று நான் சொல்லுகிறேன் கேளுங்கள். கொல்லி நகரமான சேர தேசத்திற்குத் தலைவரான குலசேகரப்பெருமாள் அவதரித்த தினமாகையாலே, நல்லவர்கள் கொண்டாடக்கூடிய நாள் இன்று. குலசேகர ஆழ்வார் பெருமாளான ஸ்ரீராமனிடத்தில் கொண்ட அளவிலாத பக்தியால் குலசேகரப் பெருமாள் என்றே அன்புடன் அழைக்கப்பட்டார். நல்லவர்கள் என்றால் வைஷ்ணவ நெறியிலே சிறந்து விளங்குபவர்கள், பரம ஸாத் விகர்கள், ஞான பக்தி வைராக்யங்களிலே சிறந்து விளங்குபவர்கள். நம் பூர்வாசாரியர்களைப் போலே ஆத்ம குண பூர்த்தியை உடையவர்கள்.

குலசேகர ஆழ்வார் திருவேங்கடத் திருத்தலத்தில் அளவற்ற ஈடுபாடு கொண்டிருந்தார். திருவரங்கனை,

*“திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும் கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு என் கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே?”*

என்று பாடினார். ஆனால், திருவேங்கட மலையில் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கன் மீது மாறாத காதல் கொண்டு தனக்கு இந்திரலோகம் கூட வேண்டாம். திருவரங்கத்தில் இருப்பதையே விரும்புகின்றேன் என்று பாடியுள்ளார்.

*பச்சை மாமலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்*
*அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்*
*இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்*
*அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே*

குலசேகர ஆழ்வாரும் “ஊனேறு செல்வத்து” என்கிற பதிகத்தில் திருவேங்கட மலையில் ஏதேனும் ஒரு பொருளாக, உயிர்ப் பொருளா

# பொன்மலையில் ஏதேனும் ஆவேனே!

**– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,**
**புவனகிரி, 94434 39963.**

கவோ, ஜடப் பொருளாகவோ இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு பிரார்த்திக்கிறார்.

பொதுவாக, இனி ஒரு பிறவி வேண்டாம் என்றுதான் சம்சார துன்பத்தை உணர்ந்த ஆழ்வார்கள் பாடி இருக்கின்றார்கள். காரணம், அத்தனை கடினமானது மனிதப் பிறவி. “சாணிக்குள் புகுந்த புழுப் போல வெளி வர முடியாமல் துடிக்கிறேன்” என்கிறார் ஸ்ரீமந் நடனகோபால நாயகி சுவாமிகள்.

*வேத நூல் பிராயம் நூறு மனிசர் தாம் புகுவ ரேலும்,*
*பாதியும் உறங்கிப் போகும் நின்றதிவ் பதினையாண்டு,*
*பேதை பாலகனதாகும் பிணி பசி மூப்புத் துன்பம்,*
*ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகர் உளானே*

என்கிற திருமாலைப் பாசுரத்திலே, மனிதப் பிறவியில் இருக்கும் கஷ்டங்களை எல்லாம் பாடுகின்றார் தொண்டரடிப் பொடி ஆழ்வார். “மனிதப் பிறவி நல்ல விதமாக ஐஸ்வர்யங்களுடன் கிடைக்கிறது. வேண்டுமா, வேண்டாமா?” என்ற கேள்விக்கு “வேண்டவே வேண்டாம்” என்கிறார் ஆழ்வார். அதற்கு பதிலாக திருவேங்கடத்தில் இருக்கும் கோனேரி தீர்த்தத்தில் ஒரு குருகாகப் பிறந்தாலும் கூட நலமடைவேன் என்கிறார்.

தன்னுடைய ஆசைகளை எல்லாம் படிப் படியாக விவரிக்கிறார். எல்லாமே திருவேங்கட மலையிலே ஏதேனும் ஒரு பொருளாக இருக்க வேண்டும் என்கிற ஆசைதான். அத்தனை ஈடுபாடு திருவேங்கட மலைமீது.

*செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே*
*நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்*
*அடியாரும் வானவரு மரம்பையரும் கிடந்தியங்கும்*
*படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே*

நெறியாய்க் கிடக்கும் நிலையுடையேன் ஆவேனே என்று திருமலைக்கு வழியாகத் தானாக வேணும் என்று விரும்பியவர் சிறிது ஆராய்ந்ததில், அது தன்னிலும் ஓர் குறை கண்டார்; வழியென்பது அவரவர்களுடைய சௌகரியத்துக்குத் தக்கபடி மாறுபடும். கீழ்த்திருப்பதியிலிருந்து திருமலைக்குப் போகும் வழி மிக வருத்தமாயிருக்கிறதென்று யாத்திரிகள் சந்திர

## குலசேகர ஆழ்வார் ஆசைப்பட்டது என்னவெனில்...

1) திருக்கோனேரி என்கிற ஸ்வாமி புஷ்கரிணியில் வாழ்கிற நாரையாகவாவது பிறக்கக் கடவேன்.
2) தேனார்பூஞ் சோலைத் திருவேங்கடச் சுனையில் மீனாய்ப் பிறக்கும் விதியுடையேனாவேன்.



3) வேங்கடக்கோன் தானுமிழும் பொன் வட்டில் பிடித்துடனே புகப்பெறுவேனாவேன்.
4) வேங்கடத்து செண்பகமாய் நிற்கும் திருவுடையேனாவேன்.
5) எழில்வேங்கடமலைமேல் தம்பகமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேன்.
6) வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள் அன்னனைய பொற்குவடா மருந்தவத்தனாவேன்.
7) திருவேங்கடமலை மேல் கானாறாய்ப் பாயும் கருத்துடையேனாவேன்.
8) திருவேங்கடமலைமேல் நெறியாய்க் கிடக்கும் நிலையுடையேனாவேன்.

ஒவ்வொன்றிலும் இருக்கும் சில இடர்பாடுகளைக் கருதி அதைவிட மேம்பட்ட ஒன்றினை தொடர்ச்சியாக பெருமானிடம் வேண்டுகின்றார் ஆழ்வார்.

கிரி வழியாகப் போகக்கூடும். ஓரிடத்திற்கு ஒன்று தான் வழியென்று சொல்ல முடியாதாகையாலும், வழியானது விலகி நிற்பதாகையாலும், வழியாக வேணுமென்று விரும்புவதிற் காட்டிலும் எம்பெருமானது திருவருள் நோக்கம் பதியுமாறு அவன் கண் முகப்பிலே மெய்யடியாரோடு பிறரோடு வாசியற எல்லாரும் இடைவிடாது செல்லும்படியான ஓர் அசேதனப் பொருளாகிக் கிடந்தது. அதிலே உன் பவள வாய் காணும்படியானதொரு நிலையைப் பெறக் கடவேனென்று தமது விருப்பத்தை விண்ணப்பஞ் செய்கிறார். இப்பாசுரத்தை அடியொற்றியே விஷ்ணு ஆலயங்களில் கோயிலினுள் நுழையும் வாசற்படி – "குலசேகரப்படி" என்று இவர் பெயரை இட்டு வழங்கப்படுகிறது.

இப்படி வேண்டிக் கொண்டே வந்தவர் கடைசியில் இதற்கு மேல் எதைக் கேட்பது என்று நிறுத்தி விட்டு, "பகவானே, திருவேங்கட மலையில் எதுவாக இருப்பினும் எனக்குச் சம்மதம் தான்" என்று நிறைவு செய்கின்றார். அருமையான பாசுரம்.

*உம்ப ருலகாண் டொருகுடைக்கீழ் உருப்பசிதன்*
*அம்பொற் கலையல்குல் பெற்றாலும் மாதரியேன்*
*செம்பவள வாயான் திருவேங் கடமென்னும்*
*எம்பெருமான் பொன்மலைமே லேதேனு மாவேனே*

இதற்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் மிக ஆச்சரியமாக எழுதினார்கள். திருமலையில் சந்நிதிக்குள் கருங்கல் படி இருப்பது திருவேங்கடமுடையானுடைய செல்வத்திற்குத் தகாது என்று மஹா பிரபுக்கள் வந்து அப்படியே பொன் தகடால் மறைக்கக்கூடும். அப்போது நாம் அப்பன் திருமுக மண்டல சேவையை இழந்து விடுவோமே... ஆகையால், படியாய்க் கிடப்பதும் பாங்கல்ல என்று அறுதி இட்டார். பின்னை எந்தப் பிறவியைப் பிரார்த்திக்கலாமென்று யோசித்தார். மேற்கூறப்பட்ட மாதிரி ஒவ்வொரு பிறப்பிலும் ஒவ்வொரு குறைபாடு தோன்றிக் கொண்டேயிருந்தது. கடைசியாக ஒரு பிறவியையும் தாமாக வேண்டிக் கொள்ள விரும்பாதவராய் "எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே" என்கிறார்.

*''எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே''* என்றால் திருவேங்கடமுடையான் ஆகவும் ஆவேன் என்று அற்புதமான பொருளை கொடுத்தார்கள்.


பலச்சுருதியில் திருவேங்கடம் குறித்த இந்த பத்து பாசுரங்களையும் பாட வல்லவர்கள் மிகச் சிறந்த பக்தர்கள் என்று நிறைவு செய்கிறார்.

திருவேங்கடமுடையானின் திருவருளுக்கு இலக்காக மாசி மாதம் அவதரித்த குலசேகராழ்வாரின் இந்தத் திருவேங்கடப் பதிகத்தைப் பொருளுணர்ந்து சேவிக்க வேண்டும்.

*பாசுரம் அறிவோம்...*

## ஸப்தகிரி டிசம்பர் 2023 விடைகள்

1. புத்ரதா ஏகாதசி.
2. மணக்கால் நம்பி.
3. திருக்கச்சி நம்பிகள்.
4. காஞ்சிபுரம்.
5. வைகுண்ட ஏகாதசி.
6. குமாரதாரா தீர்த்தம்.
7. திருப்பாவை.
8. திருவாதவூர்.
9. மார்கழி மாதம்.
10. திருப்பாவை.
11. திரேதா யுகம்.
12. திதிதேவஸ்தானம்ஸ்.
13. ஆழ்வார் திவ்ய பிரபந்த திட்டத்துறை.
14. திருமாமணி மண்டபம்.
15. புனர்வசு, நவமி.



## போட்டி எண். 17

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி வி.பா.விபாஷா, மாணிக்கம் பாளையம், ஈரோடு மாவட்டம்.
2. செல்வன் தே.ஜெகதீஸ்வரன் குன்றத்தூர், சென்னை.
3. செல்வி ஐ.ருத்வி மாதவி திருவானைக்காவல், திருச்சி மாவட்டம்.



*அலசுவோம்...*
*அறிவோம்...*
*ஆதிகாவிய நாயகர்களை...*

# கவலையைப் போக்கிய கடோத்கஜன்

**– திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம், 9486139685**

ஸ்ரீகிருஷ்ண பகவான் யாரைக் காப்பாற்றுவது, யாரை அழிப்பது என்பதை மட்டும் தீர்மானிக்காமல், வேறு யாரைக் காப்பாற்றுவது என்பதையும் தீர்மானிக்கிறார்.

காரண காரியங்களை அறிந்தவரும், பட்சபாதங்களை அறியாதவருமாகிய ஸ்ரீகிருஷ்ண பகவான் பாண்டவர்கள் தரப்பில் இருந்த அர்ஜுன புத்திரன் அபிமன்யு, பீம புத்திரன் கடோத்கஜன் ஆகியோருடைய அழிவுக்கும் சாட்சியாக இருந்தார்.

யுத்த களத்திற்கு வந்து நின்ற பிறகு தனது உற்றார் உறவினர்களைக் கொல்ல வேண்டுமா என்ற தயக்கம் அர்ஜுனனின் மனதில் தோன்றியதை அறிந்த ஸ்ரீகிருஷ்ணர், "குந்தி மைந்தனே! உன்னால் இந்த யுத்தத்தில் கொல்லப்பட வேண்டியவர்கள் அனைவரும் என்னால் ஏற்கெனவே கொல்லப்பட்டு விட்டனர். அவர்கள் மீது பாணத்தை எய்துவது மட்டுமே உனது வேலை!" என்று கூறினார் அல்லவா? அந்தக் கூற்று கௌரவர் தரப்பினரால் கொல்லப்பட்ட பாண்டவ புத்திரர்களுக்கும் பொருந்துவதாகும்.

பீமனுடைய புத்திரனாகிய கடோத்கஜன் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியுமா என்ன? பாண்டவர்கள் வனவாசம் புரிந்து வந்த காலத்தில் ஒரு நாள் சகோதரர்கள் நால்வரும் இரவு நேரத்தில் உறங்கும் பொழுது பீமசேனன் மட்டும் உறங்காமல் அவர்களைக் காவல் காத்துக் கொண்டிருந்தான்.

அச்சமயம் அக்காட்டில் மனித உடலின் வாடை வீசுவதை அறிந்து நரமாமிசம் தின்னும் ஆவலுடன் இடும்பன் என்ற அரக்கனும், அவனது தங்கையாகிய இடும்பி என்ற அரக்கியும் வந்து சேர்ந்தனர்.

பீமனுக்கும் இடும்பனுக்கும் கடும் சண்டை மூண்டது. சண்டையின் இறுதியில் தன்னுடைய அண்ணன் இடும்பனை பீமசேனன் கொன்ற பொழுதிலும் அவனது பராக்கிரமத்தினால் கவரப்பட்ட இடும்பி அவனையே மணப்பேன் என்று கூறி அங்கேயே நின்றாள்.

தங்கள் தாயார் குந்தியின் அனுமதியைப் பெற்று பீமசேனன் அவளை மணந்து கொண்டான். மேலும் வனவாசம் முடியும் வரையில் இருவரும் ஒன்றாக இருக்கலாம் என்றும், வனவாசம் முடிந்து அஸ்தினாபுரம் திரும்பும் பொழுது இடும்பி பீமசேனனுடன் செல்லாமல் காட்டிலேயே தங்கியிருக்க வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அதன் பின்பு விருப்பம் ஏற்படும் பொழுது ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இடும்பிக்கும் பீமசேனனுக்கும் பிறந்த மகன் கடோத்கஜன் என்று அழைக்கப்பட்டான். அரக்கர்களுக்கே உரிய உடல் வலிமையும், மாயமந்திரங்களும் கடோத்கஜனுக்கு இயல்பாகக் கைவந்தன.

மகாபாரதப் போரில் பங்கு பெற்ற துரியோதனாதியரின் படைபலம் பாண்டவர்களின் படை பலத்தை

விடவும் எண்ணிக்கையில் அதிகம் என்பதால் அவ்வெண்ணிக்கையைக் குறைக்க கடோத்கஜனின் போர்த்திறமையும் பெருத்த உடலும் உதவி செய்தது.

தேவேந்திரன் தனக்கு அளித்த சக்தி அஸ்திரத்தை அர்ஜுனனைக் கொல்வதற்காகப் பயன் படுத்த நினைத்தான் கர்ணன். ஆனால் ஒரு கட்டத்தில் துரியோதனன் கர்ணனை அணுகி, நமது தரப்புக்குப் பேரழிவினை ஏற்படுத்தி வரும் கடோத்கஜன் மீது சக்தி அஸ்திரத்தைப் பிரயோகம் செய்வாயாக என்று கேட்டுக் கொண்டான். கர்ணனும் அதற்குச் சம்மதித் தான்.

ஆகாயத்தில் ஒளிந்து கொண்டு மாயாஜாலச் சண்டை புரிந்து கொண்டிருந்த கடோத்கஜன் கர்ணன் செலுத்திய சக்தி அஸ்திரத்தால் தான் இறப்பது உறுதி என்பதைப் புரிந்து கொண்டு, உடனடியாகத் தனது மாயவித்தையின் மூலம் தனது உடலைப் பெரிதாக்கிக் கொண்டு கௌரவப் படைகளின் மீது வந்து விழுந்ததில், அவனது பெருத்த உடலின் அடி யில் சிக்கிக் கொண்டு பல்லாயிரம் வீரர்கள் மடிந்தனர்.

மகாபலசாலியாகிய கடோத்கஜன் உயிர் இழந்ததன் காரணமாக, மகாபாரதப் போரின் முக்கிய நாயகனாகிய மாவீரன் அர்ஜுனன் உயிருக்கு சக்தி அஸ்திரத்தால் என்ன அபாயம் நேருமோ என்ற கவலையும் நீங்கியது. அரக்க மனம் படைத்த துரியோதனனை வீழ்த்தி, அறவழியில் செல்லும் பாண்டவர்களை வெற்றி பெற வைப்பதற்காக, அரக்கனாகிய கடோத்கஜன் தனது இன்னுயிரை ஈந்த சரித்திரம் கல்நெஞ்சையும் கரைய வைப்பதாகும்..

மகாபாரதப் போரின் விவரணைகளையும், அதனால் ஏற்பட்ட பேரழிவுகளையும் பார்க்கும் பொழுது இப்படி ஒரு பெரும்போரே நடக்காமல் இருக்கும்படியாக ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா ஏன் சங்கல்பித்திருக்கக் கூடாது என்ற கேள்வி நமது மனங்களில் எழத்தான் செய்கின்றது.

கூடவே, இது இப்படித்தான் நிகழ வேண்டும் என்ற பகவானின் சங்கல்பத்தைக் கேள்வி கேட்ப தற்கு நமக்கு என்ன தகுதி உள்ளது என்ற கேள்வியும் பிறக்கின்றது.

தொடர்ந்து அலசுவோம்...




## வஸந்த பஞ்சமி

**மா**க மாதம் சுக்ல பக்ஷ பஞ்சமியன்று முப்பெரும் தேவிகளில் கல்விக் கடவுளாக போற்றப்படும் ஸ்ரீசரஸ்வதி தேவியின் அவதார நாளாகவும், வஸந்த ருதுவின் தொடக்கத்தில் வரும் பஞ்சமி ஆதலால் இதனை வஸந்த பஞ்சமி என்றும் அழைப்பர்.

சிறு குழந்தைகளுக்கு வஸந்த பஞ்சமி அன்று ஆலயத்தில் “அக்ஷராப்யாஸம்” என்ற நிகழ்ச்சியை நடத்தி, குழந்தைகளுக்கு முதன் முறையாக எழுது வதற்கு பயிற்சியைத் துவங்குவர். வட இந்தியாவில் வஸந்த பஞ்சமியை அறுவடைத் திருநாளாகக் கொண்டாடும் வழக்கம் உண்டு. அன்று ஆலயங் களில் சென்று வழிபட்டு மாலை நேரத்தில் “பட்டம் விடுதல்” போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி மக்கள் தங்கள் ஆனந்தத்தை வெளிப்படுத்துவர்.

திருமலையில் பிரம்மோத்ஸவத்தின்போது மூன்றாம் நாள் காலையில் திருமலையப்ப ஸ்வாமி ஹம்ஸ வாகனத்தில் கல்விக் கடவுளான சரஸ்வதி தாயார் அலங்காரத்தில் வீதி வலம் வந்து பக்தர்களுக்கு காட்சி அளிப்பது வழக்கமாக உள்ளது.

# மாசி மாத மகிமைகள்



மாசி மாதத்தில் மஹாவிஷ்ணுவை, கங்கை அம்மனை, சூரிய பகவானை, பரமசிவனை வணங்குவது விசேஷமாகும். கிருஷ்ணபக்ஷ சதுர்த்தி திதியில் சங்கடஹர சதுர்த்தி விரதத்தைத் தொடங்கி, ஓராண்டு விதிப்படி கடைப்பிடித்தால் துன்பங்கள் விலகி, செல்வம் சேரும். "மாசிக்கயிறு பாசியேறும் வரை நிலைக்கும்" என்ற வாக்கிற்கிணங்க திருமணங்கள், தாலிக்கயிறு மாற்றுவது போன்றவை செய்வர்.

வஸந்த பஞ்சமி சரஸ்வதி தேவியின் அவதார தினமாகக் கருதப்படுகிறது. இந்நாள் "ஸ்ரீபஞ்சமி", "மதன பஞ்சமி" என்றும் அழைக்கப்படுகிறது. இந்நாளில் சரஸ்வதி தேவியை வழிப்பட்டு வித்யா ஆரம்பம் நடத்தப்பட்டு, புது கலையைக் கற்கவும் சொல்லித் தருவர். ஸ்ரீகிருஷ்ணர் சாந்தீபனி முனிவரிடம் கல்வி கற்கத் தொடங்கிய நாளாகும். வசந்த காலத்தைத் தன்னோடு கொண்டு வரும் காமதேவனை நினைவுகூறும் நாளாகும்.

மாசி மாதத்தில் மௌனி அமாவாசை தினத்தில் மௌன விரதம் இருந்தால் பல நன்மைகள் அளிக்கும் என்றும், அன்று கங்கா ஸ்நானம் அனைத்துப் பாவங்களை அழிக்கும். மாசி மாத மக நட்சத்திர பௌர்ணமி நாளே மாசிமகமாகும்.சிவபக்தனான திருவண்ணாமலை ராஜாவிற்கு குழந்தை இல்லாத காரணத்தால் சிவபகவானே அவருக்கு கடைசிக் காரியத்தை செய்வதற்காக குழந்தை வடிவில் இறுதிக்காரியங்களைச் செய்தார். யாரொருவர் இந் நாளில் சமுத்திர ஸ்நானம் செய்கின்றனரோ, அவர்களுக்கு மோக்ஷம் கிடைக்கும் என்றும் அருளினார். இன்றும் ஒவ்வொரு வருடமும் மாசி மகம் நாளில் சிவ பெருமான் ராஜாவிற்கு தர்ப்பணம் செய்ய சமுத்திர கரைக்கு வருகிறார்.

மாசி மாதத்தில்தான் காஞ்சி காமாக்ஷி அம்மன் மாசி பூரம் திருவிழாவான பிரம்மோத்ஸவம் நடைபெறும். கேரளாவில் உள்ள சோட்டாணிக்கரை பகவதி கோயிலின் மாசி மாத "மாசி மகம்" திருவிழா பிரசித்தி பெற்ற ஒன்றாகும். அன்று தேவியைத் தரிசித்தால் நீண்ட ஆயுள், திருமண பாக்கியம், குழந்தை பாக்கியம் முதலியவை கிடைக்கும். மாசி மகம் அன்று கும்பகோணம் மகாமக குளம், ஸ்வாமி தீர்த்தவாரி உத்ஸவம், ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாத ஸ்வாமி தெப்போத்ஸவமும் மிகவும் கோலாகலமாக நடைபெறும்.

எனவே, நாமும் இம்மாசி மாதத்தில் பூஜை, கோயில் தரிசனம், சமுத்திர ஸ்நானம் செய்து பாவங்களைப் போக்கி நலன்கள் பல பெறுவோம்!

– முனைவர் பா. காயத்ரி, அம்பத்தூர்

# पाठ :एक त्रिंशः ஸம்ஸ்க்ருதம் அறிவோம் பாடம்-31

| | | | | | |
|---|---|---|---|---|---|
| युष्माभिः | = உங்களால், உங்களோடு | मास्तु | = போகட்டும் | प्रष्टुम् | = கேட்டல், கேட்பதற்கு |
| मार्जालेन | = பூனையினால், பூனையோடு | भवति | = ஆகின்றான் | पीत्वा | = குடித்து |
| मूषकैः | = எலியினால், எலியோடு | दृष्ट्वा | = பார்த்து | वसति | = இருக்கின்றான் |
| युद्धम् | = போர், யுத்தம், சண்டை | द्रष्टुम् | = பார்த்தல் | चलति | = நகர்ந்து கொண்டிருக்கிறான் |

## வினாக்கள்

1. मूषकाः मार्जालैः युद्धं कुर्वन्ति।
2. वृक्षाः चलन्ति।
3. बालकाः क्षीरं पीत्वा अङ्गणेषु चरन्ति।
4. श्वः प्रातः अहं त्वां द्रष्टुम् आगमिष्यमि।
5. त्वम् अद्यः मम जनकं दृष्ट्वा आगच्छ।
6. अस्मदनुजः ब्राह्मणान् प्रष्टुम् अगच्छत्।
7. एते तत्र किं करिष्यन्ति वा पृष्ट्वा आगच्छ।
8. मास्तु! अहमेव गमिष्यामि। त्वम् अत्र वस।
9. एषः बालकः श्वः ब्राह्मणः भविष्यति।
10. त्वम् इदानीं कुत्र गन्तुं चलसि वा वद।


1. நீங்கள் எங்களோடு போர் செய்வீர்களா?
2. நான் அவ்விடத்திற்குப் போக வேண்டும்.
3. நீங்கள் இந்த வேளை நெய் கொண்டு வர வேண்டும்.
4. அவர்கள் எங்கள் வீட்டைப் பார்க்க வேண்டும்.
5. யாரைக் காண்பதற்குச் சென்றாய்?
6. இவரை அழைத்து எங்கள் தந்தையை இவ்விடத்திற்கு வரச்சொல்.
7. போகட்டும். நீ எதற்கு அவனோடு சண்டை செய்தாய்?
8. நீ சிறுவனல்லவா!
9. விரைவாக நகரு யாரோ வந்து கொண்டிருக்கிறார்கள்.
10. நாம் இந்த வேளை அவர்கள் வீட்டிற்குச் சாப்பிடுவதற்குப் போக வேண்டும். விரைவாக குளி.

## விடைகள்

1. எலிகள் பூனைகளோடு சண்டை இடுகின்றன.
2. மரங்கள் நகருகின்றன.
3. சிறுவர்கள் பால் குடித்து முற்றத்தில் நடந்து கொண்டிருக்கிறார்கள்.
4. நாளை காலை நான் உன்னைக் காண்பதற்காக வருவேன்.
5. நீ இன்று எங்கள் தந்தையைப் பார்த்து வா.
6. எங்கள் தம்பி பிராம்மணர்களைக் கேட்பதற்கு வந்தான்.
7. இவர்கள் அங்கு என்ன செய்கிறார்களோ கேட்டு வா.
8. போகட்டும்! நானே போகிறேன். நீ இங்கு இருப்பாயாக.
9. இந்தச் சிறுவன் நாளை பிராம்மணன் ஆகலாம்.
10. நீ இப்போது எங்கு போவதற்காக நகருகிறாய். சொல்வாய்.

1. यूयम् अस्माभिः युद्धं करिष्यन्ति वा?
2. मया तत्र गन्तव्यम्।
3. युष्माभिः इदानीम् आज्यं स्वीकृत्या आगन्तव्यम्।
4. तैः अस्मदगृहं द्रष्टव्यम्।
5. केषां दर्शनार्थं अगच्छः?
6. एतान् आहूय अस्मद् पितरम् अत्र आगन्तव्यम् इति वद।
7. मास्तु! त्वं किमर्थं तेन युद्धं कृतवान्?
8. त्वं बालकः खलु।
9. शीघ्रं चल केऽपि आगच्छन्ति।
10. अद्य अस्माभिः तेषां गृहे भोजनार्थं गन्तव्यम् शीघ्रं स्नानं कुरुत।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி,
தொகுப்பு : திரு.கே. சூர்ய நாராயணா, தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்



# வேதங்கள் காட்டும் கணிதம்



- டாக்டர் எம்.எல். ராஜா, ஈரோடு, 9443370129

வேதம் என்ற சொல், "வித்" என்ற சமஸ்கிருதச் சொல்லை அடிப்படையாகக் கொண்டது. வித் என்பதற்கு அறிவு, ஞானம் என்பது பொருள். ஆகவே வேதங்கள் அறிவு மற்றும் ஞானத்தின் உறைவிடம் ஆகும். இதனாலேயே வேதங்கள் ஆத்ம ஞானத்துடன் விஞ்ஞானத்தையும் நமக்கு அள்ளித் தருகின்றன. விஞ்ஞானம் என்பது இயற்பியல், வேதியியல், வான் அறிவியல் ஆகியவற்றோடு கணிதவியலும் கொண்டதாகும். ஆகவே வேதங்கள் கணிதத்தின் நுட்பமான அடிப்படைக் கணக்கீடுகளைத் தன்னகத்தே கொண்டு உள்ளன. இக்கணக்கீடுகளை இங்கு நாம் சிந்திக்கலாம்.

## தசம ஸ்தான எண் கணக்கீடு

பத்தின் மடங்காக 100, 1000 என எண்களைக் கணக்கிடும் முறை, பாரதத்தின் மிகப் பண்டைய கண்டுபிடிப்பு ஆகும். இதுவே அனைத்து விஞ்ஞான வளர்ச்சிக்கும் அடிப்படை ஆகும். யஜுர் வேத சம்ஹிதை 17ஆம் அத்தியாயம், இரண்டாம் மந்திரம் இதைத் தெளிவாகக் காட்டுகின்றது. இங்கு எண்கள் ஒன்று முதல் $10^{12}$ (1,00,000,00,00,000 – ஒரு லட்சம் கோடி, ஒரு டிரில்லியன்) முடியக் குறிப்பிடப் பட்டுள்ளன. ஏக (1), தச(10), சதம்(100), சஹஸ்ரம் (1,000), அயுதம் (10,000), ந்யுதம் (1,00,000 – ஒரு லட்சம்), ப்ரயுதம் (10,00,000), அற்புதம் (1,00,00,000 – ஒரு கோடி), ந்யர்புதம் (10,00,00,000), ஸமுத்ர (100,00,00,000), மத்யம் (1,000,00,00,000), அந்த (10,000,00,00,000), ப்ரார்த (1,00,000,00,00,000) என்று இம்மந்திரம், கணித எண்களை 1 லட்சம் கோடி (ப்ரார்த) முடிய, வரலாற்றுக்கு முற்பட்ட, நினைவுக்கு எட்டாத காலத்திலேயே, குறிப்பிட்டு விட்டது. இது வேதங்கள் மானுட உலகிற்கு அளித்த ஒப்பரிய, மிக உயரிய, விலை மதிக்கவொண்ணாத மாபெரும் கொடை ஆகும். இதனை பிரஞ்சு கணிதவியல் நிபுணர் லாப்லேஸ் மிக வியந்து போற்றியுள்ளார்.

யஜுர் வேத சம்ஹிதை 14ஆம் அத்தியாயம், 28–31 மந்திரங்கள், 28ஆம் அத்தியாயம் 24ஆம் மந்திரம், ஒற்றைப்படை எண்களை ஏறு வரிசையில் 1 முதல் 33 முடிய காட்டுகின்றன. யஜுர் வேத சம்ஹிதை 9ஆம் அத்தியாயம் 31–34 மந்திரங்கள், 1 முதல் 17 முடிய உள்ள எண்களை ஏறு வரிசையிலும், யஜுர் வேத சம்ஹிதை 18ஆம் அத்தியாயம் 25ஆம் மந்திரம், 4 முதல் 48 முடிய உள்ள எண்களை, நான்கின் மடங்காகக் குறிப்பிடுகின்றன.

ரிக் வேத சம்ஹிதை, 2ஆம் மண்டலம் 18ஆம் ஸூக்தம், 4–6 மந்திரங்கள், எண்களை 2,4,6,8,10,20,30, 40, 50, 60, 70, 80, 90 மற்றும் 100 எனக் காட்டுகின்றன. அதர்வண வேத சம்ஹிதை 19ஆம் காண்டம், 23ஆம் ஸூக்தம் 1–17 மந்திரங்கள், 4 முதல் 20 முடிய உள்ள எண்களை ஏறு வரிசையில் குறிப்பிடுகின்றன.

## வேதமும் வட்டத்தின் 360 டிகிரி கோணமும்

பூமியானது சூரியனை ஒரு முழுச்சுற்று சுற்றிவர ஆகும் காலம் ஒரு வருடமாகக் கணக்கிடப்படுகின்றது. ஒரு வருடத்தில் பூமியில் எத்தனை சூரிய உதயங்களைக் காண முடியும் என்ற விஞ்ஞானக் கணக்கீட்டை தைத்ரீய ப்ராமணத்தின் 1:5:2:1 மந்திரம் விளக்கி உள்ளது. இக்

கணக்கீட்டை உபவ்யூஷம் என்று இம்மந்திரம் குறிப்பிடுகின்றது. இம்மந்திரம் இன்றும் புண்யாக வசனம் என்ற பெயரில் ஓதப்படுகின்றது.

பூமி தன்னைத்தானே சுற்றி வருவதால், இரவு பகல் ஏற்படுகின்றன. ஒவ்வொரு நாளும் விடியற் காலையில் சூரிய ஒளிக்கதிர்கள் பூமியை வந்தடைகின்றன. உபவ்யூஷக் கணக்கீடு, இதையும், நட்சத்திர உதயத்தையும் இணைத்து, ஒரு வருடத்தில் மொத்தம் எத்தனை முறை காலை சூரிய ஒளிக் கதிர்கள் பூமியை வந்தடைகின்றன என்று கணக்கிட்டு விடும். ஆகவே ஒரு வருடத்திற்கு எத்தனை சூரிய உதயங்கள் என்று தெரிந்து விட்டால், ஒரு வருடத்திற்கு மொத்தம் எத்தனை நாட்கள் என்பதும் தெரிந்து விடும். ஏனென்றால் பூமியானது சூரியனை ஒரு நீள்வட்டப் பாதையில், ஒரு திசை முகமாக மட்டுமே சுற்றி வருகின்றது.

இவ்வாறு கணக்கிடும்போது உபவ்யூஷ முறைப்படி அபமண்டலத்தின் 27 நட்சத்திரங்களில் ஏதேனும் ஒன்று இன்றைய தினம் விடியற்காலை சூரிய உதயத்திற்கு சற்றே முன்பாக கிழக்கே உதயமானால், அதே நட்சத்திரம் ஒரு வருடம் முழுமையாகக் கழிந்த பின்பே, அதாவது பூமியானது சூரியனை ஒரு முழுச்சுற்று சுற்றி வந்த பின்பே மீண்டும் அதே போன்று சூரிய உதயத்திற்கு (4) சற்றே முன்பு உதயமாகும். இவ்வாறு கணக்கிடாமல் ஒரு வருடத்திற்கு 365 (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை 366) சூரிய உதயங்கள் என்று தெரிய வரும்.

இதில் கிருஷ்ண யஜுர் வேத தைத்ரீய சம்ஹிதையின் 7–1–10ஆம் மந்திரம் குறிப்பிடும் "பஞ்ச ராத்ர யக்ஞம்" ஐந்து நாட்கள் (4–6), வருட இறுதியில் நடைபெற்ற பின்பே, அடுத்த புத்தாண்டு துவங்கும். ஆகவே 365–ல் இந்த ஐந்து நாட்கள் கழிந்த பின்பு மீதமுள்ளது 360 நாட்கள் ஆகும். இதை அடிப்படையாகக் கொண்ட, வேதங்கள் ஒரு வட்டத்திற்கு 360 அம்சங்கள் (டிகிரிகள்) எனத் தெரிவிக்கின்றன.

ரிக் வேத சம்ஹிதை முதல் மண்டலம், 164ஆம் ஸூக்தம், 11 மற்றும் 48ஆம் மந்திரங்கள் இக்கணக்கீட்டைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. 48ஆம் மந்திரம் ஒரு சக்கரம் (ஒரு வட்டம், ஒரு வருடம்) அதற்கு 12 வட்டைகள் (12 ராசிகள், 12 மாதங்கள்) மற்றும் 360 ஆரக்கால்கள் (360 டிகிரிகள், 360 நாட்கள்) எனத் தெளிவாக்குகின்றது. 11ஆம் மந்திரம் ஒரு வட்டம் (ஒரு வருடம்) அதற்கு 720 பகல் இரவுகளான இரட்டைகள் (360 நாட்கள்) என்று குறிப்பிட்டுள்ளது.

தொடரும்....

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ஸந்த்$_4$யாமுபாஸ்யாந்திகஸத்தடாகே ஸம்ஸேவ்ய தே$_3$வீம் வரத$_3$ம் ச ஹ்ருஷ்ட: ।*

*நித்யம் தத$_3$ங்கீ$_3$க்ருதகூபதீர்த்தை$_2$: ராமாநுஜார்யஸ்தம தோஷயச்ச ॥*

(28)



**அருகில் இருக்கும் நல்லதொரு குளத்தில் ஸ்நானம், ஸந்த்யா வந்தனம் முதலான காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, பெருந்தேவியையும், பேரருளாளனையும் சேவித்துப் பேரானந்தம் கொண்டவராய், அவ்வரதன் விரும்பிப் பருகிய சாலைக் கிணற்று நீரை தினந்தோறும் தாமே சுமந்து சென்று அளித்து அவனை உகப்பித்து வந்தார்.**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

# ஸ்ரீகிருஷ்ணரை துதித்த பீஷ்மர்




**பீஷ்ம ஸ்துதி பலன்**

நமது பூர்வாசாரியர்கள் போற்றி உகந்த பீஷ்ம ஸ்துதியை நம் மனம், வாக்கு, காயம் அனைத்தையும் கொண்டு நாமும் பாராயணம் செய்து வந்தால் வியாதியிலிருந்து குணமடைதல், பகைவர்களிடம் இருந்து வெற்றிப் பெறுதல், மன அழுத்தத்திலிருந்து விடுபடுதல், சிறந்த ஞானம் பெறுதல் போன்ற சகல நன்மைகளையும் பெறலாம்.


**முகுந்தகிரி**
**ஸ்ரீ உ.வே. அனந்த பத்மநாபாச்சாரியார் ஸ்வாமி, சென்னை.**


கண்ணனுடைய பால்ய லீலைகளிலும், அவனுடைய பேரழகிலும் மயங்கிப் பலர் பலவித மாகப் போற்றி துதித்துள்ளனர். கண்ணனைப் போற்றும் துதிகளில் நம் ஆசாரியர்கள் அனைவரும் கொண்டாடிய உயர்ந்த துதி பீஷ்மர் கண்ணனை ஸ்தோத்திரம் செய்ததாகும்.

மஹாபாரத யுத்தம் முடிந்த பின்னரும் அம்புப் படுக்கையில் இருந்த பீஷ்மர் உத்தராயண புண்ணிய காலத்தை எதிர்பார்த்து உயிரைவிடக் காத்து இருந்தார். அச்சமயத்தில், யுத்தத்தினால் மிக்க மன வருத்தத்தில் இருந்த யுதிஷ்டிரன் வந்தார். தர்ம புத்திரன் வருவதைக் கண்டு தியானத்தை முடித்து அவரிடம் பேசினான் கண்ணன். யுதிஷ்டிரா அம்புப் படுக்கையில் படுத்திருக்கும் பீஷ்மர் என் நினைவாக இருப்பதினால், நானும் அவரை நினைத்துக் கொண்டிருக்கிறேன். தர்மமே வடிவான பீஷ்மர் பூவுலகை விட்டுப் பிரியும் முன்னர் அவரிடம் சென்று தர்மத்தை அறிவாயாக என்று கூறியதுடன், வியாசர், பாண்டவர்கள், திரௌபதி ஆகியோரை அழைத்துக் கொண்டு பீஷ்மரைக் காண விரைந்தார்.

ஒருபுறம் பரம்பொருளான கண்ணனையும், மறுபுறம் பரம்பொருளைக் காட்டிக்கொடுத்த தன்னுடைய ஆசார்யன் வியாசரையும் கண்டு அம்புப்படுக்கையில் இருந்த பீஷ்மருக்கு ஆனந்தத் தினால் கண்ணீர் பெருகியது. அப்பொழுது கண்ணன் அனுகிரஹத்தினால் ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ர நாமம் முதலிய பல உபதேசங்களைச் செய்த பீஷ்மர் இறுதியில் கண்ணன் விஷயமாக பீஷ்ம ஸ்துதியினை அருளினார்.

பீஷ்ம ஸ்துதியை அருளிச் செய்தபடியே, கண்ணனை சேவித்துக் கொண்டே பீஷ்மர் தன்னுடைய தேகத்தை விடுத்தார். தன்னுடைய மனம், வாக்கு, கண் என அனைத்தையும் கண்ணனிடம் அர்ப்பணம் செய்த பீஷ்மரின் ஆத்மாவானது ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவான கண்ணனின் திருவடிகளை அடைந்தது.

**பீஷ்ம ஸ்துதி**

*த்ரிபுவந கமநம் தமாலவர்ணம்*
*ரவிகர கௌரவராம்பரம் ததாநே।*
*வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம்*
*விஜயஸகே ரதிரஸ்து மே அநவத்யா॥* (1)

மூன்று உலகங்களிலும் மிக்க அழகியதும், தமால மரம் போல் நீல நிறமுடையதும், இளஞ் சூரியனுடைய கிரணம் போன்ற பீதாம்பரத்தை அணிந்தும், கூந்தல் பரவித் தாமரை போன்ற முகமுடையதுமாகிய மேனியை அடைந்து விளங்கும் கிருஷ்ணனிடத்தில் எனது மாசற்ற சித்தாந்தத்தின் செயல் நிலை கொள்ள வேண்டும்.

*யுதி துரகரஜோவிதும் ரவிஷ்வக்*
*கசலுலிதஸ்ரமவார்யலங்க்ருதாஸ்யே।*
*மம நிசிதசரைர் விபித்யமாந*
*த்வசி விலஸத்கவசே (அ) ஸ்து க்ருஷ்ண*
*ஆத்மா॥* (2)

போர்க்களத்தில் தேரை நடத்துகையில் குதிரைகள் ஓடும் பொழுது மேலே கிளம்பிய தூசிகள் கண்ணனின் முகத்திலும், கூந்தலிலும் விழுந்தன. பகைவர்களைக் கொல்வதற்கு ஆர்வத்துடன் தேரை ஓட்டுகையில் கட்டவிழ்ந்த கூந்தல்கள் கண்ணனின் கன்னங்களில் பரவின. அவற்றை கட்டுவதற்குக் கூட அவகாசமில்லாமல், பகைவர்களை அழிப்பதில் கண்ணன் ஊக்கத்துடன் விளங்கினான். சிரமத்தில் வியர்வை முத்துக்கள் ஒழுகிய போதும், முகம் அழகு குன்றாமல் அலங்காரத்துடன் விளங்கின. மேலும், என்னுடைய கூரிய கணைகள் பாய்ந்து கவசம் உடைந்து உடல் பிளக்கப்பட்ட ரத்தத்தின் பிரவாகம் பெருகிய, ஸ்ரீகிருஷ்ணரிடம் என்னுடைய மனம் லயிக்க வேண்டும்.

*ஸபதி ஸகிவசோ நிசம்ய மத்யே*
*நிஜ பரயோர் பலயோ ரதம் நிவேச்ய ।*
*ஸ்திதவதி பரஸைனிகாயுரக்ஷ்ணா*
*ஹ்ருதவதி பார்த ஸகே ரதிர் மமாஸ்து ॥* (3)

போர்க்களத்தில் சென்றவுடன் நண்பனாகிய அர்ஜுனனுடைய வசனத்தைக் கேட்டு, தன்னுடைய மற்றும் பகைவர்களின் சேனைகளுக்கு இடையே தேரினை நிறுத்தி, சுற்றிலும் பார்வையிட்டதனால் பகைவீரர்களின் ஆயுளை அபகரித்து நின்ற பார்த்த சாரதியினிடம் என் மனதின் பற்று நிலைக்க வேண்டும்.

*வ்யவஹித ப்ருதநாதமுகம் நிரீக்ஷ்ய*
*ஸ்வஜநவதாத் விமுகஸ்ய தோஷபுத்த்யா।*
*குமதிமஹரதாத்மவித்ய யா:*
*சரணரதி: பரமஸ்ய தஸ்ய மே (அ)ஸ்து॥* (4)

தூரத்தில் இருந்த சேனையைக்கண்டு அவர்களைக் கொல்லுதல் பந்துக்களின் வதை ஆகையால் பாவத்திற்குக் காரணம் என்ற புத்தியினால் தனது கடமையில் அதர்ம புத்தியை அடைந்த அர்ஜுனனுக்கு தர்ம புத்தியையும், ஆத்ம தத்துவத்தையும் உணர்த்தி, அவனுடைய அஞ்ஞானத்தை எவர் அகற்றினாரோ, அந்த பரமனுடைய பாதங்களில் எனக்குப் பற்று நிகழ வேண்டும்.

*ஸ்வநிகமமபஹாய மத்ப்ரதிஜ்ஞாம்*
*ருதமதிகர்துமவப்லுதோ ரதஸ்த: ।*
*த்ருதரதசரணோப்யயாச் சலத்கு:*
*ஹரிரிவ ஹந்துமிபம் கதோத்தரீய: ॥* (5)

*சிதவிசிகஹதோ விசீர்ணதம்ச:*
*க்ஷதஜபரிப்லுத ஆததாயிநோ மே ।*
*ப்ரஸபமபிஸஸார மத்வதார்த்தம்*
*ஸ பவது மே பகவாந் கதிர் முகுந்த: ॥* (6)

தேரில் வீற்றிருந்த அந்த ஸ்ரீகிருஷ்ணர் வேதத்திற்குச் சமமான தம்முடைய பிரதிக்ஞையை விட்டுவிட்டு, என்னுடைய பிரிதிக்ஞையை உண்மையாக நிறைவேற்றுவதற்குத் தேரிலிருந்து கீழே குதித்து, கையில் சக்கரத்தைத் தரித்து, யானையைக் கொல்வதற்குச் சிங்கம் பாய்வது




*அச்யுதம் கேசவம் விஷ்ணும் ஹரிம்*
*ஸத்யம் ஜநார்த்தனம் ।*
*ஹம்ஸம் நாராயணம் க்ருஷ்ணம்*
*ஜபேத் துஸ்ஸ்வப்ன சாந்தயே ॥*

**அச்சுதன், கேசவன், விஷ்ணு, ஹரி, சத்தியன், ஜநார்த்தனன், அன்னம், நாராயணன், கிருஷ்ணன் ஆகியோரின் பெயர்களை, கெட்ட கனவின் விளைவுகள் ஏற்படாதிருக்க ஜபிக்க (திரும்பத் திரும்பச் சொல்ல) வேண்டும்.**

போல, பூமியை நடுங்கச் செய்து கொண்டு, தமது மேல் வஸ்திரம் கீழே விழுந்ததைக்கூட உணராதவராக எனக்கு நேரே பாய்ந்தாரன்றோ! என்னுடைய கூரிய அம்புகளால் அடிக்கப்பட்டு, கவசம் பிளந்து, உடலில் ரத்தப்பெருக்குடன் அந்த முகுந்தர், ஆயுதம் தாங்கியிருந்த என்னைக் கொல்வதற்கு விரைந்தார். அந்த முகுந்தனே எனக்குக் கதி.

*விஜயரத குடும்ப ஆத்ததோத்ரே*
*த்ருதஹயரச்மிநி தச்ச்ரியேக்ஷணீயே|*
*பகவதி ரதிரஸ்து மே முமூர்ஷோ:*
*யமிஹ நிரீக்ஷ்ய ஹதா கதா: ஸ்வரூபம்||* (7)

அர்ஜுனனுடைய தேரே தாம் காப்பாற்ற வேண்டிய குடும்பம் என்று மனதில் உறுதி கொண்டவரும், குதிரைகளை ஓட்டுவதற்கு சவுக்கைக் கையில் பிடித்தவரும், அந்தக் காட்சியின் அழகினாலேயே எல்லோரது மனத்தையும் கவர்ந்தவரும் ஆகிய அந்த பகவானிடத்தில் கடைசிக்காலத்தில் என் மனம் லயமடைய வேண்டும். ஏனெனில் போர்க்களத்தில் கணைகளால் அழிக்கப்பட்ட வீரர்கள் யாவரும் அந்த பகவானை கண்களால் பார்த்ததனால் முக்தியை அடைந்தனரன்றோ!

*லலித கதி விலாஸ வல்குஹாஸ-*
*ப்ரணய நிரீக்ஷண கல்பிதோருமாநா:|*
*க்ருதமநுக்ருதவத்ய உந்மதாந்தா:*
*ப்ரக்ருதிமகந் கில, யஸ்ய கோபவத்வ:||* (8)

அந்தக்கிருஷ்ணருடைய அழகிய நடை, விளையாட்டு, புன்னகை, அன்பார்ந்த பார்வையால் தங்களிடம் அவருடைய அன்பு நிறைந்ததனாலும், தங்களுடைய அந்த நடை முதலியவற்றை அவர் ஏற்றதனாலும், அது போல் அவர் செய்வதனாலும், அவருடைய அன்பிற்கு பாத்திரர்களாகிய கோபியர் ஆனந்தத்தை அடைந்து, அவரது அருளினால் முக்தியை அடைந்தனர்.

*முநிகணந்ருபவர்ய ஸங்குலேந்த:*
*ஸதஸி யுதிஷ்டிர ராஜஸூய ஏஷாம்|*
*அர்ஹணமுபபேத ஈக்ஷணீயோ*
*மம த்ருசிகோசர ஏஷ ஆவிராத்மா ||* (9)

முனிவர்களின் கூட்டங்களும் சிறந்த அரசர்களும் நிரம்பிய தர்மபுத்திரருடைய ராஜஸூய யாகத்தில் அவர்கள் அனைவரும் புகல முடியாத அழகின் சிறப்பு, புன்னகையின் புகழ் எல்லையற்றது. கருணை பிரவகிக்கும் கடாக்ஷம் என்று பலவாறாக சிலாகித்து உபசாரங்களை அளித்தனர். அவற்றைப் பெற்று அருள்புரிந்த அந்தப் பரமன், இந்தத் தருணத்தில் எனக்குக் காட்சியளித்தாரென்றோ! என்னுடைய பாக்கியம் அளவு கடந்தது.

*தமிமமஹமஜம் சரீரபாஜாம்*
*ஹ்ருதி ஹ்ருதி திஷ்டிதமாத்மகல்பிதாநாம்|*
*ப்ரதித்ருசமிவ நைகதார்கமேகம்*
*ஸமதிகதோஸ்மி விதூதபேதமோஹ: ||* (10)

பகவான் படைத்த பிராணிகளின் ஒவ்வொரு இதயத்திலும் விளங்கும், பிறப்பற்ற அந்த பரமனை ஒருவன் என்றே, அவித்யை நீங்கிய நான் நன்குணர்ந்தேன். ஆகாயத்தில் விளங்கும் சூரியன் ஒன்றுதான், ஒவ்வொருவருடைய கண்ணுக்கும் புலப்படுகிறது. பார்க்கிற கண்கள் அநேகமாயினும், பார்க்கப்பட்ட சூரியனுக்கு வேற்றுமை எவ்வாறு இல்லையோ, தண்ணீர்ப் பாத்திரங்கள் பலவற்றில் பிரிதிபிம்பமாகக் காணும்போது சூரியனுக்கு மாறுபாடு எவ்வாறு இல்லையோ அதுபோல ஒரே பரமாத்மா பற்பல இதயங்களிலும் பலரால் காணப்பட்ட போதிலும் அவன் ஒருவன்தான் என்ற உறுதியான ஞானத்தை அடைந்தேன். ஆகையால் பேறு பெற்றவனானேன்.

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 91க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஸ்ரீ | நி | 2 வா | ச | ன் | ன் | ம | ரா | ல | 3 ப |
| ரெ | | 4 ம | ச் | ச | ல | 5 ஸ் | வா | தி | த் |
| ங் | | ன | | டே | பா | | 6 கூ | ர் | ம |
| 7 க | ண் | ண | ன் | க | 8 கோ | 9 வ | | | நா |
| ன் | | ள் | வ | ங் | ம | ரா | சு | ர | 10 ப |
| ண | | மா | த | 11 வெ | 12 ரா | 13 க | ல் | 14 கி | ன் |
| ய | 15 தி | ரு | 16 மா | ல் | ம | | | ரு | |
| ரா | | 17 பெ | | | ன் | | ணு | ஷ் | 18 வி |
| 19 நா | | 20 ந | ர | சி | ம் | ம | ன் | ண | |
| கே | ச | ன் | 21 வ | ர | த | ரா | ஜ | ன் | |

# சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்

# மணி(சிகை)முடி

- படிமக்கலைஞர் ப.சரவணன்,
குடந்தை, 8610819456.

மணி முடியையும் (பதவி), தலை முடியையும் (சிகை) வைத்து மானுட வாழ்வியலின் எதார்த்தங்களை எடுத்துரைக்கும் மகாபாரத இதிகாசம் பல தத்துவங்களை தன்னுள் கொண்ட ஒரு புராண காவியமாகும்.

தேரோட்டி மகன் என்பதாலும், மணி முடி இல்லை என்பதாலும் வில் போட்டியில் கலந்து கொள்ள உனக்குத் தகுதி இல்லை என்று சபையினர் முன்னிலையில் பாண்டவர்கள் கர்ணனை அவமானப்படுத்தினர். அதனைக் கண்ட மாமன்னன் துரியோதனன் உடனே தனது அதிகாரத்தில் உள்ள ஒரு நாட்டின் மன்னனாக பதவி தந்து மாவீர கர்ணனை அச்சபையினர் முன்னே மணி முடி சூட்டி மகிழ்ந்ததும், திரௌபதி தன் சபதம் நிறைவேறும் வரை தன் சிகையை முடிய மாட்டேன் என்று சொன்னதும், கௌரவர்களின் தங்கை துச்சலையின் கணவனான




தனது குருவின் மகனான அஸ்வத்தாமனின் உயிரை எடுக்காமல் தலைமுடியை அறுத்து எடுக்கும் அர்ச்சுனன் மிக அரிதான முப்பரிமாண சிற்ப வடிவம் - வேலூர்

மன்னன் ஜயத்ரதன் திரௌபதியின் மீது ஆசைப்பட்டு அவளைக் கடத்திச் செல்ல முயற்சி செய்ய, பாண்டவர்கள் அவனைப் பிடித்து இழுத்து வந்து அவனின் தலையில் உள்ள சிகையை ஐந்து சிறு சிறு குடுமிகளாகப் பிரித்து வெட்டப்பட்டு, மற்ற முடிகளை மழித்து அதனையே தண்டனையாக வழங்கினார்கள் என்பதும் மகாபாரத இதிகாசத்தில் வரும் மணிமுடி, முடி சம்பந்தப்பட்ட சில நிகழ்வுகளாகும்.

இக்காவியத்தில் உலா வரும் ஒருவன்தான் இந்தச் சிகை இழந்த சிரஞ்சீவி அஸ்வத்தாமன்.

பாரதப் போரின் 17ஆம் நாள் பாசறையில் துரியோதனன் பீமனால் தாக்கப்பட்டு, கால்கள் உடைந்து உடல் வலியுடனும், மனக்கவலையாலும் துன்பத்தில் துடித்துகொண்டு இருந்தபோது அவனை துரோணர் மகனான அஸ்வத்தாமன் சந்தித்து தங்களை இந்நிலைக்கு உள்ளாக்கியவர்களை பழி வாங்காமல் விட மாட்டேன் என்றுச் சொல்லிப் புறப்பட்டுச் சென்றான்.

சென்றவன் அன்றைய தினம் நள்ளிரவில் பாண்டவர்களின் பாசறைக்குள் ஒரு கள்வனை போல் உள்ளே நுழைந்தான். அங்கு ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்த பாண்டவர்கள் போல் தோற்றம் உள்ள உபபாண்டவர்களான ஐவரையும் பாண்டவர்கள் என நினைத்து அவர்களின் தலையை வெட்டி வீழ்த்தினான். உபபாண்டவர்கள் இறந்த செய்தியைக் கேட்டுக் கலங்கித் தவித்தாள் திரௌபதி. அதனைக் கண்ட அர்ஜுனன் அஸ்வத்தாமனின் ஈனச் செயலுக்காக அவனது சிரசைக் கொய்து உங்களின் காலடியில் போடுகின்றேன் எனச் சூளுரைத்தான்.

அதன் பின்னர் ஸ்ரீகிருஷ்ணருடன் தேரில் ஏறிச் சென்று, அஸ்வத்தாமனுடன் போரிட்டு அவனைச் சிறைப்பிடித்து திரௌபதி முன் நிறுத்தினான் அர்ஜுனன். தலை குனிந்து நின்ற அஸ்வத்தாமனின் அவல நிலையைக் கண்ட திரௌபதி மனம் இரங்கி இவர் தங்களின் குருவின் புதல்வர் என்பதாலும்,

புதல்வர்களை இழந்து தவிக்கும் என் நிலமை இவரின் தாயாருக்கு வர வேண்டாம் என்பதாலும் அவனை மன்னிக்கும்படி கூறினாள்.

இதனைக் கேட்ட தருமர் உட்பட அனைவரும் அதற்கு ஒப்புக் கொண்டார்கள். ஆனால் பீமசேனன் மட்டும் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. பல உயிர்களை வஞ்சகமாகக் கொன்ற அவனின் உயிரை எடுத்தாக வேண்டும் என உறுதியாகச் சொல்ல, உடனே ஸ்ரீகிருஷ்ணர், ஒருவனின் மானத்திற்குச் சமமாக கருதுவது உயிராகும். அந்த உயிருக்குச் சமமாக கருதுவது தலையில் உள்ள சிகையாகும் (கேசமாகும்). அதன்படி அவனின் சிகையை எடுப்பது அஸ்வத்தாமனின் மானமான உயிரை எடுப்பதற்கு சமமாகும் என தனது கருத்தைத் தெரிவிக்க, அதனை அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள்.

அதன்படி அர்ஜுனன் அஸ்வத்தாமனின் உயிருக்கும் மானத்திற்கும் சமமான சிரசிலுள்ள சிகையையும், அதனுடன் சேர்த்து ரத்தினத்தையும் தனது வாளால் வெட்டி எடுத்து திரௌபதியின் காலடியில் சமர்ப்பித்து தனது சபதத்தை நிறைவு செய்து கொண்டான் என்பது மகாபாரத இதிகாசம் எடுத்துரைக்கும் ஒரு நிகழ்வாகும். சிரஞ்சீவி என்றாலும் தவறு செய்தால் இறைவன் சபையில் மரணத்திற்கு நிகரான தண்டனை உண்டு என்பதை உலகுக்கு உணர்த்த கிருஷ்ண பகவான் நடத்திய லீலை தான் இது என்று சொன்னால் அது மிகையாகாது.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் நமது முன்னோர்கள் சிகை எடுக்கும் அர்ஜுனன் பாணியைத்தான் இன்று வரை மறக்காமல் அதே போல் தொடர்ந்து கடைபிடித்து வருகிறார்கள். அதனை, தங்களுடைய ஊர்களில் மன்னிக்க முடியாத குற்றங்கள் செய்த குற்றவாளிகளை தண்டிக்க வழங்கும் தண்டனைகளில் ஒன்றாக தலையில் உள்ள சிகையை (மழித்து) மொட்டை அடித்து கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி கழுதை மேல் ஏற்றி ஊர் முழுவதும் சுற்றி வருவதை பெரும் தண்டனையாக வழங்கி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தக் கட்டுரையுடன் உள்ள மகாபாரத காவிய நிகழ்ச்சியைக் கண்முன் நிறுத்தும் முப்பரிமாணம் உள்ள மிக அரிதான இச்சிற்பம் வேலூரில் உள்ள ஜலகண்டேஸ்வரர் ஆலயத்திலுள்ளது என்பது கூடுதல் சிறப்பாகும்.

தொடர்ந்து அலசுவோம்...




**திருமலையில் இலவசமாக ஆர்.ஓ. முறைப்படி ஆங்காங்கே குடிநீர் நிறுவி பக்தர்களின் தாகம் தீர்க்கக் கொண்டு வந்ததே "தி.தி.தே. ஜலப் பிரசாத திட்டம்" ஆகும். பக்தர்களின் வசதிக்காக திருமலையில் சுத்திகரிக்கப்பட்ட குடி நீர் அனைத்து இடங்களிலும் கிடைக்கும் விதமாக தி.தி.தே. பக்தர்களுக்காக ஏற்பாடு செய்து உள்ளது.**



**திருமலையில் பக்தர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இலவசமாகச் செல்வதற்கு தகுந்த வகையில் ஸ்ரீவாரி தர்ம ரதம் என்கிற பெயரில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றது. இதன் உதவியால் பக்தர்கள் திருமலையில் பெரும்பாலான இடங்களுக்கும் செல்லலாம். திருமலையில் மட்டும் அல்லாமல் திருப்பதியிலும் இரயில் நிலையத்தில் இருந்து பேருந்து நிலையம், அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு மலைவழிப்பாதை வரை தி.தி.தே. இப்பேருந்தை இயக்கி வருகிறது. இதனால் இரயில் நிலையத்தில் இருந்தும், பேருந்து நிலையத்திலிருந்தும் பக்தர்கள் மலை ஏறும் மார்க்கம் வரை இப்பேருந்தில் சென்று பின்னர் திருமலைக்குச் செல்லலாம்.**



# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

-திரு. எம்.எஸ். சுகுமார்,
சென்னை, 88382 52312.

சென்ற இதழின் தொடர்ச்சி...

**சூத்திரம் 23 :** *''ஈச்வர ப்ரணிதா னாத்வா:''*

ஈசுவரனை பக்தியுடன் சரண் அடைவதை "ஈச்வர பிரணிதானம்" எனக் கூறுகிறார்கள். அந்த ஈசுவரனை சரண் அடைந்தால் விரவிலேயே "சமாதி சித்தி" கிடைத்து விடும். நல்ல குருவும் ஈசுவரனுக்கு சமமானவராவர்.

**சமாதி பாதம் – 51 சூத்திரங்கள்**

சமாதி பாதம் பிராமண, விபர்யய, விகல்ப, நித்ரா, ஸ்மிருதி பற்றி விளக்கி கூறுகின்றது.

**சூத்திரம் 24 :** *''க்லேச கர்ம விபாகாசயைபராம்ருஷ்ட: புருஷ விசேஷ: ஈச்வர:''*

அவித்தை என்ற அஞ்ஞானம், பற்று, பகை, பயம், கர்வம் ஆகிய ஐந்து மனகிலேசங்கள், புண்ணிய பாவம் என்கிற கர்மங்கள், விபாகாசம் – சித்தத்தில் பல ஜன்மங்களாக சேமிக்கப்பட்ட தீவினைகள் ஆகியவை அனாதி காலம் தொட்டே ஜீவன்களிடம் இருப்பவையாகும். ஆனால் ஈசுவரன் இந்த விஷயங்களிலிருந்து விடுபட்டவன். அப்படிப்பட்ட விசேஷமான உத்தம புருஷனை சரண் அடைந்து நற்கதியைப் பெற வேண்டும்.

**சூத்திரம் 25 :** *"தத்ர நிரதிசயம் ஸ்ர்வக்ஞ பீஜம்:"*

இறைவன் ஒப்பற்றவன், மகா வல்லமை பொருந்தியவன், அவனே ஞானத்தின் எல்லை, தர்மம், ஐஸ்வர்யம், புகழ் ஆகிய மகிமைகள் பொருந்தியவன் என்பதை "நிரதிசயம்" என்ற சொல் குறிக்கிறது.

**சூத்திரம் 26 :** *"பூர்வேஷாமபி குரு: காலேனாவைச் சேதாத்:"*

பிரம்மா சிருஷ்டி அனைத்திற்கும் மூல காரணமாக இருப்பதால் முன்னோருக்கும் முன்னோராகவும், முதல்வனாகவும், குருவாகவும், காலத்திற்கு அப்பாற்பட்டவராகவும் இருக்கின்றார். காலத்திற்கும் காலனாக இருக்கின்றார்.

**சூத்திரம் 27 :** *"தஸ்ய வாசக: ப்ரணவ:"*

அந்த ஈசுவரனை எந்த ஒலியை அடிப்படையாக வைத்து குறிப்பிடுவது? ஓம் என்கிற "பிரணவ ஒலி"யே இறைவனைக் குறிக்கும் ஒலியாகும். அகாரம், உகாரம், மகாரம் ஆகிய இந்த மூன்று அட்சரங்களின் சேர்க்கையாகும்.

**சூத்திரம் 28 :** *"தஜ்ஜபஸ்ததர்த்த பாவனம்:"*

ஓங்கார ஜபத்தை மனத்தில் நிலை நிறுத்தி ஈசுவரனை சதாசர்வ காலமும் தியானித்து திருவடிகளை சரண் அடைந்தால் நிச்சயம் கைவிடமாட்டான். ஆத்ம ஜோதியைக் காண யோக சாதகனுக்கு வழிகாட்டுவான்.

**சூத்திரம் 29 :** *"தத: ப்ரத்யக் சேதனாதிகமோ அப்யந்தராயாபாவச்ச:"*

ஈசுவர கிருபையால் யோக சாதனையில் உண்டாகும் தடைகள், விக்னங்கள் அழிந்து போகும். ஈசுவரனை சரண் அடைந்து விக்னங்கள் அழிந்த பின் "ஆத்ம சொரூப உணர்வு" ஏற்படும். அதுவே இறுதி நிலையாகும்.

சூத்திரம் தொடரும்....



# ரோஜா மலர்



ரோஜா மலர்கள் அழகானது மட்டுமல்ல. அற்புதமான மருத்துவ குணங்களையும் கொண்டுள்ளன.


தெலுங்கு மூலம்:
டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம்:
திருமதி வி.உஷா, 99850 02156


### முகத்தை புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க

200 மி.லி. தண்ணீரில் சிறிது ரோஜா பூக்களை இட்டு மூடி வைத்து, ஒரு மணி நேரம் கழித்து வடிகட்டி அந்நீரினால் முகத்தைக் கழுவி வந்தால், முகம் புத்துணர்ச்சியுடன் இருக்கும்.

### மன அழுத்தம், பதற்றம் நீங்க

ரோஜா இதழ் பொடி, சுகந்தி பொடி, அஸ்வகந்தா பொடி போன்றவற்றை 20 கிராம் அளவு எடுத்துக் கொண்டு, 60 கிராம் கற்கண்டு பொடியுடன் சேர்த்து நாள்தோறும் காலை வெறும் வயிற்றில் மற்றும் இரவு படுக்கும் முன் 100 மி.லி. அளவு நீரில் அரை டீஸ்பூன் கலந்து உட்கொண்டால் இப்பிரச்சனை நீங்கும்.

### உடல் சூட்டைக் குறைக்க

100 மி.லி. நீரில் 20–30 மி.லி. ரோஸ் வாட்டர், ஒரு டீஸ்பூன் சர்க்கரை, ஓரிரண்டு டீஸ்பூன் தேன், 50 மி.லி. தயிர், ஒரு ஏலக் காய் பொடி கலந்து நன்றாக கடைந்து, அதனுடன் 3,4 புதினா இலைகள் சேர்த்து குடித்தால் உடல் சூடு குறைந்து குளிர்ச்சி ஏற்படும். வயிற்றில் எரிச்சல், குமட்டல், வயிற்றுப் போக்கு குறையும். வெயில் காலத்தில் ஏற்படும் பலவிதமான நோய்க ளுக்கு அருமருந்தாக இது பயன்படுகிறது.

### சிறுநீரகக் கோளாறுகள் நீங்க

நாள்தோறும் 200 மி.லி. நீரில் 2–3 ரோஜாப் பூவின் இதழ்களைப் போட்டு ஒரு டீஸ்பூன் சர்க்கரையுடன் சேர்த்து மிக்ஸியில் நன்கு அரைத்து உட்கொள்ள வேண்டும். இவ் வாறு காலை மாலை உட்கொண்டால் சிறுநீரகக் கோளாறு கள் நீங்கும்.

### முகத்தில் கரும்புள்ளிகள் குறைய

ரோஜாப் பூ பொடியையும், ஸ்ரீகந்தம் பொடியையும் சம அளவில் எடுத்துக் கொண்டு தேவையான அளவு பால் மற்றும் எலுமிச்சை சாறு சேர்த்து ஒரு நாளைக்கு ஒரு முறை முகத்தில் பூசிக் கொண்டு ஒரு மணி நேரம் கழித்து கழுவி வந்தால் நற்பலன் கிடைக்கும்.

### நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க

ஒரு கண்ணாடி பாட்டிலில் 100 கிராம் உலர்ந்த ரோஜா மலர்களின் இதழ்கள், 100 கிராம் சர்க்கரை மற்றும் அதனுடன் 200 மி.லி. தேன் சேர்த்து, நன்கு கலந்து மூன்று நாட்கள் வெயிலில் வைக்க வேண்டும்.

பின்னர் காலை, இரவு நேரங்களில் உணவு உண்பதற்கு 1 மணி நேரம் முன்பு ஒரு டீ ஸ்பூன் அளவு உட்கொண்டால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

### மலச்சிக்கல் குறைய

50 கிராம் உலர்ந்த ரோஜா மலர்களின் பொடி, 50 கிராம் சுளாமுகி பொடி, 10 கிராம் சைந்தவலவணப் பொடி ஆகியவற்றை நன்கு கலந்து வைத்துக் கொண்டு இரவு நேரம் படுக் கும் முன் இரண்டரை கிராம் முதல் 5 கிராம் வரை 100 மி.லி. நீரில் கலந்து குடித்து வந்தால் இந்த பிரச்சனை நீங்கும்.

ரோஜா மலர்களை உபயோகித்து உடல் நலத்தை பாதுகாக்கும், இரத்தத்தை உற்பத்தி செய்யும் சுவையான குல்கந்து தயாரிக்கப் படுகின்றது, ரோஸ்வாட்டர் மற்றும் பன்னீர் இம்மலரிலிருந்தே தயாரிக் கப்படுகிறது.

**குறிப்பு :**
மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.



# ஸூர்யாஷ்டகம்



ஆதி தேவ। நமஸ்துப்யம் ப்ரஸீத மம பாஸ்கர ।
திவாகர। நமஸ்துப்யம் ப்ரபாகர। நமோஸ்து தே ।। 1

ஸப்தாச்வரத மாரூட ம் ப்ரசண்டம் கச்யபாத்மஜம் ।
ச்வேதபத்மதரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம் ।। 2

லோஹிதம் ரத மாரூடம் ஸர்வலோக பிதாமஹம் ।
மஹா பாபஹரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம் ।। 3

த்ரை குண்யம் ச மஹாசூரம் ப்ரஹ்ம விஷ்ணு மஹேச்வரம் ।
மஹா பாபஹரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம் ।। 4

ப்ரும்ஹிதம் தேஜஸாம் புஞ்ஜம் வாயுராகாச மேவ ச ।
ப்ரபும் ச ஸர்வலோகாநாம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம் ।।5

பந்தூக புஷ்ப ஸங்காசம் ஹார குண்டல பூஷிதம் ।
ஏகசக்ரதரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம் ।। 6

விஷ்வேஷம் விஷ்வகர்தாரம் மஹாதேஜ: ப்ரதீபநம் ।
மஹா பாபஹரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம் ।। 7

ஸ்ரீவிஷ்ணும் ஜகதாம் நாதம் ஜ்ஞாநவிக்ஞாந மோக்ஷதம் ।
மஹா பாபஹரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம் ।। 8

ஸூர்யாஷ்டகம் படேந்நித்யம் க்ரஹபீடா ப்ரணாசநம் ।
அபுத்ரோ லபதே புத்ரம் தரித்ரோ தநவாந்பவேத் ।। 9

அமிஷம் மது பாநம் சய: கரோதி ரவேர்திநே ।
ஸப்தஜந்ம பவேத்ரோகீ ஜந்ம ஜந்ம தரித்ரதா ।। 10

ஸ்த்ரீ தைல மதுமாம்ஸாநி ஸந்த்ய ஜேத்யோ ரவேர்திநே ।
ந வ்யாதி சோகதாரித்ர்யம் ஸூர்யலோகம் ஸகச்சதி ।। 11

## பாராயண பலன்

சூரிய அஷ்டகத்தை சிவபெருமான் போதித்தார். சூரியன் விஸ்வகர்த்தா என்று இந்த ஸ்தோத்திரம் கூறுகின்றது. சூரியனுக்கு எதிரில் நின்று தினமும் சூரியன் உதிக்கின்ற நேரத்தில் இதை பாராயணம் செய்தல் வேண்டும். இந்த ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்வதால் கிரகங்களினால் உண்டாகும் இன்னல்கள் விலகிடும். ஐஸ்வர்யம், சந்தான பிராப்தி கிட்டும். வியாதிகள் நீங்கி நல்வாழ்வு வாழ்வர். துன்பங்கள் தூர விலகும். முக்கியமாக ஞாயிற்றுக்கிழமைகளில் நியமப்படி இந்த ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்வதால் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கப் பெறுவர்.

# ஆதித்ய ஹ்ருதயம்

## தியான சுலோகம்

நமஸ்ஸவித்ரே ஜகதேகசுூஷே ஜகத்ரபசூதி
– ஸ்திதி – நாஸ– ஹேதவே
த்ரயீமயாய த்ரிகுணாத்மதாரிணே
விரிஞ்சி – நாராயண – சங்கராத்மனே



ததோ யுத்த பரிச்ராந்தம் ஸமரே சிந்தயா ஸ்திதம்
ராவணம் சாக்ரதோ த்ருஷ்ட்வா யுத்தாய ஸமுபஸ்திதம் (1)

தேவதைச்ச ஸமாகம்ய த்ருஷ்டுமப்யாகதோ ரணம்
உபகம்யாப்ரவீத்ராமம் அகஸ்த்யோ பகவான் ருஷி: (2)

ராம ராம மஹோபாகோ ச்ருணு குஹ்யம் ஸநாதனம்
யேன ஸர்வானரீன் வத்ஸ ஸமரே விஜயிஷ்யஸி (3)

ஆதித்யஹ்ருதயம் புண்யம் ஸர்வசத்ரு விநாசனம்
ஜயாவஹம் ஜபேன்நித்யம் அக்ஷய்யம் பரமம் சிவம் (4)

ஸர்வமங்கல மாங்கல்யம் ஸர்வபாப ப்ரணாசனம்
சிந்தாசோக ப்ரசமனம் ஆயுர்வர்த்தன முத்தமம் (5)

ரச்மிமந்தம் ஸமுத்யந்தம் தேவாஸுர நமஸ்க்ருதம்
பூஜயஸ்வ விவஸ்வந்தம் பாஸ்கரம் புவனேஸ்வரம் (6)

ஸர்வதேவாத்மகோ ஹ்யேஷ தேஜஸ்வீ ரச்மிபாவன:
ஏஷ தேவாஸுரகணான் லோகான் பாதி கபஸ்திபி: (7)

ஏக்ஷ ப்ரஹ்மா ச விஷ்ணுச்ச சிவ: ஸ்கந்த: ப்ரஜாபதி:
மஹேந்த்ரோ தனத: காலோ யம: ஸோமோ ஹ்யபாம் பதி: (8)

பிதரோ வஸவ: ஸாத்யா ஹ்யச்வினௌ மருதோ மனு:
வாயுர்வஹ்னி: ப்ரஜா: ப்ராண ருதுகர்த்தா ப்ரபாகர: (9)

ஆதித்ய: ஸவிதா ஸுர்ய: கக: பூஷா கபஸ்திமான்
ஸுவர்ண ஸத்ருசோ பானு:ஸ்வர்ணரேதோ திவாகர: (10)

ஹரிதச்வ: ஸஹஸ்ரார்சி: ஸப்தஸப்திர் மரீசிமான்
திமிரோன்மதன: சம்புஸ்த்வஷ்டா மார்த்தாண்ட அம்சுமான் (11)

ஹிரண்யகர்ப்ப: சிசிரஸ்தபனோ அஹஸ்கரோ ரவி:
அக்னிகர்ப்போ அதிதே: புத்ர: சங்க: சிசிரநாசன: (12)

வ்யோமநாத ஸ்தமோபேதீ ருக்யஜுஸ்ஸாமபாரக:
கனவ்ருஷ்டிரபாம்மித்ரோ விந்த்யவீதீப்லவங்கம: (13)

ஆதபீ மண்டலீ ம்ருத்யு: பிங்கல: ஸர்வதாபன:
கவிர்விச்வோ மஹாதேஜா ரக்த: ஸர்வபவோத்பவ: (14)

நக்ஷத்ரக்ரஹதாராணா மதிபோ விச்வபாவன:
தேஜஸாமபி தேஜஸ்வி த்வாதசாத்மன் நமோஅஸ்துதே (15)

நம: பூர்வாய கிரயே பஸ்சிமிமாயாத்ரயே நம:
ஜ்யோதிர் கணானாம் பதயே தினாதிபதயே நம: (16)

ஜயாய ஜயபத்ராய ஹர்யச்வாய நமோ நம:
நமோ நம: ஸஹஸ்ராம்ஸோ ஆதித்யாய நமோ நம: (17)

நம உக்ராய வீராய ஸாரங்காய நமோ நம:
நம: பத்மப்ரபோதாய ப்ரசண்டாய நமோ நம: (18)

ப்ரஹ்மேசானாச்யுதேசாய ஸூர்யாயாதித்ய வர்ச்சஸே
பாஸ்வதே ஸர்வ பக்ஷாய ரௌத்ராய வபு ஷே நம: (19)

தமோக்னாய ஹிமக்னாய சத்ருக்னாயாமிதாத்மனே
க்ருதக்னக்னாய தேவாய ஜ்யோதிஷாம் பதயே நம: (20)

தப்தசாமீகராபாய வஹ்னயே விச்வகர்மணே
நமஸ்தமோ அபிநிக்னாய ருசயே லோகஸாக்ஷிணே (21)

நாசயத்யேஷ வை பூதம் ததேவ ஸ்ருஜதி ப்ரபு:
பாயத்யேஷ தபத்யேஷ வர்ஷத்யேஷ கபஸ்திபி: (22)

ஏஷ ஸுப்தேஷு ஜாகர்தி பூதேஷு பரிநிஷ்டித:
ஏஷ சைவாக்னிஹோத்ரம் ச பலம் சைவாக்னிஹோத்ரிணாம் (23)

வேதாச்ச க்ரதவச்சைவ க்ரதூனாம் பலமேவ ச
யானி க்ருத்யானி லோகேஷு ஸர்வ ஏஷ ரவி: ப்ரபு: (24)

ஏனமாபத்ஸு க்ருச்ச்ரேஷு காந்தாரேஷு பயேஷு ச
கீர்தயன் புருஷ: கச்சிந் நாவஸீததி ராகவ (25)

பூஜயஸ்வைநமேகாக்ரோ தேவதேவம் ஜகத்பதிம்
ஏதத் திரிகுணிதம் ஜப்த்வா யுத்தேஷு விஜயிஷ்யஸி (26)

அஸ்மின் க்ஷணே மஹாபாஹோ ராவணம் த்வம் வதிஷ்யஸி
ஏவமுக்த்வா ததாஅகஸ்த்யோ ஜகாம ச யதாகதம் (27)

ஏதச் ச்ருத்வா மஹாதேஜா நஷ்ட சோகோ பவத்ததா
தாரயாமாஸ ஸுப்ரீதோ ராகவ: ப்ரயதாத்மவான் (28)

ஆதித்யம் ப்ரேக்ஷ்ய ஜப்த்வா து பரம் ஹர்ஷமவாப்தவான்
த்ரிராசம்ய சுசிர்பூத்வா தனுராதாய வீர்யவான் (29)

ராவணம் ப்ரேக்ஷ்ய ஹ்ருஷ்டாத்மா யுத்தாய ஸமுபாகமத்
ஸர்வயத்னேன மஹதா வதே தஸ்ய த்ருதோஅபவத் (30)

அத ரவிரவதந்நிரீக்ஷ்ய ராமம்
முதிதமனா: பரமம் ப்ரஹ்ருஷ்யமாண:
நிசிசரபதி ஸம்க்ஷயம் விதித்வா
ஸுரகண மத்யகதோ வசஸ்த்வரேதி (31)



## பாராயண பலன்

அகத்திய முனிவரால் ஸ்ரீராமருக்கு இந்த ஸ்தோத்திரம் அருளப்பட்டதாக வால்மீகி ராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஸ்தோத்திரம் பாராயணம் செய்வதால் அனைத்து எதிரிகள் மட்டுமின்றி நம்முள் இருக்கும் அகபுற எதிரிகளையும், எதிர் மறை எண்ணங்களையும் போக்க வல்லது. அறம், பொருள், இன்பம், வீடு பேற்றினை அளிக்க வல்லது. இது காயத்ரி மந்திரத்தின் வடிவமாகும். அந்தி நேர வேளையில் இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்தால் காயத்ரி மந்திரத்தை துதித்த பலன் கிடைக்கும். இதை பாராயணம் செய்பவர்கள் இவ்வுலகில் நிலையான செல்வங்களை அடைந்து இறுதியில் முக்தியடைவர்.

திருக்கச்சி நம்பிகள் அருளிய

# தேவராஜ அஷ்டக ஸ்தோத்ரம்



## தனியன்கள்

ஸ்ரீமத் காஞ்சீ முநிம் வந்தே கமலாபதி நந்தநம்|
வரதாங்க்ரி ஸதா ஸங்க ரஸாயன பராயணம் ||

தேவராஜ தயா பாத்ரம் ஸ்ரீகாஞ்சீ பூர்ணமுத்தமம்|
ராமாநுஜமுநேர் மாந்யம் வந்தேஹம் ஸஜ்ஜனாச்ரயம் ||

## ஸ்தோத்ரம்

நமஸ்தே ஹஸ்திசைலேச! ஸ்ரீமந் அம்புஜலோசன:|
சரணம் த்வாம் ப்ரபன்னோஅஸ்மி, ப்ரணதார்த்தி ஹர அச்யுத||

ஸமஸ்த ப்ராணி ஸந்த்ராண, ப்ரவீண கருணோல் பண|
விலஸந்து கடாக்ஷாஸ்தே மய்யஸ்மின் ஜகதாம்பதே||

நிந்திதாசார கரணம் நிவ்ருத்தம் க்ருத்ய கர்மண:|
பாபீயாம் ஸமமர்யாதம் பாஹிமாம் வரத ப்ரபோ||

ஸம்ஸார மருகாந்தாரே துர்வ்யாதி வ்யாக்ர பீஷணே|
விஷய க்ஷுத்ர குல்மாட்யே, த்ருஷா பாதப சாலினி||

புத்ர தார க்ருஹ க்ஷேத்ர ம்ருக த்ருஷ்ணாம்பு புஷ்கலே|
க்ருத்ய அக்ருத்ய விவேகாந்தம் பரிப்ராந்தம் இதஸ்தத:||

அஜஸ்ரம் ஜாத த்ருஷ்ணார்த்தம் அவஸந்நாங்க அக்ஷமம்|
க்ஷீண சக்தி பல ஆரோக்யம், கேவலம் க்லேச ஸம்ச்ரயம்||

ஸந்தப்தம் விவிதைர் து:கைர் துர்வசைர் ஏவமாதிபி:|
தேவராஜ தயாஸிந்தோ தேவ தேவ ஜகத்பதே||

த்வதீக்ஷண சுதாஸிந்து: வீசிவிக்ஷேப சீகரை:|
காருண்ய மாருதா நீதை: சீதலைர் அபிஷிஞ்ச மாம்||

### பாராயண பலன்

காஞ்சி பேரருளாளனான ஸ்ரீவரதராஜ ஸ்வாமிக்கு திருவாலவட்ட கைங்கர்யம் செய்து வந்த காஞ்சி பூர்ணர் என்று அழைக்கப்படும் திருக்கச்சி நம்பிகளால் அருளப்பட்டது வரதராஜ அஷ்டகம். இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்பவர்களுக்கு ஸ்ரீவரத ராஜ ஸ்வாமியின் அருளால் மன அமைதி உண்டாகும். அவர்கள் இவ்வுலகில் உள்ளவரை வேண்டிய இகபர சுகங்கள் பெற்று, இவ்வுடலை விட்டு பிரிந்த பின்னர் உத்தமமான பரமானந்த நிலையை அடைவர்.

# சக்கரவர்த்திகள் கண்ட சக்கரவர்த்தி திருமகன்

ஸ்ரீ உ.வே. எஸ்.ரகுவீர பட்டாசாரியர் ஸ்வாமி,
மதுராந்தகம், 94440 91183



அரசன்! பேரரசன்! கொல்லிக்காவலன்! கூடல் நாயகன்! குடைக்குலசேகரன்! ஆம் சேர நாட்டின் கட்டுப் பாட்டில் பாண்டிய சோழ அரசுகள் இருந்ததால் குல சேகரன் பேரரசன்! முடி சூடும் அரசன்! அவனது எண்ணம் அடி சூடும் அரசுதான். அடியார்களைக் கொண்டாடு வதையே தன் வாழ்நாள் இலட்சியம் எனக் கொண்டவன் கோழியர்கோன். இவன் புவிப் பேரரசன். புவிச் சக்கரவர்த்தி.

கவிசக்கரவர்த்தியாகிய கம்பன் இராம அவதாரத் தால் தனது பிறப்பையே அவதாரமாக்கிக் கொண்டவன். பாரதி மூன்று புலவர்களையே முத்தாய்ப்பாக்கினான். “கம்பனைப் போல் வள்ளுவனைப்போல் இளங்கோவைப் போல்” என. அம்மூவரில் முதல்வனாக கம்பன் கோலோச்சு கிறான். அவன் கவிச்சக்கரவர்த்தி.

இவ்விரு சக்கரவர்த்திகளும் இராம அவதாரத்தை அனுபவிப்பதை ஒரு மேலோட்டப் பார்வையில் அனுபவிப் போம். பெருமாள் திருமொழி எட்டாம் திருமொழி இராமனை தொட்டிலிலிட்டுத் தாலாட்டுவதாக அமை கிறது. முத்தாய்ப்பான முதல் பாசுரம்

*மன்னு புகழ்க் கௌசலை தன் மணி வயிறு வாய்த்தவனே!*
*தென்னிலங்கைக்கோன் முடிகள் சிந்துவித்தாய் செம்பொன் சேர்!*
*கன்னிநன்மா மதிள் புடை சூழ் கணபுரத்து என் கருமணியே!*
*என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ*

முதல் இரண்டு வரிகளிலேயே ஒருவனது பிறப்பும், மற்றொருவனது மரணமும் காட்டப்படுகிறது.

நிலையான புகழை கோசலைக்குத் தேடிக் கொடுத்த இராமன் மகனாகப் பிறந்ததைக் குறிப்பிட்டு விட்டு, அழகிய இலங்கையின் தலைவனான பத்து தலையுடைய இராவணனை அழித்த செய்தி குறிப்பிடப்படுகிறது அடுத்த வரியில்.

திருக்கண்ணபெருமானை குலசேகரன் தன்னுடைய அமுதமாகக் கொண்டாடி தாலாட்டு பாடுகிறார்.

கம்பர் தனது இராமாவதாரத்தில்...

*ஒரு பகல் உலகு எலாம் உதரத்துள் பொதிந்து*
*அருமறைக்கு உணர்வரும் அவரின் அஞ்சனக்*
*கருமுகில் கொழுந்து எழில்காட்டும் சோதியை*
*திருஉறப் பயந்தனன் திறன் கொள்கோசலை*

–பால.திருஅவதாரம் – 284

பிரளய காலத்திலே ஈரேழுபதினான்கு உலகங்களையும் முற்றிலுமாக ஆலிலை மேல் பாலகனாக (கண்ணன்)த் தன் வயிற்றில் வைத்துப் பாதுகாத்தவனை, வேதங்களால் முழுவதுமாக உணர முடியாதவனை, மேகத் தின் கருமையையும் இளந்தளிரின் மென்மை யையும் காட்டும் ஒளி போன்று ஒளிர்பவனை (எப்படிப்பட்ட கோசலை) திறன் கொள் கோசலை பயந்தாள் (பெற்றாள்).

பெரியாழ்வார் யசோதையை மிடுக்கு இல்லாத யசோதை என்கிறார். கண்ணன் தொட்டிலில் கிடந்தால் தொட்டிலை உடைக்கி றான், கையில் எடுத்தால் இடுப்பை

முறிக்கிறான், ஒடுக்கி அணைத்தால் உத ரத்தை உதிரமாக் கிடுவான் என்ப தால் அவனது விளையாட்டு தாங்க முடிய வில்லை என்கிறார்.



மன்னு புகழ் கோசலை என்பதில் ஆழ மான பொருள் உள்ளது. ஆழ்வார் கள் பாசுரங்களில் மன்னு (நிலையான) என்ற சொல் அற்புதமானது. சிலபலச்சோலைகள் சிந்தனைக்கு....

*''மன்னு வடமதுரை மைந்தன்''*
*''பூமன்னு மாது''*
*''பாமன்னு மாறன்''*
*''பல்கலையோர் தாம்''*
*''மன்ன வந்த இராமாநுஜன்''*
*''நாம் மன்னிவாழ''*

கம்பனும் மூன்று பாடல்களில் திருவவதாரம் பற்றிப் பேசுகிறான்.

*மண்மகள் மலர்மகள் மகிழ்ந்திட*
*திருநாளாகிய புனர்ப்பூசம் ஓங்கிட*
*சித்தர்கள் முனிவர்கள், விண்ணோர்கள்,*
*நித்திய சூரிகள் மட்டுமல்ல*
*தருமதேவதையும் மகிழ்ந்ததாம்.*

மன்னு புகழ் கோசலை – இத்தொடர் இராமனது புகழைப் பரக்கக் காட்டுகிறது.

விசுவாமித்திரன் வேள்விக்காக இராம இலக்குமர்களை அழைத்துச் செல்லும்போது ஒரு இரவு! முதல் இரவு! முதல்வனான மூல முதல்வ னோடு விசுவாமித்திரன் கழித்த முதல் இரவு. கதிரவன் கதிர்கள் மெல்ல மெல்ல மண் மகளைத் தழுவும் வேளை.

*''பூர்வாஸந்த்யாப்ரவர்த்ததே''* கனையிருள் மெல்ல மெல்ல நழுவும் நேரம் இராமனையும் இலக்குவனையும் எழுப்ப வேண்டும். எப்படி எழுப்பு வது, பரம்பொருள் என்றறிந்த முனிவன் யோசிக்கி றான். மன்னு புகழ் கோசலை மணி வயிறு மனதில் பளிச்சிடுகிறது.



*''கௌஸல்யாஸுப்ரஜாராம''*
*''கோசலையின் குலமகனே''*

இறுதியில் யுத்த காண்டத்தில் இராமனுடைய கருணை வெளிப்படும் இடமாகிய "இன்று போய் போர்க்கு நாளை வா!" என்ற பாடலில் கூட கம்பன் மன்னு புகழ் கோசலையை எண்ணியே (வாளை தாவுது கோசல நாடுடை வள்ளல்) பேசுவான்.

"மணி வயிறு" என்ற ஆழ்வாரின் தொடர் அற்புத மானது. மணி என்பது ஒளியுடையது; தன்னையும் காட்டிக் கொண்டு தன்னைச் சுற்றியுள்ளவர்களையும் வெளிச்சமிட்டுக் காட்ட வல்லது; மணி வயிறு மணி வண்ணனைத் தாங்கிய வயிறு; மாலே மணிவண் ணனை, ஒளியான மரகத மணியைத் தாங்கிய வயிறு; அதே நேரத்தில் மற்றைய தாயாரைப் பற்றியும் சிந்திக்கச் செய்கின்ற தொடர் இது.

மணிவண்ணனாகிய இராமன்! மணி முடிகளைச் சிந்து வித்த இராமன்! கண்ணபுரத்தின் கருமணி ஆகிய எம்பெருமானையும் கருமணி என்பதனால் அர்ச்சையிலே எழுந்தருளியுள்ளவனை கருமணி என்று குறிப்பிடுவது ஆகம வல்லுநர்கட்கு ஆய்வு செய்ய வாய்ப்பான தொடர்! இராமனும் கோசலைக் கருமணிதான்! அர்ச்சையில் உள்ள கண்ணபுரத்தான் கருவினை மணிதான்.

சோதி என்று கம்பன் கூறுவதும், மணி என்று ஆழ்வார் கூறுவதும் மிகவும் ஆழமானவை தான். கடலிலே மணிகள் ஆழத்திலே தான் கிடைக்கும். சொல்லினால் சொலப்படாத சோதி என்பார் திருமழிசைப்பிரான். "துயரறு சுடரடி" சுடர் அடி என்பார் நம்மாழ்வார். "வடிவார் சோதி" என்பார் பெரியாழ்வார். "பொன் ஆழி" என்பர் பேயாழ்வார். எம்பெருமானே பொன்னப்பன்! மணியப்பன்! முத்தப்பன்! மூத்த அப்பனும் அவனே. அவனும், சுடராழி யான் அவனைப் பற்றிய பாசுரங்களும் வேதங்களும் சுடர் சுருதிகளே!

ஒளி மயமான திவ்யாயுதங்கள், வேதங்கள், எம்பெருமானின் திருமேனிகள் முதலியன இணைவதால் அந்தந்த தலங்களும் திவ்ய தேசங்களாகின்றன.

இப்படிப்பட்ட பிறப்பிலிப் பெருமான், உயர்வறவுயர் நலமுடையவன், மயர் வற மதி நலமருளினான், அயர்வறு மமரர்கள் அதிபதி என்றெல்லாம் கொண்டாடப்படும் இராமனைப் பெற்றவனை,

"மன்னு புகழ் கௌசலை" எனக் கொல்லிக் காவலனான குலசேகரனாரும், "திறன் கொள் கோசலை" எனக் கவிச்சக்கரவர்த்தி கம்பனும் கொண்டாடுகின்றனர். நாமும் அப்பரம்பொருளான சக்கரவர்த்தியைத் துதித்து கொண்டாடி, இன்னருளைப் பெற்றிடுவோம்.

**ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில்,**
**ஸ்ரீநிவாசமங்காபுரம்.**

நாராயணவனத்தில் நடைபெற்ற திருக்கல்யாணத்திற்கு பின்னர் ஸ்ரீநிவாசரும் பத்மாவதி தாயாரும் சந்திரகிரி அருகிலுள்ள அகஸ்தீஸ்வர ஸ்வாமியைத் தரிசித்து விட்டு, புதிதாக திருமணம் செய்து கொண்டோர் ஆறு மாத காலம் மலை ஏறக்கூடாது எனும் காரணத்தால் ஸ்ரீநிவாச மங்காபுரத்தில் தங்கினர். ஆறு மாதம் கடந்த பின் ஸ்ரீநிவாசர் பத்மாவதியுடன் மங்காபுரத்திலிருந்து நடந்து திருமலைக்குச் சென்றதாக ஐதீகம். திருப்பதியிலிருந்து சுமார் 12 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள ஸ்ரீநிவாசமங்கா புரத்திற்கு பேருந்து வசதிகளும் உள்ளன.

**பிரம்மோத்ஸவ நிகழ்ச்சி நிரல்**

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 28-02-2024 | புதன் | -- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 29-02-2024 | வியாழன் | துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 01-03-2024 | வெள்ளி | சிறிய சேஷவாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 02-03-2024 | சனி | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 03-03-2024 | ஞாயிறு | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 04-03-2024 | திங்கள் | மோகினி அவதாரம் | கருட சேவை |
| 05-03-2024 | செவ்வாய் | ஹனுமத் வாகனம், | மாலை வஸந்தோத்ஸவம் யானை வாகனம் |
| 06-03-2024 | புதன் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 07-03-2024 | வியாழன் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 08-03-2024 | வெள்ளி | பல்லக்கு உற்சவம் அவப்ருதோத்ஸவம் சக்ரஸ்நானம் துவஜாவரோஹணம் | திருச்சி உற்சவம் |



மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்



*சென்ற இதழின் தொடர்ச்சி...*

திருமலையை எல்லா மலைகளைப் போல சாதாரணமானதாக எண்ணிவிடக் கூடாது. இதனுடைய பெருமையும் சிறப்பும் கணக்கில் அடங்காது. இம் மலையை ஒரு புறத்திலிருந்து பார்த்தால் ஸ்ரீநிவாசனின் வடிவமாகவும், வேறு சிலருக்கு ஆதிசேஷனின் வடிவமாகவும், வேறு சிலருக்குப் பொன் மலையாகவும், வேறு சிலருக்கு ஞானாத்ரியாகவும், வேறு சிலருக்கு அழகானத் தோற்றத்தையும், வேறு சிலருக்கு அனைத்தும் கலந்த கலவையாக வும் காட்சி தந்து விளங்குகிறது. இம்மலையின் பெருமையை எடுத்துச் சொல்வதற்கு என்னாலும் முடியாது. இதற்கு ஆதிசேஷன் ஒருவனால் மட்டுமே முடியும் என்று சூதமகரிஷி வேங்கடாத்ரியைக் குறித்து சொல்லி முடித்தார்.

இதனைக் கேட்டுக் கொண்டு இருந்த சௌனகாதி முனிவர்கள், மகாபிரபு! தாங்கள் சொல்வதைக் கேட்கும் போது இம்மலையின் பெருமையை மேன்மேலும் அறிய வேண்டும் என்னும் ஆர்வம் எங்களுக்கு மேலிடுகிறது. எனவே தயை கூர்ந்து தாங்கள் எங்களுக்கு அதை கூற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அப்பொழுது சூத மகரிஷி கூறத் தொடங்கினார்.

ஸ்ரீஹரி திரேதாயுகத்தில் தசரதனின் குமாரனாகப் பிறந்து பல அரிய பராக்கிரம செயல்களைப் புரிந்தார். பின்பு ஜானகி தேவியைத் திருமணம் செய்து கொண்டார். தந்தையின் ஆணைப்படி வனவாசம் மேற்கொண்டார். அந்த வனவாசக் காலத்தில் ஜானகியை இராவணன் அபகரித்துச் சென்றான். அதன் காரணமாக ஸ்ரீராமர் இராவணனை வதம் செய்வற்கு முடிவு செய்தார். அப்பொழுது சுக்ரீவன், அனுமனுடன் செல்லும்போது வேங்கடாத்ரி மலை வழியாகச் சென்றார்.

இந்தக் காட்சிகளை எல்லாம் அஞ்சனாதேவி பார்த்துக் கொண்டிருந்தாள். பொன் மலையை விட்டு கீழே இறங்கி வந்து அவர்களை வணங்கி நின்றாள். அஞ்சனா தேவி இராமனைப் பற்றிய இரகசியம் எல்லாம் தெரிந்தவள் ஆவாள். அதனால் இராமனிடத்தில், ஸ்வாமி நான் இம்மலையிலேயே வசித்து வருகிறேன். என் மீது கருணைக்கொண்டு வேங்கடாத்ரிக்கு வரவும் என மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொண்டாள். அப்பொழுது ஸ்ரீராமர்,அம்மா! என் பயணம் இத்தோடு முடிவது இல்லை. நீண்ட பயணம் உடையது. நான் செல்லும் வேலை முடிந்தவுடன் தவறாமல் வருகிறேன் என்று கூறினார்.

அப்பொழுது அனுமன்,ஸ்வாமி! என் தாயின் விண்ணப்பத்தை தாங்கள் கருணையோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். நம்முடன் வந்துள்ள வானர வீரர்கள் கூட நீண்ட தூரம் நடந்து வந்த காரணத்தினால் மிகவும் களைப்புடன் இருக்கிறார்கள். அதனால் அவர்களின் களைப்பைப் போக்கிக் கொள்ளும்

பொருட்டாவது அந்த அஞ்சனாத்ரிக்குச் செல்லலாம். அங்கே, உண்ண நல்ல பழங்களும், உறங்குவதற்கு ஏற்ற வசதிகளும், நீராடி களைப்பு போக்கிக் கொள்ள பல தீர்த்தங்களும் உள்ளன. அத்துடன் நாம் செல்லும் பாதையிலிருந்து என் தாயின் இருப்பிடம் மிகவும் தூரமும் இல்லை. எனவே என் தாயின் கோரிக்கையைத் தீர்த்து வைக்க வேண்டும் என அஞ்சனா தேவிக்காகப் பரிந்து பேசினார். அனுமன் சொல்லிய வார்த்தைகளைக் கேட்ட ஸ்ரீராமர் தம்பி இலட்சுமணனின் விருப்பத்தைக் கேட்டார். இலட்சுமணனும் தேவரீர் நாம் வேங்கடாத்ரிக்குச் செல்லலாம் எனத் தன் எண்ணத்தை இராமரிடம் கூறினார்.

பிறகு, ஸ்ரீராமர் அனுமனைப் பார்த்து,மாருதி உன்னுடைய கோரிக்கை ஏற்புடையதுதான். எனக்கும் அஞ்சனாத்ரிக்கு வருவதற்கு உடன்பாடுதான். அஞ்சனாத்ரிக்கு செல்லும் வழி நன்கு அறிந்தவன் நீதான். எனவே, நீ நம் வானர சேனையையும் வழி நடத்துவாயாக என்றார். பின்பு, வானர வீரர்களை இராமர், சீதை, இலட்சுமணனும் பின் தொடர்ந்தனர்.

வேங்கடாத்ரி மலையை நோக்கி வருகின்ற இராமனைப் பார்த்த முனிவர்கள் அவர் முன் சென்று வணங்கி நின்றனர். ஸ்வாமி எங்கள் பிறவிப் பயன் அடைந்தோம். இந்த மலையிலேயே தவம் செய்து கொண்டிருக்கும் முனிவர்கள் நாங்கள். எங்களின் தவத்தை மெச்சி பிரமன் ஒரு முறை எங்கள் முன் தோன்றி, இம்மலைக்கு ஸ்ரீராமரும் வரக்கூடும். அப்பொழுது நீங்கள் சத்திய லோகத்திற்கு செல்லும் பயணம் வரும் என்றார். அதற்காக இத்தனை நாட்கள் நாங்கள் காத்திருந்தோம். இன்று அது நிறைவேறி விட்டது. தாங்கள் எங்களை அனுப்பி வைத்தால் நாங்கள் சத்திய லோகம் செல்வோம் என்றனர்.

அதைக்கேட்ட இராமர் மிக்க மகிழ்ச்சியுடன் உங்கள் விருப்பப்படியே நீங்கள் சத்திய லோகத்திற்கு செல்லுங்கள் என்று அனுமதி கொடுத்தார் என சூத மகரிஷி சொல்லி முடித்தார்.

இதனை ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்த முனிவர்கள் வேங்கடாத்ரி மலையில் இராம, லட்சுமண சீதை வானர வீரர்கள் எல்லாம் எவ்வாறு இருந்தனர் என்பதை கூறும்படி சூத மகரிஷியிடம் கேட்டுக் கொண்டனர். அதற்கு இசைந்து சூதர் கூறினார்.

ஸ்ரீராமர் வேங்கடாத்ரி மலையின் வடதிசை நோக்கி நடந்தார். அங்கு ஆகாச கங்கையில் நீராடி சந்தியா வந்தனம் செய்து முடித்தார்.

## தேவுனிகடபா ஸ்ரீலக்ஷ்மிவேங்கடேஸ்வரஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 09-02-2024 | வெள்ளி | தீக்ஷா திருமஞ்ஜனம் | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 10-02-2024 | சனி | துவஜாரோஹணம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 11-02-2024 | ஞாயிறு | சூரியப்பிரபை வாகனம் | பெரியசேஷ வாகனம் |
| 12-02-2024 | திங்கள் | சிறியசேஷ வாகனம் | சிம்ம வாகனம் |
| 13-02-2024 | செவ்வாய் | கல்பவிருக்ஷ வாகனம் | ஹனுமத் வாகனம் |
| 14-02-2024 | புதன் | முத்துப்பந்தல் வாகனம் | கருட வாகனம் |
| 15-02-2024 | வியாழன் | கல்யாணோத்ஸவம் | யானை வாகனம் |
| 16-02-2024 | வெள்ளி | திருத்தேர் | தூளி உத்ஸவம் |
| 17-02-2024 | சனி | சர்வபூபால வாகனம் | குதிரை வாகனம் |
| 18-02-2024 | ஞாயிறு | வஸந்தோத்ஸவம், சக்ரஸ்நானம் | துவஜாவரோஹணம், ஹம்ஸ வாகனம் |

**19-02-2024 திங்கட்கிழமை புஷ்ப யாகம் நடைபெறும்.**





## வைணவக்குறுக்கெழுத்துப் புதிர் -91

### இடமிருந்து வலம்

1. பத்மாவதியின் பதி.....(5)
4. மீனாக ....(3) அவதாரம்.
5. நரசிம்மரின் திருநட்சத்திரம்....(3)
6. ஆமையாக....(3) அவதாரம்.
7. குறும்புக்கார கிருஷ்ணன்.....(4)
13. பத்தாம் அவதாரம்....(3)
15. ஸ்ரீமால்........(4)
20. மனித சிங்க வடிவம்.....(6)
21. காஞ்சியில் நின்று அருள்பவன்.....(6)

### வலமிருந்து இடம்

3. கண்ணனின் அண்ணன்....(5)
10. அரச குலங்களை அழித்தது .... (5) அவதாரம்.
18. பெரிய பெருமாள் மகா....(3)
21. கேசியை அழித்தவன், எழுத்துக்கள் இடம் மாறியுள்ளன....(4)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | | | | 3 |
| | ✸ | 4 | | | | 5 | | | |
| | ✸ | | ✸ | | | ✸ | 6 | | |
| 7 | | | | | 8 | 9 | ✸ | ✸ | |
| | ✸ | | | | | | | | 10 |
| | ✸ | | | 11 | 12 | 13 | | 14 | |
| | 15 | | 16 | | | ✸ | ✸ | | ✸ |
| | ✸ | 17 | ✸ | ✸ | | ✸ | | | 18 |
| 19 | ✸ | 20 | | | | | | | ✸ |
| | | | 21 | | | | | | ✸ |

புதிருக்கு விடை அறிய 22ம் பார்க்கவும்...

### மேலிருந்து கீழ்

1. திருவரங்கன்...(5)
2. உலகளந்த பெருமாள் .... (3) அவதாரம்.
3. கமல நாயகன்....(6)
9. விஷ்ணு பூமியைத் தூக்கியது....(3) அவதாரம்.
12. தசரதனின் தலை மகன்....(3)
14. தேவகியின் தேவ புதல்வன்...(5)

### கீழிருந்து மேல்

8. கோபியர்களின் பிரியன்.....(4)
11. திருமலையில் நின்று அருள்கின்றவன்....(6)
16. பெரிய அருளாளன்....(4)
17. விஷ்ணு ஆலயத்தை .....(4) கோயில் என்று கூறுவார்கள்.
19. நாரதர் ஜெபிக்கும் நாமம்....(5)

தொகுப்பு : திரு. பட்டுக்கோட்டை டி.ஆர். மனோகர், வல்லம்-தஞ்சாவூர், 99426 44807

அஞ்சனா தேவி ஸ்ரீராமருக்கு பழம் பூக்களைக் கொடுத்து வரவேற்றார். பின்பு புண்ணிய புஷ்கரணியில் நீராடி, அங்கிருந்த முனிவர்களுக்கு ஸ்ரீராமர் பழங்களைக் கொடுத்தார். வானர வீரர்கள் பர்ணசாலை அமைக்க, அனுமன் ஸ்ரீராமருக்கு தேவையான அத்தனையும் கொண்டு வந்து கொடுக்க, இராமர் அயோத்தியில் இருப்பது போலவே எண்ணினார்.

அனுமன் வானர வீரர்களைப் பார்த்து, வீரர்களே உங்களுக்கு தேவையான அனைத்து பழங்களும் இம்மலையில் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் அனைவரும் உங்களுக்கு விருப்பமான பழங்களை தேர்ந்தெடுத்து உண்டு மகிழுங்கள் என்று சொன்னான். அந்த மலையில் இருந்த பழங்களையும் தேனையும் உண்ட மயக்கத்தில் வானர வீரர்கள் மிகவும் மகிழ்ந்தனர். இந்த மகிழ்ச்சிக்கு காரணம் ஸ்ரீராமரின் அனுகிரகமே என்றனர்.

ஸ்ரீராமருக்கு துரோகம் செய்த அந்த இராவணனை எங்கள் வாலால் சுருட்டி கட்டி இழுத்து வருவோம் என்று வானரவீரர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக இராவணனை அழிப்போம் என்று கூறிக் கொண்டனர். அப்படியாக பேசிக் கொண்டே வானர வீரர்கள் சுவாமி புஷ்கரணிக்கு ஈசான திசையில் தென்பட்ட குகை ஒன்றில் புகுந்தனர் என்று சொல்லி முடித்தார் சூத மகரிஷி.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

# திருஊரகம்

108 திவ்ய
தேச வைபவம்
82

– உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

ஆம்பரீஷர் கேட்க, அதற்கு விடையாக நாரதர் கூறியதாவது : பகவான் வாமனனாகத் தோன்றி, மகாபலியிடம் சென்று மூவடி மண் வேண்டி, மகாபலியால் தாரை வார்த்துக் கொடுக்கப் பெற்றவுடன் திருவிக்கிர மனாக ஓங்கி, உலகினை அளக்கத் தொடங்க, ஓரடி நிலத்தை அளக்க, மற்றொரு திருவடி வானை அளக்க, மூன்றாவது அடியை மகாபலியின் தலையில் வைத்து, அவனது ஆணவத்தை அகற்றினார். மகாபலி எம்பெருமா னின் திருவடிப்பேற்றைப் பெற்றிருக்கும். திருவடி முதலாகத் திருமுடி நிறைவாக உள்ள எம்பெருமானின் திருவிக்கிரம வடிவத்தைச் சேவிக்கவில்லையே என்ற குறையை வாமன வடிவில் இருந்த எம்பெருமானிடம் தெரிவித்து, அப்பெருவடிவத்தைத் தான் சேவித்து மகிழுமாறு அருள வேண்டும் என்று வேண்டவே, திருவிக்ரமன் "ஆயிரம் அசுவமேத யாகங்களைச் செய்தால்தான், திருவிக்கிரம வடிவத்தை சேவிக்க இயலும் என்றும், காஞ்சியில் ஒரு முறை அந்த யாகத்தைச் செய்வது, ஆயிரம் முறை செய்ததற்குச் சமமாதலால் அங்கே யாகத்தைச் செய்வதுதான் உன் விருப்பம் நிறைவேறுவதற்கு வழி" என்று கூறவே, அதனை நடத்தி வைக்கும் பொறுப்பையும் எம்பெருமானிடமே விட்டு மகாபலி யாகம் செய்ய, எம்பெருமான் உலகு அளந்த பெருமாளாக மகாபலிக்குக் காட்சி தந்தான்.

இதே நிலையில் அர்ச்சையில் சேவை சாதிக்க வேண்டும் என்று மகாபலி எம்பெருமானிடம் வேண்ட, அதை ஏற்ற பெருமான், உலகளந்த பெருமாளாக இங்கு அர்ச்சையில் சேவை சாதிக்கிறார். திருமங்கையாழ்வார் இப் பெருமானைச் சேவிக்க வந்தபோது, எம்பெருமானின் பெருவடிவைக் கண்டு













வியப்பினால் வாயடைத்து பெரிய திருமடலில், இரண்டே சொற்களில் "ஊரகத்துள் அன்ன வனை" என்றார். இது "அப்படிப் பட்டவனை" என்று பொருள் தரும் சொல்லாகும். பெரிய வாச்சான் பிள்ளை, தமக்கும் கூட (ஆழ்வார்க் கும்) மேல்நோக்கி, முடியப் பார்க்க வொண்ணாத படி இருக்கிறவனை" என்று கூறினார். "பெருமான், இங்கு அர்ச்சையில் நிற்கின்ற நிலையைக் கண்ணால் கண்டு மகிழலாமே அல் லாமல், வாயினால் வருணித்துக் கூற முடியாத நிலை. அழகை உடையவன்" என்றார் ஸ்ரீ அழகிய மணவாள பெருமாள் நாயனார். சிறிய திருமட லில், கலியன் "மதிள் கச்சி ஊரகமே" என்றார். எம்பெருமானின் சிறப்பிற்கு ஏற்ற வண்ணம், அப்பெருமான் நிற்கின்ற நிலை, "இன்னார் இனியார் என்று பாராமல், வரையறை இல்லாமல் எல்லோருக்கும் அருள் செய்யும் இயல்பினை வெளிப்படுத்தி உள்ளதாக உரைத்தார் அவர்.

**சிறப்புகள் :**

தன்னிடத்தில் ஊரகம், நீரகம், காரகம், கார்வானம் என்ற நான்கு திவ்ய தேச எம்பெருமான்களைக் கொண்டு விளங்கும் ஒப்பற்ற சிறப்பு, இத்திவ்ய தேசத்திற்கு உண்டு. ஊர்ந்து செல்லும் உடலை உடைய எம்பெருமான் (பாம்பு வடிவில்) இங்கு எழுந்தருளி இருப்பதால், (ஊர் + அகம்) என்ற பொருளில் ஊரகம் என்று வழங்குவதாகக் காணலாம்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | மூலவர் திருவிக்கிரமன், உலகளந்த பெருமாள். (மேற்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| உத்ஸவர் | : | பேரகத்தான். |
| தாயார் | : | அமுதவல்லி நாச்சியார். அமிர்த வல்லித் தாயார். |
| தீர்த்தம் | : | நாக தீர்த்தம், சேஷ தீர்த்தம். |
| விமானம் | : | ஸார ஸ்ரீகர விமானம். |
| ப்ரத்யக்ஷம் | : | ஆதிசேஷன். |
| ஆகமம் | : | வைகானசம். |
| மங்களாசாஸனம் | : | திருமழிசை ஆழ்வார், திருமங்கை ஆழ்வார். |

**விசேஷம் :**

உலகளந்த பெருமானாக இத்தலத்து எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் விளங்கும் காட்சி, தன் அழகாலும், பண்பாலும், காஞ்சி நகர் முழுமையும் நிறைந்து, தனது பேரழகும் பெருவெள் ளத்தில், எல்லோரையும் சிக்குமாறு செய்யும் நிலையில் உள்ளதாக பெரியவாச்சான் பிள்ளை சொல்கிறார்.

இப்பெருமானின் தனிச் சிறப்பை எடுத்துக் காட்டும், "இராமாவதாரத்தில், எம்பெருமான் கானகம் சென்ற போது, காடு முழுவதும் எவ்வாறு பேரழகு பெற்று விளங்கியதோ அது போன்று, உலகளந்த பெருமானின் நின்ற திருக்கோலக் காட்சி, கச்சி மாநகர் முழுவதிலும் நிறைந்து விளங்கியது" என்கிறார் அவர்.

உலகு அளந்த பெருமாளின் சந்நிதிக்கு அருகில், மகாபலி, தன்னைச் சுலபமாகச் சேவிக்கும் முறையில், எம்பெருமான், ஆதிசேடனாக சேவை சாதிக்கிறார். உலகு அளந்த பெருமாளைப் "பேரகத்தான்" என்றும், ஆதிசேட வடிவில் உள்ளவனை, "ஊரகத்தான்" என்றும் கூறுவர். பிரார்த்தனைகள் செய்து கொண்டு ஊரகத் தானை வழிபடுவோர்க்குப் பிள்ளைப் பேறு வாய்க்கும் என்பர்.

**த்யானச்லோகம் :**

*க்ராம க்ருஹாக் யாதபுரே வஸந்தம்*
*த்ரிவிக்ரமம் பச்சிம திங்முகம் தம் ।*
*ஸுதாச்ரயம் சேஷஸரச்ச நித்யம்*
*நமாமி ஸாராக்ய விமாநவர்யம் ॥*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

*"இசைந்த அரவமும், வெற்பும் கடலும்*
*பசைந்தங்கு அமுது படுப்ப - அசைந்து*
*கடைந்த வருத்தமோ? கச்சி வெஃகாவில்*
*கிடந்து இருந்து நின்றதுவும் அங்கு"* – பேயாழ்வார்.

*"நின்று இருந்து யோக நீதி நண்ணுவார்கள் சிந்தையுள்*
*சென்று இருந்து தீவினைகள் தீர்த்த தேவ தேவனே!*
*குன்று இருந்த மாடநீடு பாடகத்தும் ஊரகத்தும்*
*நின்று இருந்து வெஃகணைக் கிடந்தது என்ன நீரமையே'?'*

– திருமழிசை ஆழ்வார்

*"நின்றவாறும், இருந்தவாறும், கிடந்தவாறும் நினைப்பு அரியன*
*ஒன்றலா உருவாய் அருவாய நின் மாயங்கள்*
*நின்று நின்று நினைக்கின்றேன் உன்னை எங்ஙனம் நினைகிற்பன்? பாவியேற்கு*
*ஒன்று நன்கு உரையாய், உலகம் உண்ட ஒண் சுடரே"*

– நம்மாழ்வார்

*"ஊரான் குடந்தை உத்தமன் ஒரு கால் இருகால் சிலைவளைய*
*தேரா அரக்கர் தேர் வெள்ளம் செற்றான் வற்றா வரு புனல் சூழ்*
*பேரான், பேர் ஆயிரம் உடையான் பிறங்கு சிறை வண்டு அறைகின்ற*
*தாரான் தாரா வயல் சூழ்ந்த சாளக்கிராமம் அடை நெஞ்சே!"*

– திருமங்கையாழ்வார்

*"நேசத்தால் அன்று உலகை நீர் வார்க்க வைத்து அளந்த*
*வாசத்தாள் என் தலைமேல் வைத்திலையேல் நாசத்தால்*
*பார் அகத்துள் அன்றி, பாழ் நரகில் வீழ்ந்து என்கொல்*
*ஊரகத்துள் நின்றாய் உரை."*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

## நாமாக்கள்

*771. ஓம் சதுர்மூர்த்தி: நம:*

பலபத்ர, வாசுதேவ, ப்ரத்யும்ந, அநிருத்தர் என்கிற நான்கு மூர்த்திகளாக யது குலத்தில் அவதரித்தவன்.

*ஓம் அநுக்ரஹா: நம:*

எல்லோரையும் அனுக்ரகிப்பவள்.

*772. ஓம் சதுர்பாஹு: நம:*

நான்கு திருக்கரங்களுடன் தேவகியின் வயிற்றில் தோன்றியவன்.

*ஓம் நித்யா: நம:*

அனுக்ரகிப்பதில் உறுதியாக இருப்பவள்.

*773. ஓம் சதுர்வ்யூஹ: நம:*

வாஸுதேவ, ப்ரத்யும்ந, ஸங்கர்ஷன, அநிருத்தன் என்கிற நான்கு வ்யூக அவதாரங்களை உடையவன்.

*ஓம் ப்ரஹ்ம வித்யா: நம:*

பிரம்மத்தை அடையும் உபாயத்திற்கு சாதனங்களைத் தகுதி உடையவர்களாகச் செய்பவள்.

*774. ஓம் சதுர்கதி: நம:*

இந்திர, பிரம்ம, கைவல்ய, மோக்ஷம் என்கிற நான்கு ஸ்தானங்களை அளிப்பவன்.

*ஓம் ஹிரண்மயீ நம:*

தானே உபாயமாகவும், புருஷார்த்தமாகவும் இருப்பவள்.

*775. ஓம் ஸமாவர்த்த: நம:*

திரும்பத் திரும்ப அவதாரம் எடுப்பவன்.

*ஓம் அம்சுமாலிநீ: நம:*

ஒளிரும் திவ்ய மாங்கல்யத்தை உடைய பகவானுடன் பிரியாது இருப்பவள்.

*776. ஓம் சதுர்பாவ: நம:*

வாசுதேவன் என்கிற நான்கு வ்யுகங்களில் ச்ருஷ்டி முதலிய நான்கு செயல்களை செய்பவன்.

*ஓம் சுத்தவிதா: நம:*

எவ்விதக்குறைபாடும் இல்லாத தன்மை உள்ளவள்.

*777. ஓம் சதுர்வேதவித்: நம:*

நான்கு வேதம் வல்லாரும் தன் பெருமையைச் சிறிதளவே அறியும்படி இருப்பவன்.

*ஓம் ப்ருத்வீ நம:*

மிகவும் பெரியவரான பகவானின் ஸஹதர்மிணி.

*778. ஓம் ஏகபாத் நம:*

தன் பாகங்களில் ஒரு பாகத்துடன் மட்டும் அவதாரம் செய்பவன்.

*ஓம் ஸந்தாநிநீ: நம:*

மேன்மேலும் பொங்கிப் பெருகும் நல்ல பண்புகளை உடையவள்.

*779. ஓம் சதுராத்மா: நம:*

ஜாக்ரத், ஸவப்ந, ஸுஷுப்தி, துரீயம் என்கிற நான்கு நிலைகளில் நான்கு உருவங்களாக இருப்பவன்.

*ஓம் மஹி: நம:*

கொண்டாடத் தக்கவள்.

*780. ஓம் நிவ்ருத்தாத்மா: நம:*

எல்லாவற்றுடனும் ஒன்றியும், ஒன்றாத மனம் உடையவன்.

*ஓம் யஜ்ஞாச்ரயா: நம:*

யஜ்ஜஸ்வரூபியான பகவானை ஆச்ரயித்து இருப்பவள்.

*ஸ்ரீமதே அம்ருதவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீத்ரிவிக்ரம (உலகலந்த பெருமாள்) பர ப்ரம்மணே நம:*

**குறிப்பு :**

பெரிய காஞ்சிபுரம், காமாக்ஷி அம்மன் ஆலயத்திற்கு அருகே திருக்காரகம், திருக்கார்வானம், திருநீரகம் திவ்ய தேசங்களுடன் சேர்ந்து இத்திவ்ய தேசம் அமைந்து உள்ளது.

*திவ்யதேச வைபவம் வளரும்...*





# திருக்கச்சி நம்பிகள்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

(ஆறு மொழி பூதூரர்க்களித்த பிரான்) ஆறு மொழி – ஆறு வார்த்தைகள். தேவப்பெருமாளோடு பேசும் பாக்கியம் பெற்ற நம்பியிடம் இராமாநுசர் தமக்குள்ள சந்தேகங்களைப் பேரருளாளரிடம் விண்ணப்பித்து இவற்றுக்கு உரிய விடையைக் கேட்டு தமக்கு விண்ணப்பம் செய்ய வேண்டினார். இராமாநுஜருக்கு ஏற்பட்ட சந்தேகங்களாவன – 1) எந்த தேவதை பரம்பொருள்? 2) நம் மதத்தில் பரமனும் ஜீவனும் ஒன்றா அல்லது வேறு வேறா? 3) மோக்ஷம் அடைய வழி பக்தியா ப்ரபத்தியா? 4) இந்த உடலை விடும்போது ஜீவன் பரமனை நினைக்க வேண்டுமா அல்லது நினைக்காவிடிலும் வீடுபேறு கிட்டுமா? 5) இந்த உடல் நீங்கிய உடன் மோக்ஷம் உண்டாகுமா அல்லது பலப் பிறவிகள் வேண்டுமா? 6) யாரை அடியேன் ஆசாரியராகப் பற்றுவது? என்பதாகும்.

இதற்கு பேரருளாளர் நம்பிகளிடம் அருளிய விடைகள் ஆறு–

1) *''அஹமேவ பரம்தத்வம்''* – ஸ்ரீமந் நாராயணனாகிய நாமே பரம்பொருள். சிவனுமல்லன். பிரமனுமல்லன்.

2) *''தர்சனம் பேத ஏவ ச''* – நமது மதத்தில் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் வேறு வேறு பொருள்கள். ஒன்றன்று.

3) *''உபாயேஷு ப்ரபத்தி ஸ்யாத்''* – வீடுபேறு பெற வழி ப்ரபத்தியே. பக்தி முதலியவையல்ல.

4) *''அந்திமஸ்ம்ருதி வர்ஜனம்''* – ப்ரபத்தியை உபாயமாகக் கொண்டவர்கள் இந்த உடலை விடும்போது பரமாத்மாவை நினைத்தே தீர வேண்டிய அவசியம் இல்லை. நினையாவிடிலும் மோக்ஷமுண்டாம்.

5) *''தேஹாவஸானே முக்தி: ஸ்யாத்''* – ப்ரபத்தியை உபாயமாகக் கொண்டவர்கள், இந்த உடல் கழிந்த உடனே முக்தி பெறுவர். பலப் பிறப்புக்கள் பிறக்க வேண்டாம்.

6) *''பூர்ணாசார்ய ஸமாச்ரய:''* – ஆளவந்தார் சீடரான பெரிய நம்பிகளை ஆசாரியனாகப் பற்ற வேண்டும்.

இந்த ஆறு வார்த்தைகளைப் பேரருளாளரிடமிருந்து பெற்று இராமாநுசருக்கு கொடுத்து உதவியதால் நம்பிகளை "பிரான்" என்றபடி.

(திருவாலவட்டம் செய்து சேவிப்போன்) ஆலவட்டம் – விசிறி. பனை ஓலையால் செய்யப்பட்ட விசிறிக்கு தாலவட்டம் என்று பெயர். தால:– வடசொல்பனைமரம். பனை மரத்து ஓலையால் பின்னப்படுவது விசிறி. தாலவட்டம் என்பது மருவி ஆலவட்டம் என்று ஆயிற்று. காஞ்சியில் எழுந்தருளி இருக்கும் தேவப்பெருமாள், நம்பி கனவில் தோன்றி, காஞ்சிக்கு வந்து தமக்கு தினமும் அடிமை செய்யுமாறு நியமித்தார்.

அந்த நியமனத்தைச் சிரமேற்கொண்டு காஞ்சிக்குச் சென்று தேவப்பெருமாளைச் சேவித்து அனுபவித்துத் தம்மை

அடை கொள்ளும்படி வேண்டினார். வேள்வித்தீயில் தோன்றிய தமது வெப்பம் தீருமாறு தமக்குத் திருவாலவட்டத் திருப்பணி செய்யுமாறு பெருமாள் அருளினார். இதுபற்றியே நம்பிகளும் மிக்க விருப்பத் துடன் இந்த கைங்கர்யத்தை ஏற்றுக் கொண்டு நாடோறும் திருவாலவட்டம் வீசும் பணியைச் செய்து வந்து பெருமாளை மகிழ்வித்தது பற்றி *"திருவாலவட்டம் செய்து சேவிப்போன்"* என்றபடி.

(தேவராசாட்டகத்தைச் செப்புமவன்) தேவப்பெருமாள் விழித்திருக்கும் போதுகளில் நம்பிகள் பெருமாளுக்குத் திருவாலவட்டம் வீசும் கைங்கர்யம் செய்து வந்தார். திருக்கண் வளரும் போது அவரை தியானித்து மாநஸீகமான தொண்டு புரிந்தும் வந்ததோடு நில்லாமல், நாம் அனைவரும் அநுஸந்தித்து நற்கதி பெற "தேவராஜ அஷ்டகம்" என்னும் பெயர் கொண்ட எட்டு சுலோகங்களை தேவப்பெருமாள் விஷயமாக வடமொழியில் அருளினார்.

இந்த தேவராஜ அஷ்டகமானது தாமும் வாழ்ந்து, தமரும் வாழ ஆளவந்தாருடைய ஸ்தோத்ர ரத்னத்தின் ஸாரத்தைக் கொண்டு நித்யமாக அநுஸந்திக்கப் படுவதாயும், சுலபமாயும், தெளிவாகவும், எல்லா வருணத்தவரும் அறியும்படி தேவராஜ அஷ்டக ஸ்தோத்ரத்தை அருளினதாகக் கூறுவர். *"நமஸ்தே அஸ்தி சைலேச"* என்கிற முதல் சுலோகம் துவய மந்திரப் பொருளை நினைவு படுத்துகிறது என்பர். இரண்டாம் சுலோகத்தினாலும், எட்டாம் சுலோகத்தினாலும் பகவானுடைய கடாக்ஷமொன்றே எல்லா விதமான ரக்ஷணத்தையும் செய்யவல்லது. ஆகையால் இந்த அஷ்டகம் நம்பிகள் கடாக்ஷம் ஒன்றையே தாம் பெறும் பேறாகக் கருதியுள்ளமை விளங்குகிறது.

(தெருளாரும் ஆளவந்தார் திருவடியோன்) தெருள் – அறிவு. அதாவது பரமனைப் பற்றிய ஞானம், ஸ்ரீமந்நாதமுனிகள் மூலமாக பகவத் ஸம்பந்தமும், மந்த்ரோபதேசமும் பெற்று, உய்யக் கொண்டார் மூலமாக தத்வஹித புருஷார்த்தங் களைப் பெற்று, மணக்கால் நம்பி மூலமாக எல்லா புருஷார்த்தங்களையும், பகவத் விஷயமும், நான்காவது ஆச்ரம ஸ்வீகாரம் முதலான அர்த்த விசேஷங்களைப் பெற்று, ஞான விசேஷங்களுக்குக் கடலுக்கு ஒப்பானவராய், பரவாதிகளாகிற பஞ்சுக்கு மழையோடு கூடின காற்றானவர் என்று ஆளவந்தார் அறிவுத்திறனைப் போற்றுவது காணலாம்.

ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னம், சதுச்லோகீ முதலான ஒன்பது நூல்களை இயற்றியதனால் ஞான பூர்ணரானார். இதுபற்றியே தெள்ளாரும் ஆளவந்தார் எனப்பட்டார்.

இவர் திருவடிகளைப் பற்றின இருபத்திரண்டு சீடர்களில் பதிநான்காமவர் திருக்கச்சி நம்பியாவார். எவருடைய திருவடித் தாமரையைத் தியானிப்பதால் எல்லாப் பாபங்களும் அழியுமோ, அத்தகைய ஆளவந்தாரை வணங்கியவர் இராமாநுசர்.

இத்தகைய பெருமையைக் கேள்விப்பட்டு நம்பியும் மிக உகந்தவராய், தேவப்பெருமாள் அனுமதி பெற்று விரைவில் திருவரங்கம் சென்று ஆளவந்தார் திருவடியைப் பற்றினார். இதுபற்றியே ஆளவந்தார் திருவடியோன் எனப்பட்டது.

(திருக்கச்சி நம்பி இரு திருவடிகள் வாழியே) திருமழிசைப்பிரானுடைய நியமனத்தாலே நம்பி தேவப் பெருமாளுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். அதனால் உகந்த அந்த பெருமான் "திருக்கச்சிநம்பி" என்று அன்போடு அழைத்ததாகவும் அது முதற்கொண்டு அந்தத் திருநாமமே இவருக்கு வழங்கி வருகின்றனர். தேவராஜர் என்னும் ஸ்ரீகாஞ்சி வரதராஜனுடைய திருவருளுக்கு இலக்கானவர். இராமாநுஜ முனிவரால் பூஜிக்கத்தக்கவர். இப்படி மிக உயர்ந்தவர். நல்லோர்களுக்குப் புகலிடமானவர். அத்தகைய நம்பிகள் திருவடிகளுக்கு பல்லாண்டு பாடுவோமாக.

*வாழித்திருநாம உரை தொடரும்....*

## 2024, மார்ச் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| **01–10** | **திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்.** |
| **08** | **மகாசிவராத்திரி** |
| **09** | **திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி திருக் கல்யாண உத்ஸவம்.** |
| **17–25** | **தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்.** |
| **20–24** | **திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம்.** |
| **25** | **ஸ்ரீலக்ஷ்மி ஜயந்தி, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயிலில் பங்குனி உத்திரம், தும்புரு தீர்த்த முக்கோட்டி** |

# திவ்ய ப்ரபந்தத்தின் ரஹஸ்ய வ்யாக்யானங்கள்

ஸ்ரீ உ.வே. திருநாராயணபுரம் அரையர் ஸ்ரீராம சர்மா ஸ்வாமி,
மேலுக்கோட்டை.



சென்ற இதழின் தொடர்ச்சி...

*மாதவன் திருத்தேராய் கீதை உரை கேட்டு வைத்தாய்*
*ஆதிகுரு மாறனுக்கு நிழல் புளியாய் நின்றவன் நீ*
*ஏதமில் யதுகிரியில் எதிராசா என் குருவாய்*
*நாதமுனி யோகத்தை மந்திரத்தில் காட்டினாயே.*

என்பது 15வது பாசுரம். இப்பாசுரத்தாலே திருநாராயணபுரத்து அரையருக்கு ஒரு மந்திரத்தைச் சொல்லி நாதமுனி யோகத்தை உணர்த்தினார் என்ற சரித்திரம் தெரிய வரும்.

தம்பிரான்படிகளில் பதவுரைகளும் உண்டு. அவைகளில் உள்ள உரைகள் இப்போது கிடைக்கும் உரைகளில் இல்லை. உதாரணமாக "கவர்ந்த" என்று ஒரு பதம். இதற்குத் தம்பிரான் படியில் "கண்டம் கண்டமாய் கடித்த" என்று பொருள் காட்டப்பட்டுள்ளது. மணிப்ரவாள நடையில் வடமொழி கலந்த தமிழ் மொழி தான் தம்பிரான்படிகளில் அழகாக அமைந்திருக்கும். உதாரணமாக ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகம த்ராவிடவேதஸாகரமான திருவாய் மொழியை மொய்ம்பால் வளர்த்த இதத்தாயான இராமாநுசன்" இத்யாதி.

ஒரு வித்தான பீஜாக்ஷரத்தையே ஜபித்து தியானம் பண்ணி ஸர்வார்த்தங்களையும் அறியும் யோகிகள் நம்முடைய பூருவர்களான ருஷிகள். "வேதத்துக்கு ஓமென்னுமதுபோல்" என்று சொன்னபடியே அம், இம், ஆம், ஸம், உத், ஏ, ஐ முதலான பீஜாக்ஷரங்களில் உள்ள ரஹஸ்யப் பொருளை விளக்கிக் காட்டும் நான்கு வேதங்களும், திராவிட வேதங்களும் நமக்குக் காட்டாத ரஹஸ்யங்களை நாதமுனிகள் முதலான யோகிகளுக்குக் காட்டித் தரும். திருவாய்மொழிக்கு பீஜாக்ஷரம் "உத்", என்று "உயர்ந்து", "ஏ" என்கிற முடிவில் "ஏ" என்பது வராக பீஜாக்ஷரம் என்று மந்திர ஆகம முறையில் அறிந்து அநுஸந்திக்க வேணும். ஆசார்ய ஹ்ருதயகாரர் இத்தையெல்லாம் காட்டி உள்ளார். வேதாந்தாசாரியரும் "தெரியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" என்று திவ்ய பிரபந்தங்களின் மகிமையைக் காட்டியுள்ளார்.

ஈடு முதலான வியாக்யானங்களிலும் ஸங்கதி, நூற்றந்தாதி, ரத்னாவளி முதலானவைகளிலும் ஆழ்வார்களுடைய அநுபவங்கள் விளக்கிச் சொல்லும்போது பல யோக விஷயங்கள் அஷ்டாங்க ஸம்பந்தமாக உள்ளன. "மனனக மலமற" பாசுரத்தின் ப்ரமாணத்திரட்டைப் பார்க்க வேண்டும். மாமுனிகள் அங்கே விஷ்ணுபுராணத்தை எடுத்து வியாக்யானித்து உள்ளார். இதில் அஷ்டாங்க யோக ரஹஸ்யத்தின் தியான முறை காட்டப்பட்டுள்ளது.

பகவத் கீதையில் பாஷ்யப்படி காட்டின நான்கு யோக தசைகளும் ஆழ்வாருக்கு ஏகேந்த்ரிய ஸம்ஞா,

## கண்ணன் கருத்துரை



*அபி சேத்ஸுதுராசாரோ பஜதே மாமனன்யபாக் ।*
*ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக்வ்யவஸிதோ ஹி ஸ:॥*
(9-30)

**முன்பு எவ்வளவு கெட்டவன் ஆயினும் மாறா பக்தியோடு என்னை வழிபடுபவனை நல்லவனாகவே கருத வேண்டும். ஏனெனில் அவன் தன் தவற்றை உணர்ந்து நல்ல வழியில் வாழ ஓர் உறுதி கொண்டுள்ளான்.**



தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.

விஷயீகார ஸம்ஞா முதலானவை திருவாய் மொழியில் ஏற்பட்டதை நாம் கவனிக்க வேணும். மற்றும் அஷ்டாங்க யோக முறையிலும் ஆகம முறையிலும் உடம்பிலுள்ள ஆறு சக்ர ஸ்தானங்களில் பகவானுடைய ஸாக்ஷாத் காரம் சொல்லப் பட்டது எல்லாம் ஆழ்வாருக்கு "என்னுடைய சூழல் உளானே", "என்னுடைய ஒக்கலிலானே", "என் கண்ணினுள்ளான்", "உச்சியுள்ளே நிற்கும் தேவதேவர்க்கு" இத்யாதிகள் ஸ்பஷ்டம்.

பகவத் கீதை பதினெட்டாம் அத்யாயத்தின் முடிவில் ஒரு ப்ரபத்தி யோகத்தை "சரணம் வ்ரஜ" என்று விதித்த பின்பு, அதன் உத்தர க்ருத்யமான பர பக்தியை கண்ணன் "பக்திம் மயி பராம் க்ருத்வா" என்றே உரைத்தான். ஆழ்வாருக்கு "உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்று விதித்த சரணாகதியின் அனுஷ்டானம் ஏற்பட்டது ஆறாம் பத்தில்.

பின்பு ஏழு, எட்டு, ஒன்பதாம் பத்துக்களில் பரபக்தி, பரஞானம், பரமபக்திகள் விசத, விசததர, விசததம ஸாக்ஷாத்கார ரூபமாக ஏற்பட்டன. பத்தாம் பத்தில் தான் ஆழ்வாருக்குப் பரமபத லாபம் மானஸ ஸாக்ஷாத்காரமாயிற்று.

ஆழ்வாருக்கு இங்கிருந்தே தம் தேஹத்தில் பகவான் ஏற்படுத்தின விசேஷ கடாக்ஷத்தாலே பரமானந்த மோக்ஷ புருஷார்த்த தசை ஏற்பட்டது யோக ஸமாதியல்லவா. ஆழ்வாருக்கு ஆனதெல்லாம் நாத முனிக்கும் திவ்யப்ரபந்தம் அடியாக ஆழ்வார் யோக ரஹஸ்யத்தை மந்திர ரத்னம் பூர்வமாக உபதேசிக்கவே ஏற்பட்டன. நமக்கு திருமந்திர த்வயாநுஸந்தானத்தாலே ஏற்பட வேணும்.

*வ்யோம்ந: பரஸ்தாத் ஸவிதம் ஸமேத்ய லக்ஷ்மயாநியோகாத் குருகாதிராஜ:।*
*ஸமந்த்ர்ரத்னம் த்வயமாஹ யஸ்மை நாதாய முநயே நமோஸ்து॥*

திருவாய்மொழியை ஸ்ரீராமாயணாதிகள் போலே ஏகோபப்ரஹ்மண க்ரந்தம் என்று ஆசார்ய ஹ்ருதயகாரர் காட்டினார். ஈட்டிலும் நம்பிள்ளை உரைத்தார்.

ஸ்ரீபாஷ்யத்தில் உபப்ரஹ்மணம் என்றால் அது "வேதத்தையும், வேதத்தின் பொருளையும் அறிந்த மஹான்களுக்கு தம்முடைய யோக மகிமையாலே வேதத்தின் தத்வார்த்தம் அறிவிலே ஏற்பட்டபோது, அந்த தத்வார்த்த வசனங்களாலே வேதார்த்த வசனங்களை விளக்கிக் கொள்வது" என்றே நிச்சயக்கப்பட்டது. தத்வங்களை விசதமாக அறியவல்லராம்படி பகவான் ஆழ்வாருக்கு விசேஷ கடாக்ஷம் பண்ணி அனுக்ரஹித்ததே காரணமாய் யோக சூத்ர பாஷ்ய ரஹஸ்யத்தில் "ஈச்வர ப்ரணிதானம்" என்பதற்கு "ஸர்வேச்வரன் செய்யும் அநுக்ரஹ விசேஷம்" என்று பொருளாய் அதுவே இங்கும் கார்யகரமாய்த்து என்று அறிய வேணும்.

பகவத் பாகவத கைங்கர்யபரர்களுக்கு ஸையம யோகம் என்றும், குகையிலோ, மலையிலோ, காட்டிலோ தவம் செய்கிறவர்களுக்கு நிரோத யோகம் என்றும் ஸ்ரீபாஞ்சராத்ர பாத்ம ஸம்ஹிதை காட்டுகிறது. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்ம்யத்தில் ஸ்ரீவராஹ புராண பாகத்தில் 59, 60,61வது அத்யாயங்களில் ஆசார்ய அபிமான நிஷ்டனான வேதாந்த தார்சிகனுக்கு அஷ்டாங்க யோகம்

எப்படி அநுவர்த்திக்கும் என்பது விசதமாக இருக்கும். நித்யம் திருவாராதனத்தில் மந்திராசனத்தில் கைங்கர்யபரனுக்கு தியானம் சொல்லப்பட்டது.

அந்த தியானம் ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் ஸங்க்ரிஹீதம். ஸையம யோகத்தில், குண்டலிநீ ஸ்தானத்திலிருந்து மேல் மேல் பகவதநுபவத்தோடு தன்னை மனத்தாலே உச்சியாகிற ஸஹஸ்ரார சக்ர ஸ்தானத்தில் ஏத்தி, அங்கிருந்து மிகவும் எச்சரிக்கை யாக ஸமாதானமாய், ஸாவதானமாய் கீழே இரங்கி வந்தபடி ஆத்மாவை இதயத்தில் பூர்வம்போலே நினைத்து இங்கு வரையில் ஏற்பட்ட திவ்யமான நிலையை யோக நிலைக்கு மாற்றிக் கொண்டு பகவதாராதனம் செய்ய வேண்டும்.

இத்தையே ஆகமத்தில் பஞ்சகால கார்யங் களில் ஐந்தாவதான யோகம் என்று சொல்லிற்று. இத்தை லௌகிக கார்யங்கள் இருக்கும் போது செய்யமுடியாத காரணம் இரவில் தூங்கும் போது தூக்கத்துக்கு முன்பு ஸ்ரீவைகுண்ட கத்யத்தின்படி அநுஸந்திக்கலாம் என்று நம் வேதாந்தாசாரியர் ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையில் அருளிச் செய்தார். இப்படியே நம் கோயில் மணவாள மாமுனிகளும் அநுஷ்டித்தார் என்று தினசர்யையில் சொல்லப் பட்டது.

*அத ப்ருத்யாநநுஜ்ஞாப்ய க்ருத்வா*
*சேதச்சுபாச்ரயே।*
*சயநீயம் பரிஷ்க்ருத்ய சயானம் ஸம்ஸ்மராமி*
*தம்॥*

என்று நம் முடும்பை நம்பி திருவம்சத்தார் எறும்பியப்பா தேவராஜகுருவின் வார்த்தை. ஆக, ஸம்ப்ரதாயத்தில் வ்யாக்யான ரஹஸ்யங்களாலும், அதன்படி அனுஷ்டானங்களாலும் ஆசார்ய அநுக்ரஹத்தாலும், எம்பெருமானுடைய அநுக்ரஹத்தாலும் இந்த யோகஜ்ஞானம் ஏற்படும் என்பது ஸித்தம். யோகஸ்ய ஜ்ஞானம்– யோகஜ்ஞானம் என்று பராசர பட்டர் பாஷ்யம்.

*யோகஜ்ஞானம் ததா ஸாங்க்யம்*
*வித்யாச்சில்பாநி கர்ம ச।*
*வேதாச்சாஸ்த்ராணி விஜ்ஞானம் ஏதத் ஸர்வ*
*ஜநார்த்தநாத்॥*

என்பது வேத வியாஸர் வார்த்தை.

*முற்றும்....*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

**ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :**

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநுஜரால் பிரதிஷ்டை செய்யப் பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சி அளிக்கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக்கோயி லில் இடம் பெற்றுள்ளனர்.

**ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :**

இக்கோயில் திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவிலும், பேருந்து நிலையத்தில் இருந்து இரண்டு கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. இக்கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கையில் இருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததன் நினைவாக எழுப்பப்பட்டதாகும்.

**ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :**

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷி யால் இங்குள்ள சிவலிங்கம் தோற்று விக்கப்பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப் படுகிறது.

**அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :**

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலை வில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக் கோயிலில் எழுந்தருளியுள்ளார்.



# ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன்...

– திரு.துளசி கிருஷ்ணா, சென்னை.

### ஆமலகி ஏகாதசி

பங்குனி மாத சுக்ல பக்ஷ ஏகாதசியான ஆமலகி ஏகாதசியின் மகிமையைக் கிருஷ்ணர் தருமருக்கு கூறலுற்றார். தர்மநந்தனா! முன்னொருகால் வசிஷ்டர் மாந்தாதாவுக்கு கூறிய இந்த ஏகாதசியின் பெருமையை நான் உனக்குக் கூறுகிறேன். இது விஷ்ணு லோகத்தைக் கொடுக்கும். நெல்லி மரத்தினடி யில் இருந்து கண் விழித்தல் வேண்டும். இவ்வாறு ஜாகரண விரதம் இருப்பவர்கள் ஆயிரம் பசுக்களை தானம் செய்த பலனை அடைவர்.

மாந்தாதா வசிஷ்டரிடம், “முனிபுங்கவா! நெல்லி மரம் எப்பொழுது உண்டாயிற்று. எதனால் அது புனிதமானதாயிற்று. அது எவ்வாறு ஆபத்தைப் போக்கும் தன்மையைப் பெற்றது? ஏகாதசியில் கண் விழித்தலால் என்ன பயன்? கூறுவீராக எனக் கேட்டார்.

அதற்கு வசிஷ்டர் கூறியதைக் கூறுகின் றேன் கேள். மகாபிரளயம் ஏற்பட்டது. உலகங் கள் யாவும் அழிந்தன. எங்கும் ஒரே ஜலமயம் எல்லா ஜீவராசிகளும் பகவான் இடத்தில் லயமாயின. யோக நித்திரை பயிலும் பகவானு டைய திருமுகத்திலிருந்து ஒரு தீர்த்த பிந்து விழுந்தது (நீர்த்துளி). அதுவே நெல்லி மரமாயிற்று. அது பகவானிட மிருந்து தோன்றியபடியால் மிகப் புனிதமானது. அது சாக உபவாசமாகப் பெருகி வளர்ந்தது. மரங்களுக்கு எல்லாம் முதலாக நின்று ஆதிவிருக்ஷம் எனப் பெயர் பெற்றது. இதன் பிறகே பிரும்ம சிருஷ்டி ஏற்பட்டது. தேவர், தானவர், யக்ஷர், கந்தர்வர், ராக்ஷஸர், நரகாதிகள் இந்த மரத்தை அடைந்தனர். இம்மரத்தைப் பார்த்து வியந்தனர். இம்மாதிரி ஒன்றை இதற்கு முன்பு பார்க்கவில்லையே. இது என்ன? என்று சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

அச்சமயத்தில் அசரீரி வாக்கு ஒன்று உதித்தது. தேவதான கந்தர்வாதியரே! இந்த நெல்லி மரம் பகவத் சம்பந்தம் பெற்றது. அதனால் இது பரம புனிதமானது. இதை மனத்தால் நினைக்க கோதான பலன் பெறுவர். தொட்டால் இரு மடங்கு பலன் பெறுவர். அணைவதால் மூன்று மடங்கு பலன் பெறுவர். இதனடியில் விஷ்ணுவும், நடுவே ருத்திரனும், நுனியில் பிரம்மாவும், கிளைகளில் முனிவர்களும், இலைகளில், தேவர்களும், புஷ்பங்களில் மருத்துக்கள் எழுவரும், பழங்களில் பிரஜாபதிகள் ஒன்பதின்மரும் இருக்கின்றனர். ஆகையால் இம்மரம் தேவஸ்வரூபம். இதை பூஜை செய்ய வேண்டியது உங்கள் மேலான கடமையாகும். இதைக்கேட்ட ரிஷிகள் நீர் யார்? இதை எமக்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டனர்.

சர்வலோகங்களையும், சர்வபூதங்களையும் படைக் கும் காரணன் நான். எல்லா தேவர்களின் தலைவனான விஷ்ணு நானே என்ற வாக்கினைக் கேட்டார். உடனே தேவாதியர்களும், ரிஷிகளும் பகவானை விருக்ஷ ரூபத்தில் பலவாறு துதித்தனர். சந்தோஷமடைந்த பகவான் உங்களுக்கு என்ன விருப்பம்? கேளுங்கள் என்று கூற, “தேவர் முதலியோர் தனம், தானியச் செல்வங்கள் மனதிற்கு சந்தோஷமும், சாந்தியும், மறுமையில் சொர்க்கமும்,

மோக்ஷமும், குறைந்த முயற்சியில், எளிய செயலால் அரிய பலன் பெறும் உபாயம், நிறைந்த பலன் எங்களுக்குக் கிடைக்க வேண்டும். இவ்வாறு கொடுக்கவல்ல உபாயம் ஒன்றைக் கூற வேண்டும் என்று பிரார்த்தித் தனர்.

மகரிஷிகளே! "பங்குனி மாத சுக்லபக்ஷ ஏகாதசி ஆமலகி எனப்படும். அன்று நீவிர் ஒரு நெல்லி மரத்தையடைந்து, அதன் கீழிருந்து உபவாசம் காத்து, கண் விழித்திருந்து திருமாலை நினைத்து வழிபட்டால் ஸமஸ்த பாபங்களினின்றும் விடுபடுவீர். அச்யுதனை அர்ச்சித்ததனால் அச்யுதமான விஷ்ணு லோகத்தையும் அடைவீர். மீட்சியின்றி வைகுந்த மாநகர் நும்முடைக்கையதேயாம்" என்று கூறிற்று.

அசரீரியான பகவானிடம் முனிவர்கள், "தேவனே! இந்த ஆமலகி ஏகாதசியை அநுட்டிப்பதில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் யாவை? எவ்வகையில் நீராடுதல் இதற்கு உரித்து? ஸ்நான கால ஜபம்தான் என்ன? விரதத்தின் தேவதை யார், பூஜாசல்பம், தானவிசேஷம் இவற்றைத் தெளிவாகக் கூறியருள வேண்டும் என்று விண்ணப்பித்தனர்.

பங்குனி மாத ஆமலகி ஏகாதசி அன்று உஷத் காலத்தில் மிருத்திகா ஸ்நானம் செய்து பிறகு நதி, தடாகங்களில் குடைந்தாடி ஆகமாஷனம் முதலிய ஸ்நான மந்திரங்களைச் சொல்லி நித்யகாமாநுஷ் டானங்களை முடித்து பரசுராம மூர்த்திப் பிரதிமை ஒன்றை கிருகத்தில் ஆராதனம் செய்ய வேண்டும். நெல்லி மரத்தை அடைந்து, பூமியைச் சுத்தம் செய்து மாக்கோலங்களால் அலங்கரித்து, அதன்மீது கும்பத்தை வைத்து, நவரத்னங்களையும் சேர்த்து கும்பரத்னம் சமர்ப்பித்து, சந்தனம் பூசி பரிமளங்கள் சேர்த்து, புஷ்ப மாலை அணிவித்து, தூபதீபம் சமர்ப்பித்து, கும்பத்தின் மேல் மற்றொரு பாத்திரம் வைத்து அதில் பரசுராம பிரதிமையை எழுந்தருளச் செய்ய வேண்டும். பழம் முதலிய உபகாரங்கள் சமர்ப்பிக்க வேண்டும். இரவில் விழித்திருந்து நிருத்த சித வாத்ய உபசாரங்களைச் செய்வித்து புராணங்களைப் படிக்கவும், கேட்கவும் செய்து நாம சங்கீர்த்தனத்துடன் இரவைக் கழிக்க வேண்டும். நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டே நெல்லி மரத்தை 108 அல்லது 208 முறை வலம் வர வேண்டும். பரசுராம பிரதிமைக்கும் மேல் கும்பத்திற்கும் வஸ்திரம், அணிகள் அணிவிக்க வேண்டும். "பரசுராம ஸ்வரூபியான கோவிந்தன், நம்மை காக்க வேண்டும்" எனத் தியானித்து நெல்லி மரத்தைத் தொட்டு பிரதக்ஷிணம் வரவேண்டும். மறுநாள் அதிகாலையில் துவாதசியில் ஸ்நானம் செய்து அந்தணர்களை உண்பித்து பிறகு உணவை உட்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்பவர்கள் அனைத்து புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடிய பலனைப் பெறுவர். எல்லா தானங்கள் செய்த பலனையும் பெறுவர். பல்வேறு யாக பலன்களும் அவரை வந்தடையும் என்று கூறி அசரீரி மறைந்தது. ரிஷிகளும் அநுட்டித்துப் பயன் பெற்றனர். ராஜேந்திரா! நீயும் சர்வ பாபஹரியான "ஆமலகி" விரதத்தை அநுட்டித்து சுகமடைவாயாக என்று கிருஷ்ணர் கூறினார்.

### விஜயா ஏகாதசி

பங்குனி மாத கிருஷ்ண பக்ஷ ஏகாதசி தினத்தின் பெருமையை அடியேனுக்கு சொல்லியருள வேண்டும் என்று தர்மபுத்திரன் கேட்டான். கண்ணன், ஏ தர்ம நந்தனா! நீ கேட்ட இவ்வினாவே முன்பு நாரதனால் நான்முகனிடம் கேட்கப்பட்டது. நான்முகன் நாரதனுக்கு கூறியதை உனக்கு இப்பொழுது கூறுகின்றேன். கேட்பாயாக! என்று கூறி கண்ணன் தொடங்கலுற்றான். பங்குனி மாத கிருஷ்ண பக்ஷ ஏகாதசிக்கு விஜயா என்று பெயர். இது புனிதமானது. எப்பாபத்தையும் போக்க வல்லது. வெற்றியை அளிக்க வல்லது. முன்பு ஒரு திரேதா யுகத்தில் இராமன் பித்ருவாக்ய பரிபாலனத்திற்காக காடு சென்றான். இராவணனால் சீதை அபகரிக்கப்பட்டாள். இராமன் மிக்க துக்கம் அடைந்தான். காட்டில் அலைந்து ஜடாயு சபரி முதலியவர்களுக்கு தரிசனமும், வீடு பேறும் அளித்தான். சுக்ரீவனை நண்பனாக்கிக் கொண்டான். அனுமன் மூலம் சீதை இருக்குமிடத்தை அறிந்து இராவணனைக் கொன்று, சீதையை மீட்டு வர வானரசைன்யங்களுடன் தென் சமுத்திரத்தை அடைந்தான். பெருங்கடலின் கம்பீரத்தையும், எல்லையற்ற பரப்பினையும் கண்டு திகைத்து "லக்ஷ்மணா, இக்கடலை கடப்பது எங்ஙனம்? எந்த புண்ணிய காரியம் இதனை சாதித்துக் கொடுக்கும்" என்று கேட்டான்.

இதனைக் கேட்ட லக்ஷ்மணன் "பிரபோ! தேவரீர் அறியாதது ஒன்றுமில்லை. அடியேனோ அறிவிக்க வல்லன். தேவரீர் உத்திரவிட்டபடியால்

கூறுகின்றேன். இவ்விடத்திலிருந்து ஐந்து கல் தொலைவில் பகதால்ப்யர் என்ற முனிவர் தவமிருக்கின்றார். அவருடன் ஓர் அந்தண சமூகமும் வசித்து வருகிறது. அந்த முனிவரிடம் சென்று கேட்டால் உபாயம் கிடைக்கும் என்று கூறினான். இராமனும் சென்று முனிவரை வணங்கி கடலைக் கடக்க உபாயம் ஒன்று கூறியருள வேணும் என்று வேண்டினான். இராமனுடைய அவதார ரகசியத்தை அறிந்த முனிவர் பெருமான், இராமா! "இன்னும் நான்கு நாட்களில் பங்குனி மாத கிருஷ்ணபக்ஷ ஏகாதசி வருகிறது. இதில் உபவாசம் இருந்தால் உனது நோக்கம் எளிதில் நிறைவேறும். ராக்ஷசர்களை வெல்வாய், சீதையை அடைவாய். பெரும் புகழ் அடைவாய், ஒரு மனப்பட்டு இந்த ஏகாதசியில் உபவாசம் இரு".

முனிவர் இந்த ஏகாதசியின் விதியைக் கூறினார், தசமி தினத்தில் தங்கம், வெள்ளி, தாமிரம் முதலிய உலோகங்கள் ஒன்றினாலோ, அதற்கு இயலாவிடில் மண்ணினாலோ செய்த குடத்தில் தீர்த்தம் நிரப்ப வேண்டும். அதன் கீழ் கோதுமை முதலிய ஏழு வகை தானியங்களை ஒன்றன் மேல் ஒன்றாக பரப்ப வேண்டும். குடத்தின் மீது சந்தனம் பூசி, பூச்சூட்டி, நாராயணனை ஆவாஹனம் செய்து 16 வித உபசாரங்களைச் செய்ய வேண்டும். ஏகாதசி அன்று காலை நன்னீராடி, காலைக்கடன் முடித்து கும்பத்தில் ஆவாஹனம் செய்துள்ள நாராயணனை ஆராதித்து எல்லா உபகாரங்களையும், பக்தியுடன் செய்து கும்பத்தின் எதிரில் அமர்ந்து வேதபாராயணம், ஸ்தோத்ராடனம், ஸத்கதா ச்ரவணம் கேட்கும்படிச் செய்து இரவு கண்விழித்து துவாதசி காலையில் கும்பத்தை எடுத்துக்கொண்டு ஒரு நீர்நிலைக் கரையை அடைந்து, கும்பபூஜனம் செய்து பகவானுடன் கும்பத்தை வேதம் ஓதிய ஒழுக்கத்தில் சிறந்த அந்தணர் ஒருவருக்கு தானம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வாயாக. நீ வெற்றி பெறுவாய் என்று கூறி முடித்தார். இராமனும் அவ்வாறே செய்து வெற்றி பெற்றார்.

இவ்விதம் இருப்பவர்கள் இம்மையில் வெற்றியையும், மறுமையில் வீடுபேற்றையும் பெறுவர். இவ்வரலாற்றினை கேட்போர், படிப்போர் வாஜ, பேய பலன் பெறுவர் என்று கண்ணன் கூறி முடித்தான்.

விரதம் தொடரும்....

## திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்



| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 29-02-2024 | வியாழன் | அங்குரார்ப்பணம் | மூஷிக வாகனத்தில் ஸ்ரீவிநாயகர் |
| 01-03-2024 | வெள்ளி | துவஜாரோஹணம் | ஹம்ஸ வாகனம் |
| 02-03-2024 | சனி | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 03-03-2024 | ஞாயிறு | பூத வாகனம் | சிம்ம வாகனம் |
| 04-03-2024 | திங்கள் | மகர வாகனம் | சேஷ வாகனம் |
| 05-03-2024 | செவ்வாய் | திருச்சி உற்சவம் | அதிகார நந்தி வாகனம் |
| 06-03-2024 | புதன் | வ்யாக்ர வாகனம் | யானை வாகனம் |
| 07-03-2024 | வியாழன் | கல்ப விருக்ஷ வாகனம் | குதிரை வாகனம் |
| 08-03-2024 | வெள்ளி | திருத்தேர் | நந்தி வாகனம் (மகாசிவராத்திரி) |
| 09-03-2024 | சனி | புருஷாமிருக வாகனம் | திருச்சி உற்சவம் (திருக்கல்யாணம்) |
| 10-03-2024 | ஞாயிறு | சூரியப்பிரபை வாகனத்தில் நடராஜ ஸ்வாமி திரிசூல ஸ்நானம். | துவஜாவரோஹணம் இராவணாசுர வாகனம் |



# பிப்ரவரி 2024
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

தொழில் துறையில் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. ஆரோக்ய குறைபாடுகள் நீங்கும். கணவன்–மனைவி, குழந்தைகளுக்கு இருந்த பிரச்சனைகள் நீங்கும். சுபகாரியங்கள் நடக்கும். பணப்புழக்கம் நன்றாக அமையும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நல்ல யோகமான மாதமிது.

**ரிஷபம்**

தொழில் வளர்ச்சி காரணமாக அலைச்சல் இருக்கும். மாதத்தின் பிற்பகுதியில் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. செலவுக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். தாய்–தந்தை ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் மிகுந்த கருத்துடன் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. எச்சரிக்கையுடன் செயல்பட்டு வெற்றி பெறும் மாதமிது.

**மிதுனம்**

வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டு. உஷ்ணத்தால் ஆரோக்யத்தில் சிறு பிரச்சனை உண்டாகும். தொழில் துறையில் அலைச்சல், வளர்ச்சி உண்டு. மனைவியால் தனலாபம் உண்டு. எல்லாவற்றிலும் வெற்றி, தன லாபம் உண்டு. சுபகாரியங்கள் நடக்கும். தாய்–தந்தையரின் ஆரோக்யத்தில் எச்சரிக்கை தேவை. மாணவர்கள் வெளியிடங்களில் உணவு உட்கொள்ளாதீர். நன்மை தரும் மாதமிது.

**கடகம்**

மனைவியின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. கணவன்–மனைவி சிறு கருத்து வேற்றுமைகள் உண்டாகும். தொழில் துறையில் அலைச்சல் மிகும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் உண்டு. இளைய சகோதரனின் ஆரோக்யத்தில் கவனம், புதிய முயற்சிகளில் நிதானம் தேவை. மாணவர்கள் மிகுந்த அக்கறையுடன் படித்தால் நல் மதிப்பெண்கள் பெறலாம். முயற்சி திருவினையாக்கும் மாதம்.

**சிம்மம்**

கடன் வாங்கி சுபச் செலவுகளைச் செய்வீர். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. கோபத்தை தவிர்க்கவும். தாத்தா–பாட்டி மூலம் ஆதாயம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் விரைவில் கிட்டும். குழந்தைகளின் உடல்நிலை சரியாகும். தெய்வ காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். திருஷ்டியால் பிரச்சனைகள் இருந்தாலும் தெய்வ பலத்தினால் முன்னேறும் மாதமிது.

**கன்னி**

பண விஷயத்தில், ஆரோக்யத்தில் எச்சரிக்கை தேவை. கடன் கொடுப்பதும், வாங்குவதும் இந்த மாதம் வேண்டாம். ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை. குழந்தை களின் ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் தீரும். தொழில் துறையில் அலைச்சலும் அதற்குரிய வருமானமும் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவுவர். எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.

**துலாம்**

வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. புதிய முயற்சிகள் வெற்றி தரும். இளைய மூத்த சகோதரர்களுக்கு நன்மையுண்டு. குழந்தைகளின் ஆரோக்யம் மேம்படும். தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். பூர்வீகச் சொத்துக்களில் பிரச்சனைகள் தீரும். பெற்றோரின் ஆதரவு ஆரோக்யம் உண்டு. நல்ல யோகமான மாதமிது.

**விருச்சிகம்**

பெண்களால் தனலாபம் உண்டு. மனைவியின் ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். இளைய சகோதரருக்கு ஆரோக்யக் குறைபாடு ஏற்பட்டுச் சரியாகும். பூர்வீகச் சொத்துக்களைப் பற்றி பேச வேண்டாம். குழந்தைகளின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. கடன் பரிவர்த்தனைகளைத் தவிர்க்கவும். பெரியோர்களின் அனுகூலம் உண்டு. நன்மை தரும் மாதமிது.

**தனசு**

குடும்பத்தில் விரைவில் சுபகாரியங்கள் நடக்கும். ஆரோக்ய குறைபாடுகள் நிவர்த்தியாகும். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். சகல துறைகளிலும் சாதனை செய்து உயர்வு பெறும் மாதமிது.

**மகரம்**

தொழில் அலைச்சல் காரணமாகத் தூக்கமின்மை உண்டாகும். மேலதிகாரிகளின் நட்பு உண்டு. சக ஊழியர்களும் உதவிகள் செய்வார்கள். சுய தொழிலில் நல்ல வளர்ச்சி, முன்னேற்றம், பணப்புழக்கம் உண்டு. தாயின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தந்தையின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். ஏறுமுகமான மாதமிது.


**கும்பம்**

தொழில் அலைச்சலால் தூக்கமின்மை, உடல் வலி உண்டாகும். பேசும்போது கோபத்தைத் தவிர்க்கவும். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் உண்டு. தாய்–தந்தையரின் ஆரோக்யம் நன்கு அமையும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். தைரியமாகக் காரியங்களைச் செய்து வெற்றியும் பெறுவர். சுய முயற்சியின் மூலம் சாதனை செய்யும் மாதமிது.

**மீனம்**

சுபகாரியங்கள் நடக்கும். தாராள பணப்புழக்கம் உண்டு. தொழில் அலைச்சல் காரணமாகவும் தூக்கமின்மை உண்டாகும். உங்கள் ஜாதகத்தில் உள்ள தோஷங்களைப் போக்க பரிகாரம் செய்ய வேண்டிய மாதமிது. எதிர்பாராத தனலாபம் அதற்குரிய செலவு உண்டு. வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. முயற்சிகளில் வெற்றி கிட்டும். குழந்தைக்கேற்ற கல்வி கிட்டும். நல்ல யோகமான மாதமிது.


பல்சுவைப் பகுதி




சித்திரப் பகுதி

படத்தைப் பாருங்கள் !

வண்ணம் தீட்டுங்கள் !!






ஏழு குதிரைகளின் மேல் சவாரி செய்து, தாவரங்களின் உணவு உற்பத்திக்கு உதவி, மனிதர்களுக்கு வைட்டமின் "டி" என்ற தாதுப்பொருளை வரமாக வழங்கி யோக முத்திரையால் நமஸ்காரம் பெறுவார். அவர் யார்?

சூரியன்–ஆதித்யன்




## வார்த்தைகளைச் சரியாக எழுதி ஆத்திசூடியைப் படிப்போமா!

நீராடு சனி, பட ஞயம் உரை, பட இடம் எடேல் வீடு.

சனி நீராடு, ஞயம் பட உரை, இடம்பட வீடு எடேல்.

சரியான பாதையைக் கண்டுபிடி



விளக்குகளை கைகளில் ஏந்தி வரும் இந்த சிறுமிக்கு எண்களை கூட்டினால் 10 வரும் பாதையை வகுத்து காட்டி, வஸந்தபஞ்சமி நாயகி மற்றும் கலையரசியான சரஸ்வதி தேவியை அடைய உதவி புரியுங்கள்



மாநிலத்தைக் கண்டுபிடி

கோனார்க் சூரிய ஆலயம், பூரி ஜெகந்நாத ஆலயம், புவனேஸ்வர் கபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம் அமைந்துள்ள மாநிலம்...

ஒரிசா

வினாடி வினா

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

# ஸப்தகிரி போட்டி எண்-19

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. கால மாற்றத்திற்கு மூல காரணமாகத் திகழ்பவர்....................................................................................
2. திருமலையில் ஒருநாள் பிரம்மோத்ஸவம் நடைபெறும் தினம்.................... ............................................
3. வேதநூல் பிராயம் நூறு என்று பாசுரம் அருளியவர்..... ...........................................................................
4. வசந்த பஞ்சமி அன்று வணங்கப்படுபவர்..............................................................................................
5. பீமனுக்கும் இடும்பிக்கும் பிறந்தவன் ..................................................................................................
6. திருமலையில் ஏதாவது ஒரு பொருளாகப் பிறக்க வேண்டும் என்றவர்.......................................................
7. இராமனை வேங்கட மலைக்கு வரும்படி வேண்டியவர்...........................................................................
8. அம்புப்படுக்கையில் இருந்தபடி உத்தராயண காலம் வரை காத்திருந்தவர்...................................................
9. மதிள்கச்சி ஊரகமே எனப் பாடிய ஆழ்வார்............................................................................................
10. ஸ்ரீராமனை முதன் முதலில் துயில் எழுப்பியவர்....... ............................................................................
11. காஞ்சி உலகளந்த பெருமான் ஆலய விமானத்தின் பெயர் ..........................................................................
12. கொல்லிக்காவலன் எனப் போற்றப்பட்ட ஆழ்வார் ...................................................................................
13. ஆறுமொழிபூதூர்க்களித்த பிரான் யார்...................................................................................................
14. பங்குனி மாதம் வரும் ஏகாதசியின் பெயர்கள்.........................................................................................
15. கவிச்சக்கரவர்த்தி எனப் போற்றப்பட்டவர்................................ ..........................................................

## போட்டிக்கான நிபந்தனைகள்




- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.02.2024.

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

## சக்கரத்தை சுற்றுங்கள்!
## அதே வண்ணக்கட்டத்தில் எழுதுங்கள்!!




இரத சப்தமியை முன்னிட்டு...






### விடைகள்

1) இரத சப்தமி பண்டிகை, 2) சூரிய பகவான், 3) இரத சப்தமி, 4) சூரியப்பிரபை வாகனம், 5) திருமலையப்ப ஸ்வாமி, 6) சூரிய பகவான், 7) எருக்கை இலை, 8) சூரிய ஒளி.

கீழே உள்ள உயிரினங்கள் தங்கள் தங்கள் இறை வடிவங்களை அடைவதற்கு தகுந்த வழியைத் தேர்ந்தெடுத்து இணைக்கவும். அ,ஆ,இ என்ற எழுத்துக்களை 1,2,3 என்ற எண்களுடன் இணைக்கவும்.




### விடைகள்

அ-1, ஆ-3, இ-2

## காணும் விதம் இருவகை






# நமதென்பது ஒன்றுமில்லை

சித்திரக் கதை

கதை மூலம் :டாக்டர் கே.ரவிச்சந்திரன்
சித்திரம் :திரு. து.சிவாஜி




ஆமாம் உன் முகத்தில் வைர மூக்குத்தி எங்கே?
ஆ... வைர மூக்குத்தியா... உள்ளதே...
ஒரு முறை உன் வைர மூக்குத்தியைக் காண்பிப்பாயா? தற்பொழுது அவசரமில்லை. உணவிற்குப் பின்னரே காண்பி.
பரந்தாமா! பாண்டு ரங்கா! என்னை மன்னியுங்கள்! வேறு வழியில்லாமல் இந்த நஞ்சை அருந்துகிறேன்.
சரஸ்வதிபாயி நஞ்சுக்குவளையைத் தன் வாயருகே கொண்டு செல்ல, வைர மூக்குத்தி அதில் தென்பட்டது. ஆச்சரியமுற்ற அவள் இறைவனின் கருணையை எண்ணி பேரானந்தம் கொண்டாள்.
இது என்ன மாயம்? பூட்டு போட்டபடியே உள்ளது. ஆனால் வைர மூக்குத்தியை மட்டும் காணவில்லையே...
நான் அங்காடியில் பாதுகாப்பாக வைத்திருந்த வைர மூக்குத்தி மட்டும் மாயமாகி உள்ளதே. அம்முதியவர் வந்து தன்னுடைய பொருளைக் கேட்டால் நான் என்ன பதில் கூறுவது?
இந்த வைர மூக்குத்தியை அவருக்கு கொடுங்கள்...
இது உன் தாய் வீட்டினர் உனக்கு கொடுத்தது அல்லவா. நான் எடுத்துக் கொள்ளக் கூடாது...
அதனை இன்று ஒரு வயதான பிராமணருக்கு தானமாக அளித்து விட்டேன். இம்மூக்குத்தி அப்பரந்தாமன் தனக்கு அளித்தது.
நடந்தனவற்றை கணவரிடம் கூறினாள்.
நான் பாவி... இச்செல்வம் யாவும் என்னால் வந்தவை என இந்நாள் வரை எண்ணி இருந்தேன். இவையாவும் இறையருள் என அறியாமல் சக மனிதனின் இன்பதுன்பங்களில் பங்கு கொள்ளாமல் இறைவனை விட்டு விலகி இருந்தேனே...
இறைவனின் மகிமை அவனுள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. தன் செல்வங்கள் அனைத்தையும் தானம் அளித்து விட்டு உடுத்தியிருந்த ஆடையோடு பண்டரீபுரம் சென்று உஞ்சவிருத்தி எடுத்து உணவை உட்கொண்டு ரங்கனின் சேவையிலேயே சதா காலத்தை கழித்து வந்தார்.
சுபம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2.தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐தமிழ் ☐கன்னடம்
☐ இந்தி ☐ஆங்கிலம் ☐சமஸ்க்ருதம்

3.வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ரூ.2,400/-(12 வருடங்கள்)

4.சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5.செலுத்திய தொகை :

6.செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



19-12-2023 அன்று திருவேங்கடமுடையானை தரிசிக்க வருகை புரிந்த மேதகு ஆ.மா.ஆளுநர் உயர்திரு. எஸ். அப்துல் நஜீர் அவர்களை வரவேற்று ஸ்வாமி பிரசாதங் களை வழங்கும் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்களுடன் தி.தி. தேவஸ்தான செயலாட்சித்தலைவர்



19-12-2023 அன்று திருமலை ஆலயத்தில் நடைபெற்ற கோயில் ஆழ்வார் திருமஞ்சனத்தில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்களுடன் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்



26-12-2023 அன்று நடைபெற்ற தி.தி.தே. பொறுப் பாண்மைக் குழு கூட்டத்தில் "மனித குல வழிகாட்டி-பகவத் கீதை" எனும் புத்தகத்தை வெளியிட்ட தி.தி.தே. பொறுப் பாண்மைக் குழுத் தலைவர்,தி.தி.தே. செயலாட்சித்தலைவர், தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர்கள் மற்றும் பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள்.



18-12-2023 அன்று தி.தி.தே. ஸ்விம்ஸ் மருத்துவமனை யில் புற்றுநோய் சிறப்பு அலுவலர் திரு. எம். ஜெயசந்திர ரெட்டி அவர்கள் "இந்தியாவின் இளம் அறுவைச் சிகிச்சை நிபுணர்" என்ற விருதினை பெற்றார். இதனை முன்னிட்டு அவரை பாராட்டிய தி.தி.தே. செயலாட்சித்தலைவர், தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர்(எச்.&இ.)



தி.தி.தே. சார்பில் "கீதா ஜெயந்தி"யை முன்னிட்டு "பகவத் கீதை" போட்டிகள் நடைபெற்றன. 23-12-2023 அன்று அப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கும் தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் (எச்.&இ.) திருமதி எஸ். பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள்




தி.தி.தே. ஸ்ரீவேங்கடேஸ்வரா ஆயுர்வேதக்கல்லூரி, ஆயுஸ் அமைச்சகத் துறை சார்பில் நடைபெற்ற மருத்துவ அதிகாரிக ளுக்கான சி.எம்.இ. பயிற்சி நிகழ்ச்சியில் பங்கு கொண்டு உரையாற்றும் தி.தி.தே. இணைச்செயலாட்சித் தலைவர் (எச்.&இ.) திருமதி எஸ். பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள்

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-01-2024 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

